உ

ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை

ஓம் சிவாய நம :

சிவன் மனம் கவர்ந்த சிவனேசச் செல்வர்கள்

– 63 நாயன்மார்கள் 9 தொகையடியார்கள்

ஸ்ரீ காசி விஸ்வநாதர் **ஸ்ரீ காசி விசாலாட்சி**



ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரத்தின் சார்பில் நடைபெறும்

ஸ்ரீ காசி விசுவநாதர் மூன்று கால பூசை

200 ஆண்டுகள் (1813-2013) நிறைவு பெறும் விழாவை முன்னிட்டு

மதுரை டால்ஃபின் பள்ளியின் இலவச சிறப்பு வெளியீடு **30-12-2012**



இறைப் பணியில்...

தேவகோட்டை டால்ஃபின் AR. ராமனாதன்

(அரு.லெ. வீடு)

தாளாளர், டால்ஃபின் பள்ளி, மதுரை - 10

Phone : 93451 69639, 99439 25200, 0452 - 2387787

Email : dolphinschool2009@yahoo.in Web : www.devakottaidolphinramanathan.com

ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை
ஓம் சிவாய நம :

சிவன் மனம் கவர்ந்த சிவனேசச் செல்வர்கள்

– 63 நாயன்மார்கள் 9 தொகையடியார்கள்



தென்னாடுடைய சிவனே போற்றி !
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி !!

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரப் பெருமான்
தருமிக்குப் பொற்கிழி வழங்கி அருளும் அற்புதம் !




இறைப் பணியில்...
தேவகோட்டை டால்ஃபின் AR. ராமனாதன்
(அரு.லெ. வீடு)
தாளாளர், டால்ஃபின் பள்ளி, மதுரை - 10
Phone : 93451 69639, 99439 25200, 0452 - 2387787
Email : dolphinschool2009@yahoo.in Web : www.devakottaidolphinramanathan.com

உ
ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை
ஓம் சிவாய நம :

சிவன் மனம் கவர்ந்த சிவனேசச் செல்வர்கள்

– 63 நாயன்மார்கள் 9 தொகையடியார்கள்

ஸ்ரீ காசி விஸ்வநாதர் **ஸ்ரீ காசி விசாலாட்சி**





ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச் சத்திரத்தின் சார்பில் நடைபெறும்
ஸ்ரீ காசி விசுவநாதர் மூன்று கால பூசை
200 ஆண்டுகள் (1813-2013) நிறைவு பெறும் விழாவை முன்னிட்டு
மதுரை டால்ஃபின் பள்ளியின் இலவச சிறப்பு வெளியீடு **30-12-2012**



இறைப் பணியில்...
தேவகோட்டை டால்ஃபின் AR. ராமநாதன்
(அரு.லெ. வீடு)
தாளாளர், டால்ஃபின் பள்ளி, மதுரை – 10
Phone : 93451 69639, 99439 25200, 0452 - 2387787
Email : dolphinschool2009@yahoo.in Web : www.devakottaidolphinramanathan.com

Dolphin Public School

RM. விசாலாட்சி ஆச்சி, எனது ஆயா வீட்டு பாட்டையாவும், மாயவரம் அபயாம்பிகை கோவில் திருப்பணி செய்தவருமான, தேவகோட்டை பெ.வீட்டைச் சேர்ந்த வீரப்ப சுவாமிகள் ஆசியாலும், எனது தகப்பனார் தெய்வத்திரு. **AR.RM.AR. அருணாச்சலம் செட்டியார்** மற்றும் என்னை எந்நாளும் காத்து நிற்கும் தெய்வமான எனது பெரிய தாயார் தேவகோட்டை தெய்வத்திரு. **AR. சௌந்தரம் ஆச்சி** ஆசியாலும், எனது பாசத்திற்குரிய தாயார் திருமதி. **AR. மீனாட்சி ஆச்சி** அவர்களின் ஆசியாலும், சிவகங்கை மாவட்டம், காரைக்குடி நகரில், கம்பன் மணிமண்டபத்தில் 30-12-2012 ஞாயிற்றுக்கிழமை அன்று, ஸ்ரீ காசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திர மேலாண்மைக்கழகம் சார்பில் நடைபெறுகின்ற ஸ்ரீ காசி விஸ்வநாதர் வழிபாடு 200 ஆண்டுகள் **(1813 - 2013)** நிறைவு விழா நன்னாளில், "சிவன் மனம்கவர்ந்த சிவனேசச் செல்வர்கள் - 63 நாயன்மார்கள் 9 தொகையடியார்கள்" என்ற தலைப்பில் வண்ணப் படங்களுடன் கூடிய, சிவனேசச் செல்வர்களின் வாழ்க்கை வரலாற்றைத் தொகுத்து, இலவச நூலாக வெளியிட வாய்ப்பளித்த சிவபிரானை எண்ணுங்கால் உள்ளம் பரவசம் அடைகிறது. இந்த நல்ல நாளில் இந்த இனிய நூலை வெளியிட அனுமதி அளித்த ஸ்ரீகாசி நாட்டுக்கோட்டை நகரச்சத்திர மேலாண்மைக் கழகத்தின் 200வது ஆண்டு விழாக் குழுவினருக்கும், நாட்டுக்கோட்டை நகரத்தார் அனைவருக்கும் எனது சிரம் தாழ்ந்த நன்றிகளைக் காணிக்கையாக்குகின்றேன்.

ஆண்டவன், தன் பெருமையைப் பறைசாற்றுவதை விட, தன்னை அன்றாடம் தொழுது வணங்கி, பரவிப் பாடி பரவசம் அடைந்த அடியார்களின் புகழைப் போற்றுவதையே பெரிதும் விரும்புவார் என்பது நாம் அறிந்த ஒன்று.

சென்ற ஆண்டு 08-01-2012 அன்று ஆருத்ரா தரிசனத்தன்று "சிவன் மனதில் இடம் பிடித்த செல்வர்கள் -63 நாயன்மார்கள், 9 தொகையடியார்கள்" என்ற நூலை

வெளியிடும் வாய்ப்பை இறைவன் எனக்கு அளித்தான். அதே போல இந்த ஆண்டும் கோவை, பேரூர் மணிவாசகர் அருட்பணி மன்றம் மற்றும் பவானி, சிவனடியார் திருக்கூட்டம் அறக்கட்டளை "இறைவன் திருவருளே சிந்தித்த இன்றமிழ்த் தொண்டர்கள் வரலாறு" எனும் தலைப்பில் 16-05-2010 அன்று வெளியிட்ட அற்புதமான நூல் இறைவன் திருவருளால் எனக்கு கிட்டியது. எனக்கு அந்தச் சிவனடியார்கள் அளித்த நூலை மீண்டும் தொகுத்து ஓர் நூலாக வெளியிட வேண்டும் என்ற எண்ணம் இறைவன் திருவருளால் ஏற்பட்டது. உடனே நான் 20-11-2012 அன்று அந்த அற்புத நூலின் பதிப்புரிமையை வைத்திருந்த, கோவை மணிவாசகர் அருட்பணி மன்றத்திற்கு, கடிதம் ஒன்றை எழுதி, நூலை எங்கள் டால்ஃபின் பள்ளியின் சார்பாக இலவச வெளியீடாக வெளியிட ஒரு வாய்ப்புத் தருமாறு அன்புக் கோரிக்கை வைத்தேன். சிவனருளே சிந்திக்கும் அந்த சீர்மிகு அடியார்கள், கோவை-பேரூர் மணிவாசகர் மன்றத்தின் தலைவர் முனைவர் **ந.இரா.சென்னியப்பன்,** செயலர் ப. குமாரலிங்கம், பொருளாளர் முனைவர் அ.மா. இலட்சுமிபதிராசு மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் எனது கோரிக்கைக்கு, அன்புடன் செவி சாய்த்து, எனது சிவத்தொண்டு தொடர வாழ்த்தி, 27.11.2012 நாளிட்ட கடிதம் மூலம் அனுமதி அளித்தார்கள். அவர்களுக்கும், அவர்கள் இதயத்துள்ளே வாழ்ந்து கொண்டிருக்கும், சிவபெருமானுக்கும் கோடானு கோடி நன்றிகள் !!!

மேலும், வாரணாசி, காசியில் உள்ள ஸ்ரீகாசி விஸ்வநாதர், ஸ்ரீகாசி விசாலாட்சி, ஸ்ரீகாசி அன்னபூரணி மற்றும் ஸ்ரீகாசி காலபைரவர் திருவருளால், சிறப்புடன் ஸ்ரீகாசி விஸ்வநாதருக்கு தினசரி நாதஸ்வர இசை முழங்க, சம்போ பூஜையுடன், ஏராளமான பொருட்செலவில் தொடர்ந்து 200 ஆண்டுகளாக (1813-2013) மூன்று கால பூஜை அபிஷேகங்களை நடத்தி வரும் புண்ணியம் மிகுந்த நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தில், தேவகோட்டை நகரில் பிறந்தமைக்காகவும், காசி நாட்டுக்கோட்டை நகரத்தார்

சத்திரத்தின் 200வது ஆண்டு விழா சிவகங்கை மாவட்டம், காரைக்குடி நகரில் 30-12-2012 அன்று சீரும் சிறப்புடன் கொண்டாடப்படும் வேளையில் இந்த தெய்வீக நூலை வெளியிட வைத்தமைக்காகவும், சிவபெருமானின் எல்லையில்லாக் கருணையை எண்ணுங்கால் நெஞ்சம் நெகிழ்கின்றது.

"இறைவன் திருவருளே சிந்தித்த இன்றமிழ்த் தொண்டர் வரலாறு என்ற நூல் "சிவன் மனம் கவர்ந்த சிவனேசச் செல்வர்கள்'' என்ற தலைப்பில் நாயன்மார்கள், தொகையடியார்கள், சேக்கிழார் பெருமான் ஆகியோரது வரலாறு மற்றும் வண்ணப்படங்களுடனும், எனது தொகுப்புகளில் இருந்து சேகரித்த, சிவபெருமான் தன் தேவியுடன் ஆசியளிக்கும் வண்ணப் படங்கள் மற்றும் சில படங்களுடன் இணைந்து, உங்கள் கைகளில் இப்போது தவழ்ந்து கொண்டிருக்கிறது. என்னைப் போலவே, நீங்களும் இந்த இலவச வெளியீட்டு நூலைப் படித்துப் பார்த்து, சிவனருளைப் பெற்று சீர்பெற வாழ்வீர்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை.

சிவனருளே சிந்திக்கும் சீர்மிகு அடியார்கள் அனைவரும் இந்த எளியவனின் நூலைப் படித்து பயன்பெற வேண்டும் என்று எல்லாம் வல்ல ஸ்ரீகாசி விஸ்வநாதர், ஸ்ரீகாசி விசாலாட்சி, ஸ்ரீகாசி கால பைரவர், ஸ்ரீகாசி அன்னபூரணி திருவடிகளைப் போற்றிப் பிரார்த்திக்கின்றேன்.

திருச்சிற்றம்பலம்



இறைப் பணியில்...
தேவகோட்டை டால்ஃபின் AR. ராமனாதன்
(அரு.லெ. வீடு)
தாளாளர், டால்ஃபின் பள்ளி, மதுரை - 10
Phone : 93451 69639, 99439 25200, 0452 - 2387787
Email : dolphinschool2009@yahoo.in Web : www.devakottaidolphinramanathan.com

இந்நூல் கோவை - பேரூர் மணிவாசகர் அருட்பணி மன்றத்திற்கு உரிமை உடையது. அனுமதி பெற்று, அச்சிட்டு இலவசமாக வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம். மணிவாசகர் அருட்பணி மன்றத்திற்கு நன்றி!!!

30-12-2012 **டால்ஃபின் பள்ளி மதுரை**

உ
ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை
ஓம் சிவாய நம :

நாட்டுக்கோட்டை நகரத்தார் சிறப்பு!

- டால்ஃபின் AR. ராமனாதன்

செட்டிநாட்டுச் செம்மல்கள் வாழ்கின்ற புண்ணிய பூமியில்
நாட்டுக்கோட்டை நகரத்தார் புகழ்கூறும் – நல்ல
பாட்டு ஒன்று எழுத வேண்டி நான் பிறந்த தேவ
கோட்டை நகரச் சிவன் மீனாட்சி ஆசி வேண்டி
ஏட்டில் எழுதுகின்றேன் கேளுங்கள் உலகத்தீரே !
கோட்டைகள் கட்டி ஆளுகின்ற நகரத்தார்
தொட்டதெல்லாம் பொன்னாக்கும் குணம் படைத்தார்...
ஈட்டிய பொருளோ., ஏராளம் கோவிலுக்குக்
கொட்டிக் கொடுத்த பொருளோ தாராளம்.,
நாட்டமுடன் சைவமும் கல்வியும் ஓங்கிடவே.....
ஈட்டி வைத்த பொருளெல்லாம் இறைவனுக்கும், தமிழுக்குமே
கட்டிய வேட்டியோ நான்கு முழம் கட்டில் மெத்தை விரும்பார்..
வட்டிலி(யி)ல் உண்பார்., அசலைத் தொடார்!
திட்டங்கள் தீட்டுவார் ஏழைகள்
வாட்டம் போக்கவே., தர்மங்கள் செய்வார்
நாட்டில் இருப்பதோ ஒன்றேகால் லட்சம்.,
ஈட்டித் தருவதோ நாட்டு வருவாயில் 6 சதவீதம் !
கோட்டை போல் சத்திரங்கள் தலந்தோறும் அமைப்பார்.,
போட்டி போட்டுத் தமிழ் வளர்ப்பார்., சைவம் வளர்ப்பார்.,
கேட்டவுடன் தகுதியானவர்க்கு உதவி செய்வார்.,
தட்டாமல் ஏழைத் திருமணங்கள் நடந்தேற
கட்டாயம் உதவி செய்வார் பலரது கண்ணீர் துடைப்பார்.,

நாட்டில் கல்வி வளம் பெருக., கலைவளம் பெருக.,
கூட்டங்கள் கூட்டி ஒன்றிணைந்து ஏழைக்கு
எட்டாத கல்வி பெறக் கல்விச்சாலைகள் அமைத்தாரே....
சிட்டுப் போல வாழும் ஆச்சிமார்கள் சீருடனே
பட்டுச் சேலை கட்டி நடக்கும் நடையழகு......
எட்டுக் கண்ணும் விட்டெறிக்கும், ஏற்றமுடை
செட்டியார் கொண்டுவித்த காசைக் கொண்டு
செட்டாக பொருள் சேர்த்து வீடு சமைப்பார் !
செட்டிநாட்டு ஆச்சிமார் சமையலுக்கு ஈடாய்
பட்டணம் கண்டதுண்டோ! பாரெல்லாம் பார்த்ததுண்டோ !!
“கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே.,
சுட்டாலும் சங்கு வெண்மை தரும்” எனும் சொற்படியே கஷ்டப்
பட்டாலும் பிறர் மனை ஏறார்! துன்பம்
பட்டதெல்லாம் மறந்து சிவன் புகழ் பேசி
விட்டதெல்லாம் பிடிப்பார்., வீறு நடை போடுவார்.,
பட்டென்று உண்மைகள் பேசிப் பார்புகழ வாழ்ந்திடுவார்.,
கெட்டவர் பக்கம் திரும்பிப் பாரார்., தீதேதும் செய்யார்.,
சிட்டுக்குருவி, சிற்றெறும்பு போல் பொருள் சேர்க்கும் நகரத்தார்
காட்டிய வழியில் உழைத்தால் வீடு உயரும் ! நாடு உயரும் !!
வட்டங்கள் சதுரங்கள் எதிலும் அடங்காது
செட்டிநாட்டு நகரத்தார் செய்த திருப்பணிகள் !
கேட்டுப் பிறப்பேன் ஈசனிடத்தில் இன்னும் ஒரு பிறவி இருந்தால்
நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தில் பிறந்து
விட்டுப்போன ஆன்மீகப்பணி, தமிழ்ப்பணி தொடர...

- டால்ஃபின் AR. ராமனாதன்
டால்ஃபின் பள்ளி மதுரை

உ

ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை

ஓம் சிவாய நம :

மதுரை டால்ஃபின் பள்ளியின் சார்பில் வெளியிடப்பட்ட இலவச ஆன்மீக நூல்களில் சில...



































உ
ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை
ஓம் சிவாய நம :

மதுரை டால்ஃபின் பள்ளியின் சார்பில் வெளியிடப்பட்ட இலவச ஆன்மீக நூல்களில் சில...
























உ
ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை
ஓம் சிவாய நம :

மதுரை டால்ஃபின் பள்ளியின் சார்பில் வெளியிடப்பட்ட இலவச ஆன்மீக நூல்களில் சில...





















உ
ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை
ஓம் சிவாய நம :



அருள்மிகு ஸ்ரீ காளத்தீஸ்வரர் அருள்மிகு ஸ்ரீ ஞானப்பிரசுனாம்பிகை அம்மன்
காளஹஸ்தி

உ
ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை
ஓம் சிவாய நம :



உற்சவமூர்த்தி ஸ்ரீ அண்ணாமலையார் ஸ்ரீ உண்ணாமுலையம்மை

திருவண்ணாமலை

Dolphin Public School

உ
ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை
ஓம் சிவாய நம :

12 ஜோதிர்லிங்கம் தரிசனம் பாபவிமோசனம்






இறைப் பணியில்...
தேவகோட்டை டால்ஃபின் AR. ராமனாதன்
(அரு.லெ. வீடு)
தாளாளர், டால்ஃபின் பள்ளி, மதுரை - 10
Phone : 93451 69639, 99439 25200, 0452 - 2387787
Email : dolphinschool2009@yahoo.in Web : www.devakottaidolphinramanathan.com

உ
ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை
ஓம் சிவாய நம :

சிவன் மனம் கவர்ந்த சிவனேசச் செல்வர்கள்

– 63 நாயன்மார்கள் 9 தொகையடியார்கள்



காசி விசுவநாதர்

காசி வாரணாசி
கங்கையணி செஞ்சடை
மங்கைஉமை பங்குடைச்

காசியில் விசுவநாதர்

செங்கமலப் பாதமே
சிந்தனைசெய் நெஞ்சமே
செல்வங்கள் வந்து சேரும்
காசியில் கருணை பொங்கும்
கங்கையாய் நின்றாய் போற்றி
ஈசனாய் உலகமெல்லாம்
இயக்கிடும் அருளே போற்றி
பாசமும் பற்றும் விட்டோர்
பற்றிடும் பரனே போற்றி
தேசுடை விசுவ நாத
திருவடி போற்றி போற்றி!

காசி விசாலாட்சி

தனம்தரும் கல்வி தரும்
ஒரு நாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வ வடிவும்
தரும்நெஞ்சில் வஞ்சமில்லா இனம்தரும்
நல்லன வெல்லாம் தருமன்பர்
என்பவர்க்கே கனம்தரும் பூங்குழலாள்
அபிராமி கடைக்கண்களே!

வெளிநின்ற நின்திரு மேனியைப்
பார்த்தென் விழியும் நெஞ்சும்
ஒளிநின்ற வெள்ளம் கரைகண்டதில்லை
கருத்தினுள்ளே தெளிகின்ற ஞானம்
திகழ்கின்ற தென்ன திருவுளமோ
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும்
மேவி உறைபவளே.



கங்கைக்கு நிகரான நதியும் இல்லை – காசிக்கு நிகரான பதியும் இல்லை!

உ
ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை
ஓம் சிவாய நம :

சிவன் மனம் கவர்ந்த சிவனேசச் செல்வர்கள்

– 63 நாயன்மார்கள் 9 தொகையடியார்கள்



ஸ்ரீ காசி அன்னபூரணி

காசி வாரணாசி

பொங்கிவரும் கங்கையிலே அன்னபூரணி
பரிபூரணமாய் ஆட்சி செய்வாள் ஆதிகாரணி
விசாலமான மேக மெல்லாம் விசாலாட்சி
அங்கு வினை தீர்க்கும் விஸ்வநாதனின் அருளாட்சி
அன்னபூரணி நாமம் சொன்னால் அன்னம் கிடைக்குமே
அன்னை அவள் பாதம் கண்டால் சொர்ணம் கிடைக்குமே
எண்ணம் போல் சௌபாக்கியம் வந்து சேருமே
திசைஎட்டும் தாயிருந்தால் ஜென்மம் தேறுமே

பைரவ காயத்ரீ

"ஓம் ஸ்வானத்வாஜாய வித்மஹே
ஸுலஹஸ்தாய தீமஹி
தந்நோ பைரவ: ப்ரசோதயாத்
ஓம் தீக்ஷ்ணதம்ஷ்ட்ராய வித்மஹே
க்ஷேத்ரபாலய தீமஹி
தந்நோ பைரவ: ப்ரசோதயாத்



மூலமந்திரம்

"ஓம் ஹ்ரீம் வம் வடுகாய ஆபதுத்தாரணாய
குரு குரு வடுகாய ஹ்ரீம்"
ஓம் ஹ்ராம், ஹ்ரீம் : ஹ்ரூம் : ஹ்ரைம்
ஹரௌம், க்ஷம், க்ஷேத்ரபாலாய நமஹ

ஸ்ரீ காசி காலபைரவர்

பைரவ த்யான மந்திரம்

"ஓம் ரக்த ஜ்வால ஜடாதரம் சசிதரம்
ரக்தாங்க தேஜோ மயம்
ஹஸ்தே சூல கபால பாச டமரும்
லோகஸ்ய ரக்ஷாகரம்
நிர்வாணம் ஸுன வாஹனம்
த்ரிநயஞ்ச ஆனந்த கோலாஹலம்
வந்தே ஸர்வ பிசாசநாத வடுகம்
க்ஷேத்ரஸ்ய பாலம் சிவம்!"



கங்கைக்கு நிகரான நதியும் இல்லை – காசிக்கு நிகரான பதியும் இல்லை!

உ
ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை
ஓம் சிவாய நம :

நெஞ்சம் நெகிழ வைக்கும் பஞ்சபூதத் தலங்கள்





சமயக்குரவர்கள் நால்வர்



திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் சுந்தரர் மாணிக்கவாசகர்

உ
ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை
ஓம் சிவாய நம :

உ
ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை
ஓம் சிவாய நம :

உ
ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை
ஓம் சிவாய நம :

உ
ஸ்ரீ மந்திர மூர்த்தி விநாயகர் துணை
ஓம் சிவாய நம :

திருச்சிற்றம்பலம்



தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்

குருபூசை : சித்திரை முதல்நாள்




திருநீல கண்டத்துக் குயவனார்க்கு அடியேன்

குருபூசை : தை-விசாகம்; முத்தித்தலம் : தில்லை



இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்

குருபூசை : மார்கழி – உத்திரம்; முத்தித்தலம் : திருச்சாய்க்காடு



இளையான்தன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்

குருபூசை : ஆவணி – மகம்; முத்தித்தலம் : இளையான்குடி



வெல்லுமா மிகவல்ல மெய்ப் பொருளுக்கு அடியேன்

குருபூசை : கார்த்திகை – உத்திரம்; முத்தித்தலம் : திருக்கோவிலூர்



விரிபொழில்சூழ் குன்றையார் விறன் மிண்டற்கு அடியேன்

குருபூசை : சித்திரை – திருவாதிரை; முத்தித் தலம் : திருவாரூர்



அல்லி மென் முல்லை அம்தார் அமர் நீதிக்கு அடியேன்

குருபூசை : ஆனி – பூரம்; முத்தித்தலம் : நல்லூர்



இலை மலிந்த வேல் நம்பி எறிபத்தர்க்கு அடியேன்

குருபூசை : மாசி – அஸ்தம்; முத்தித்தலம் : கருவூர் (கரூர்)




ஏனாதி நாதன் தன் அடியார்க்கும் அடியேன்

குருபூசை : புரட்டாசி – உத்திராடம்; முத்தித்தலம் : எயினனூர்



கலை மலிந்த சீர் நம்பி கண்ணப்பர்க்கு அடியேன்

குருபூசை : தை – மிருகசீரிடம்; முத்தித்தலம் : திருக்காளத்தி



கடவூரில் கலையன் தன் அடியார்க்கும் அடியேன்

குருபூசை : ஆவணி – மூலம்; முத்தித்தலம் : திருக்கடவூர்



மலை மலிந்த தோள் வள்ளல் மானக்கஞ்சாறன்

குருபூசை : மார்கழி – சுவாதி; முத்தித்தலம் : ஆனந்த தாண்டவபுரம்



எஞ்சாத வாள் தாயன் அடியார்க்கும் அடியேன்

குருபூசை : தை – திருவாதிரை; முத்தித்தலம் : திருத்தண்டலைச்சேரி



அலை மலிந்த புனல் மங்கை ஆனாயர்க்கு அடியேன்

குருபூசை : கார்த்திகை – அஸ்தம்; முத்தித்தலம் : திருமங்கலம்



மும்மையால் உலகு ஆண்ட மூர்த்திக்கும் அடியேன்

குருபூசை : ஆடி - கார்த்திகை; முத்தித்தலம் : மதுரை




முருகனுக்கும் (உருத்திர பசுபதிக்கும்) அடியேன்

குருபூசை : வைகாசி - மூலம்; முத்தித்தலம் : ஆச்சாள்புரம்



(முருகனுக்கும்) உருத்திர பசுபதிக்கும் அடியேன்

குருபூசை : புரட்டாசி – அசுவதி; முத்தித்தலம் : திருத்தலையூர்




செம்மையே திருநாளைப் போவார்க்கும் அடியேன்

குருபூசை : புரட்டாசி – ரோகிணி; முத்தித்தலம் : தில்லை




திருக்குறிப்புத் தொண்டர் தம் அடியார்க்கும் அடியேன்

குருபூசை : சித்திரை – சுவாதி; முத்தித்தலம் : காஞ்சிபுரம்



மெய்ம்மையே திருமேனி வழிபடா நிற்க
வெகுண்டு எழுந்த தாதை தாள் மழுவினால் எறித்த
அம்மையான் அடிச்சண்டிப் பெருமானுக்கு அடியேன்

குருபூசை : தை – உத்திரம்; முத்தித்தலம் : திருவாய்ப்பாடி



திருநின்ற செம்மையே செம்மையாக் கொண்ட திருநாவுக்கு அரையன் தன் அடியார்க்கும் அடியேன்

குருபூசை : சித்திரை - சதயம்; முத்தித்தலம் : திருப்புகலூர்



பெரு நம்பி குலச்சிறை தன் அடியார்க்கும் அடியேன்

குருபூசை : ஆவணி - அனுசம்; முத்தித்தலம் : மணமேற்குடி



பெருமிழலைக் குறும்பர்க்கும் (பேயார்க்கும்) அடியேன்

குருபூசை : ஆடி – சித்திரை; முத்தித்தலம் : பெருமிழலை



(பெருமிழலைக் குறும்பர்க்கும்) பேயார்க்கும் அடியேன்

குருபூசை : பங்குனி – சுவாதி; முத்தித்தலம் : திருவாலங்காடு




ஒரு நம்பி அப்பூதி அடியார்க்கும் அடியேன்

குருபூசை : தை – சதயம்; முத்தித்தலம் : திங்களூர்



ஒலி புனல் சூழ் சாத்த மங்கை நீல நக்கர்க்கு அடியேன்

குருபூசை : வைகாசி – மூலம்; முத்தித்தலம் : ஆச்சாள்புரம்



அரு நம்பி நமிநந்தி அடியார்க்கும் அடியேன்

குருபூசை : வைகாசி – பூசம்; முத்தித்தலம் : திருவாரூர்




வம்புஅறா வரி வண்டு மணம் நாற மலரும் மது மலர்
நல் கொன்றையான் அடியலால் பேணா எம்பிரான்
சம்பந்தன் அடியார்க்கும் அடியேன்

குருபூசை : வைகாசி – மூலம்; முத்தித்தலம் : ஆச்சாள்புரம்



ஏயர் கோன் கலிக்காமன் அடியார்க்கும் அடியேன்

குருபூசை : ஆனி – ரேவதி; முத்தித்தலம் : பெருமங்கலம்



நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்

குருபூசை : ஐப்பசி – அசுவதி



நாட்டம் மிகு தண்டிக்கும் (மூர்க்கர்க்கும்) அடியேன்

குருபூசை : பங்குனி – சதயம்; முத்தித்தலம் : திருவாரூர்



(நாட்டம் மிகு தண்டிக்கும்) மூர்க்கர்க்கும் அடியேன்

குருபூசை : கார்த்திகை – மூலம்; முத்தித்தலம் : கும்பகோணம்




அம்பரான் சோமாசி மாறனுக்கும் அடியேன்

குருபூசை : வைகாசி – ஆயில்யம்; முத்தித்தலம் : திருவாரூர்



வார் கொண்ட வனமுலையாள் உமை பங்கன் கழலே
மறவாது கல் எறிந்த சாக்கியர்க்கும் அடியேன்

குருபூசை : மார்கழி – பூராடம்; முத்தித்தலம் : காஞ்சிபுரம்



சீர் கொண்ட புகழ் வள்ளல் சிறப்புலிக்கும் அடியேன்

குருபூசை : கார்த்திகை – பூராடம்; முத்தித்தலம் : திருஆக்கூர்



செங்காட்டம் குடிமேய சிறுத் தொண்டர்க்கு அடியேன்

குருபூசை : சித்திரை – பரணி; முத்தித்தலம் : திருச்செங்காட்டங்குடி



கார் கொண்ட கொடைக் கழறிற்று அறிவார்க்கும் அடியேன்

குருபூசை : ஆடி – சுவாதி; முத்தித்தலம் : திருஅஞ்சைக்களம்



கடல் காழிக் கணநாதன் அடியார்க்கும் அடியேன்

குருபூசை : பங்குனி – திருவாதிரை; முத்தித்தலம் : சீர்காழி



ஆர்கொண்ட வேல் கூற்றன் களந்தைக்கோன் அடியேன்

குருபூசை : ஆடி – திருவாதிரை; முத்தித்தலம் : களந்தை



பொய் அடிமை இல்லாத புலவர்க்கும் அடியேன்

குருபூசை : சித்திரை முதல்நாள்



பொழில் கருவூர்த் துஞ்சிய புகழ்ச் சோழர்க்கு அடியேன்

குருபூசை : ஆடி – கார்த்திகை; முத்தித்தலம் : கருவூர்



மெய் அடியான் நரசிங்க முனைஅரையர்க்கு அடியேன்

குருபூசை : புரட்டாசி – சதயம்; முத்தித்தலம் : திருநாவலூர்



விரி திரை சூழ் கடல் நாகை அதிபத்தர்க்கு அடியேன்

குருபூசை : ஆவணி –ஆயில்யம்; முத்தித்தலம் : நாகப்பட்டினம்



கை தடிந்த வரி சிலையான் கலிக்கம்பன் (கலியன் கழல் சத்தி வரிஞ்சையர்கோன்) அடியார்க்கும் அடியேன்

குருபூசை : தை – ரேவதி; முத்தித்தலம் : பெண்ணாகடம்




(கை தடிந்த வரி சிலையான் கலிக்கம்பன்) கலியன்
(கழல் சத்தி வரிஞ்சையர்கோன்) அடியார்க்கும் அடியேன்
குருபூசை : ஆடி – கேட்டை; முத்தித்தலம் : திருவொற்றியூர்



கழல் சத்தி வரிஞ்சையர்கோன் அடியார்க்கும் அடியேன்

குருபூசை : ஐப்பசி – பூசம்; முத்தித்தலம் : வரிஞ்சையூர்




ஐயடிகள் காடவர் கோன் அடியார்க்கும் அடியேன்

குருபூசை : புரட்டாசி – உத்திராடம்; முத்தித்தலம் : காஞ்சிபுரம்



கறைக் கண்டன் கழல் அடியே காப்புக் கொண்டு இருந்த கணம் புல்ல நம்பிக்கும் (காரிக்கும்) அடியேன்

குருபூசை : கார்த்திகை – கார்த்திகை; முத்தித்தலம் : தில்லை



கறைக் கண்டன் கழல் அடியே காப்புக் கொண்டுஇருந்த
(கணம் புல்ல நம்பிக்கும்) காரிக்கும் அடியேன்

குருபூசை : மாசி – பூராடம்; முத்தித்தலம் : திருக்கடவூர்




நிறை கொண்ட சிந்தையான் நெல்வேலி வென்ற நின்ற
சீர் நெடுமாறன் அடியார்க்கும் அடியேன்

குருபூசை : ஐப்பசி – பரணி; முத்தித்தலம் : மதுரை



துறைக் கொண்ட செம்பவளம் இருள் அகற்றும் சோதித்
தொன் மயிலை வாயிலான் அடியார்க்கும் அடியேன்

குருபூசை : மார்கழி – ரேவதி; முத்தித்தலம் : மயிலாப்பூர்



அறைக் கொண்ட வேல் நம்பி முனை அடுவார்க்கு அடியேன்

குருபூசை : பங்குனி – பூசம்; முத்தித்தலம் : திருநீடூர்



கடல் சூழ்ந்த உலகு எல்லாம் காக்கின்ற பெருமான்
காடவர்கோன் கழல்சிங்கன் அடியார்க்கும் அடியேன்

குருபூசை : வைகாசி – பரணி; முத்தித்தலம் : காஞ்சிபுரம்



மடல் சூழ்ந்த தார் நம்பி இடம்கழிக்கும் குஞ்சை
மன்னவனாம் செருத்துணை தன்) அடியார்க்கும் அடியேன்

குருபூசை : ஐப்பசி – கார்த்திகை; முத்தித்தலம் : கொடும்பாளூர்



தஞ்சை மன்னவனாம்
செருத்துணை தன் அடியார்க்கும் அடியேன்
குருபூசை : ஆடி - சுவாதி; முத்தித்தலம் : கீழத்தஞ்சாவூர்




புடை சூழ்ந்த புலி அதள் மேல் அரவு ஆட ஆடி
பொன் அடிக்கே மனம் வைத்த புகழ்த்துணைக்கும் அடியேன்
குருபூசை : ஆவணி - ஆயில்யம்; முத்தித்தலம் : செருவிலிப்புத்தூர்



அடல் சூழ்ந்த வேல் நம்பி கோட்புலிக்கும் அடியேன்

குருபூசை : ஆடி – கேட்டை; முத்தித்தலம் : திருநாட்டியத்தான்குடி



பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்

குருபூசை : சித்திரை முதல்நாள்



பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்

குருபூசை : சித்திரை முதல்நாள்



சித்தத்தைச் சிவன் பாலே வைத்தார்க்கும் அடியேன்

குருபூசை : சித்திரை முதல்நாள்




திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்

குருபூசை : சித்திரை முதல்நாள்



முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்

குருபூசை : சித்திரை முதல்நாள்



முழு நீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்

குருபூசை : சித்திரை முதல்நாள்



அப்பாலும் அடி சார்ந்தார் அடியார்க்கும் அடியேன்

குருபூசை : சித்திரை முதல்நாள்



மன்னிய சீர் மறை நாவன் நின்ற ஊர்ப் பூசல்
(வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும்) அடியேன்

குருபூசை : ஐப்பசி – அனுசம்; முத்தித்தலம் : திருநின்றவூர்



வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்

குருபூசை : சித்திரை – ரோகிணி; முத்தித்தலம் : மதுரை



(வரிவளையாள் மானிக்கும்) நேசனுக்கும் அடியேன்

குருபூசை : பங்குனி - ரோகிணி; முத்தித்தலம் : காம்பிலி




தென்னவனாய் உலகு ஆண்ட செங்கணார்க்கு அடியேன்

குருபூசை : மாசி - சதயம்; முத்தித்தலம் : திருவானைக்கா



திருநீலகண்டத்துப் பாணனார்க்கு அடியேன்

குருபூசை : வைகாசி - மூலம்; முத்தித்தலம் : ஆச்சாள்புரம்



என்னவனாம் அரன்அடியே அடைந்திட்ட சடையன் இசை ஞானி (காதலன் திருநாவலூர்க்கோன்)

குருபூசை : மார்கழி - திருவாதிரை; முத்தித்தலம் : திருநாவலூர்
குருபூசை : சித்திரை - சித்திரை; முத்தித்தலம் : திருநாவலூர்



சடையன் இசைஞானி காதலன் திருநாவலூர்க்கோன்
அன்னவனாம் ஆரூரன் அடிமை கேட்டு உவப்பார்
ஆரூரில் அம்மானுக்கு அன்பர் ஆவாரே

குருபூசை : ஆடி - சுவாதி; முத்தித்தலம் : திருவஞ்சைக்களம்



மாணிக்கவாசகர்

குருபூசை : ஆனி - மகம்; முத்தித்தலம் : தில்லை



நம்பியாண்டார் நம்பி

குருபூசை : வைகாசி – புனர்பூசம்; முத்தித்தலம் : திருநாரையூர்



தெய்வச் சேக்கிழார்

குருபூசை : வைகாசி – பூசம்; முத்தித்தலம் : தில்லை




சேக்கிழார் பெருமான் செம்மையுள்ளங்கவர் திருநாகேசுவரர் திருக்கோயில்

அநபாய சோழன்-இரண்டாம் குலோத்துங்கன்




சார்ந்த அநபாயன் சான்றோர் அமைச்சராம் சேக்கிழாரை
ஆர்ந்த திருத்தொண்டர் ஆன்ற இறையான் டமுறையினை
ஓர்ந்த புராணம் உரைக்க உதவி அமைத்தனனே
ஏர்ந்த அவரடி ஏத்தி அடைந்தனம் ஏண்சிவமே



தில்லைத் திருக்கோயிலும் சிவகங்கைத் திருக்குளமும்

உ

ஸ்ரீ காசிலிங்க பந்தம்



ஸ்ரீ காசிலிங்க பந்த அட்சரக் கோவை

ஸ்ரீ விஸ்வநாதனே ஸ்ரீ விசாலாட்சி சமேதபொங்கு கங்காநதி தவழற்புத மோங்கவரு காலபைரவ ஸ்ரீ லிங்கோத்பவ மணிசிவஞானமொழி கானமாமணி ஸ்ரீ மாதா சக்திஅன்னபூரணி அருள்கொஞ்சு மூன்றுகால பூசைப்பணியின் இருநூறு ஆவது ஆண்டார் நற்றவமா விழாவணி தயாபரனார்கோட்டை நகரத்தாராட்சி சத்திரக்கோயில் மேலாண்மைக்கழகமினி நீடுவாழ்க அருளாட்சிமிக எந்நாளும் நாட்டுக்கோட்டையார் பணி ஸ்ரீ காசிலிங்கனே ! திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ லிங்க பந்த சித்திர கவியை இடமிருந்து வலமாகவும் வலமிருந்து இடமாகவும் மேல்நோக்கியே வாசித்து நடுவரிசையை மேலிருந்து கீழாக வாசித்து மகிழுங்கள்.

கவிஞர் வாரியார்தாசன் விநாயகம், செல் : 91506 70061 ✤ இறைப்பணியில்... டால்ஃபின் AR. ராமனாதன்

தில்லை வாழந்தணர்

கோயில் எனச் சைவ உலகில் போற்றப் பெறுவது தில்லைப் பெருங்கோயில். அத்திருக்கோயிலில் உள்ள சிற்றம்பலத்தில் கற்பனைக்கு எட்டாத சோதிப் பிழம்பான இறைவன் இரக்கமே வடிவாக இருந்து திருநடம்புரிகிறார். அங்கு இறைவனுக்குத் தொண்டு செய்வோர் தில்லை வாழந்தணர். இவர்கள் முத்தீவேள்வி செய்பவர். அறத்தைத் துணையாகக் கொண்டு,மெய்யியல் கொள்கைகளைப் பின்பற்றுபவர். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்மறைகளையும் பயின்றவர். குற்றமற்ற ஒழுக்கம் உடையவர். திருநீற்றினை உயர்ந்த செல்வம் எனக் கொள்பவர். சரியை, கிரியை, யோகம், ஞானம் முதலிய நான்கினையும் அறிந்தவர். தானம் கொடுக்கும் தகைமை உடையவர். தவம்புரியும் தன்மை மிக்கவர். உலக மக்கள் புகழும் படியான மானமும் பொறுமையும் பெற்றவர். திருத்தொண்டத் தொகை தென் தமிழின் பயனாய் உள்ளது. அதில் தில்லை வாழந்தணர்களை சுந்தரர் முதலில் வைத்துப் பாடினார். தில்லை வாழந்தணர்களை ஊறு இன் தமிழால் உயர்ந்தார் எனத் திருஞானசம்பந்தர் குறித்துள்ளார். இக்கோயில் மகுடாகமப்படி பூசை நடைபெறுவது எனத் தில்லைக் கலம்பகத்தில் பதிவு செய்துள்ளனர் இரட்டைப் புலவர்கள்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் திருநீலகண்ட நாயனார்

ஆதியும் அந்தமும் இல்லா ஆனந்தக் கூத்தர் திருநடம்புரியும் மூதூர் தில்லை ஆகும். அவ்வூரில் குயவர் குலத்தில் தோன்றியவர் திருநீலகண்டர். அடியார்களுக்குத் திருவோடு அளிக்கும் திருப்பணி புரிந்தார். இளமைத் தன்மை காரணமாகச் சிற்றின்பத் துறையில் எளியவர் ஆனார். பரத்தை இல்லம் சென்று வந்த அவரை மனைவியார் கடிந்தார். எம்மைத் தீண்டுதல் கூடாது எனத் திருநீலகண்டப் பெருமான் மீது ஆணையிட்டார். எம்மை என அம்மை பன்மையால் கூறியமையால் மாதரார் யாரையும் மனதாலும் தீண்டேன் என உடல்தொடர்பின்றி வாழ்ந்தார். இளமை கழிந்து மூப்பு வந்தது. இத்தகு நாளில் சிவயோகியார் ஒருவர் வந்தார். அவர் நாயனாரிடம் திருவோடு ஒன்றைத் தந்து கேட்கும் போது கொடு எனக்கூறிச் சென்றார். நாயனார் அதனைப் பத்திரப்படுத்தினார். பன்னாட்களுக்குப் பின்னர் சிவயோகி வந்து ஓட்டினைக் கேட்டார். வைத்திருந்த ஓட்டினைக் காணவில்லை. நீலகண்டர் திகைத்தார். வேறு ஓடு தருவதாகக் கூறினார். தந்த மண்ணோடு அன்றிப் பொன்னோடு தந்தாலும் வேண்டா எனச் சிவயோகி சினந்து மறுத்தார். பலமுறை கூறியும் சிவயோகி ஒத்துக் கொள்ளவில்லை. நீ திருடவில்லை என்றால் உன் அன்பு மகனின் கையைப் பற்றிக் குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய் என்றார். மகன் இல்லை என, மனைவியார் கை பற்றி மூழ்கு என்றார். வழக்குத் தில்லை வாழந்தணரிடம் சென்றது. சிவயோகியார் கூறியதே சரி எனக் கூறினர். திருப்புலீச்சரம் கோயில் குளத்தில் மூங்கில் குச்சியைப் பற்றிக் கொண்டு இருவரும் மூழ்கினர். கைப்பற்றி மூழ்கும் படி சிவயோகி கூற தமது சபதத்தை அனைவரும் அறியும்படி கூறினார். மூழ்கி எழுந்தவுடன் இருவரும் இளமையாய் இருந்தனர். இறைவன் காட்சி தந்து எம் உலகை அடைக என வரமளித்தார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் இயற்பகை நாயனார்

காவிரி கடலுடன் கலக்குமிடம் பூம்புகார். இந்நகரில் தோன்றியவர் இயற்பகை நாயனார். உலக இயலுக்குப் பகையானவர் என்பதால் இப்பெயர் பெற்றார். அடியார்க்கு வேண்டுவன கொடுத்து வந்தார். இக்காலத்தில் இறைவன் காமுக வேதியர் வேடங்கொண்டு இயற்பகையார் இல்லம் வந்தார். உம் மனைவியை எம் பணியின் பொருட்டு வேண்டுகிறோம் என்றார். கணவனார் கொடுக்க மனைவியார் வேதியருடன் சென்றார். உறவினர் தடுத்தனர். கடல்போல் பெருகி வந்து வில், வாள், வேலொடு எதிர்த்தனர். வேதியர் அஞ்சியவர் போல் நடித்தார். அம்மையார், இறைவனே அஞ்ச வேண்டா இயற்பகை வெல்லும் என்றார். எதிர்த்த சுற்றத்தாரை எல்லாம் இயற்பகையார் வீழ்த்தினார். வேதியர் அம்மையாரை அழைத்துக் கொண்டு சென்றார். சாய்க்காட்டுத் திருக்கோயிலுக்கு அருகில் சென்றவுடன் வேதியர் ஓலமிட்டார். செயற்கரும் செய்கை செய்த தீரனே ! ஓலம் ! ஓலம் ! என்றார். மீண்டும் யாரோ துன்பம் செய்கின்றனர் என இயற்பகையார் விரைந்து வந்தார். முனிவரைக் காணவில்லை. மனைவியார் மட்டுமே நிற்கக் கண்டார். இறைவன் அம்மையுடன் விடையின் மேல் எழுந்தருளினார்.

எல்லையில் இன்பவெள்ளம் எனக்கருள் செய்தாய் போற்றி !

தில்லையம் பலத்துள் ஆடும் சேவடி போற்றி !

எனத் திருநெறிய தீந்தமிழில் இயற்பகையார் போற்றித் துதித்தார். நாயனாரும் மனைவியாரும் சிவனுலகு சேர இறைவன் அருள்புரிந்தார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் இளையான்குடி மாறநாயனார்

இளையான் குடியில் தோன்றியவர் மாறநாயனார். உழவுத் தொழில் புரிந்தவர். அதனால் நிறைந்த செல்வம் பெற்றவர். சிவனடியார் யாவராயினும் கைகுவித்து வணங்கிச் செவியில் இனிய சொல்கூறி மனைக்கு அழைத்துச் செல்வார். அடியவர் பாதம் கழுவி இருக்கையில் இருத்திப் போற்றுவார். பின்னர் நான்கு வித உணவுகளை அறுசுவைகளில் அளித்து மகிழ்வார். செல்வம் உள்ள காலத்தில் மட்டுமின்றி வறுமை வந்த காலத்தும் இப்பணியை இடைவிடாது செய்ய வல்லவர் என உலகிற்கு அறிவிக்க இறைவன் எண்ணினான். செல்வம் எல்லாம் சென்று மறைந்து வளம் சுருங்கினாலும் மனம் சுருங்காத மாறனார் தம் கொள்கையில் உறுதியாக இருந்தார். மழைக் காலத்து இரவில் இறைவன் முனிவர் வேடம் கொண்டு மாறனார் மனைக்கு வந்தார். அவர் உடம்பின் ஈரத்தை நாயனார் துடைத்தார். மனைவியாரை நோக்கி அமுது செய்ய வழி என்ன எனக் கேட்டார். பகலில் விதைத்த நெல்லை வாரிக் கொண்டு வந்தால் அமுதாக்கலாம் என்றார். அம்மையார். பெரிதும் மகிழ்ந்து உள்ளம் அன்பால் நிறையப் பெரிய கூடையை எடுத்துக் கொண்டு பறவைகள் படுத்துறங்கும் வயலுக்குச் சென்றார் மாறனார். காரிருள் ஆகையினால் காலினால் தடவிச் சென்று கைகளால் மழைநீரின் வழிச் சார்ந்திருந்த நெல்லினை எடுத்து வந்தார். வீட்டின் கூறையை விறகாக்கி அமுது சமைத்தனர். கீரையைப் பறித்துக் கறியாக்கினர். உறங்கிக் கொண்டிருந்த அடியவரை எழுப்பி அமுது செய்ய வேண்டினர். இறைவன் பெரும் சோதியாய்த் தோன்றினான். உம் மனைவியோடு எம் பேருலகில் குபேரன் ஏவல் செய்ய இனிதிருப்பீர் என அருளிச் செய்தான்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் மெய்ப் பொருள் நாயனார்

சேதிநாட்டின் தலைநகரம் திருக்கோவலூர். மலையமான் மரபில் வந்தவர் மெய்ப் பொருள் நாயனார். தமது செல்வம் அனைத்தும் அடியவர்களுக்காகவே என நினைத்தார். மகிழ்ச்சி பொங்க அவர்க்குக் கொடுத்து வந்தார். இத்தகு நாளில் முத்தநாதன் என்னும் மாற்றரசன் நாயனாரிடத்துப் பகைமை கொண்டான். பலமுறை படையெடுத்துத் தோற்றுப் போனான். சிவனடியார் வேடம் கொண்டே மெய்ப்பொருளாரை வெல்ல முடியும் என எண்ணினான். உடம்பெங்கும் திருநீறு பூசினான். சடைமுடிகள் புனைந்தான். கையில் ஓலைச் சுவடி ஏந்தி அதனுள் ஒரு கத்தியை மறைத்து வைத்துக் கட்டிக் கொண்டான். பொய்த்தவ வேடங்கொண்டு மெய்ப்பொருளார் அரண்மனைக்குள் புகுந்தான். தடை பல கடந்து உள் புகுந்தான். மெய்க்காவலன் தத்தன் தடுத்தான். அரசர் துயில் கொள்ளும் அறையில் நுழைந்தான். உங்கள் நாயகனார் உரைத்த ஆகமநூல் உமக்குக் கூற வந்தேன் என்றான். நாயனார் ஆசனத்தில் அவனை அமர்த்தித் தாம் கீழிருந்து வணங்கினார். அப்போது முத்தநாதன் அவரைக் கத்தியால் குத்தினான். பகைவனை வெட்ட வந்த தத்தனை நாயனார் தடுத்துத் தத்தா நமர் என்றார். அவருக்குத் துன்பம் ஏதும் வாராமல் எல்லையில் கொண்டு போய்விட்டு வா என ஆணையிட்டார். அரசர் ஆணையைத் தத்தன் நிறைவேற்றினான். ஐயன் செய்தது யார்செய்யவல்லார் என அரசர் மகிழ்ந்தார். அரசியலாரையும் அரசியாரையும் அழைத்துப் பரவிய திருநீற்று அன்பு பாதுகாத்து உய்ப்பீர் என ஆணையிட்டார். இறைவன் நாயனாருக்குத் திருக்காட்சி நல்கினான்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் விறன் மிண்ட நாயனார்

மணம் பொருந்திய கொன்றை மாலையை அணிந்தவன் இறைவன். அவன் திருவடிகளை வேண்டிப் பரசு என்னும் ஆயுதம் பெற்றவன் பரசுராமன். அவனது நாடு மலைநாடு எனப்படும் சேரநாடு. கடலில் விளைந்த முத்து, கரும்பில் விளைந்த முத்து, மூங்கிலில் விளைந்த முத்து, யானைத் தந்தத்தில் விளைந்த முத்து இவற்றை முத்துப் போன்ற சிரிப்பினை உடைய மகளிர் கோத்தனர். அத்தகு வளமுடைய சேரநாட்டு ஊர்களில் சிறந்ததும், தொன்மையானதுமான ஊர் செங்குன்றூர். அவ்வூரில் வேளாண் குலத்தில் தோன்றியவர் விறன்மிண்டர். சிவபெருமானின் கழல்களைப் பற்றிக் கொண்டவர். வேறு பற்றுக்களைப் பற்றாதவர். பல்வேறு தலங்களையும் சென்று வழிபட்டார். முதிரும் அன்பில் பெருந்தொண்டார் முறைமைநீடு திருக்கூட்டத்தாராகிய அடியார்களையும் தொழுதார். அருவி வீழும் மலைநாடு கடந்து சோழநாட்டுத் திருவாரூர் சேர்ந்தார். திருவாரூப் பூங்கோயில் தேவாசிரிய மண்டபத்தில் சிவனடியார் பலர் கூடியிருந்தனர். இறைவனை வழிபட வந்த சுந்தரர் அடியவர்களைத் தொழாமல் உள்புகுந்தார். அதனைக் கண்ட விறன்மிண்டர் சுந்தரரைப் புறகு (புறம்பானவர்) என்றார். அடியார்கள் தம்பிரான் தோழர் இவர் என்றனர். பிறைசூடிய பெருமானுக்கும் புறகு என்றார். அதனைக் கேட்ட சுந்தரர் உலகம் உய்யவும், நாம் உய்யவும், சைவ நன்நெறியின் ஒழுக்கம் உய்யவும் திருத்தொண்டத்தொகை பாடி அருளினார். விறன்மிண்டர் நெடுநாட்கள் இவ்வுலகில் வாழ்ந்து சைவநெறி போற்றித் தொண்டு புரிந்தார். இறைவனது கணங்களுக்குத் தலைவராகும் பேற்றினை இறுதியில் பெற்றார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் அமர்நீதி நாயனார்

காவிரி பாய்ந்து வளம் கொழிக்கும் சோழநாட்டின் சிறந்த ஊர்களில் ஒன்று பழையாறை ஆகும். அவ்வூரில் சிவன் கழலையே சிந்தை செய்யும் சீலர் அமர்நீதியார் பிறந்தார். கீளும், கோவணமும் அடியார்களுக்குத் தரும் பணி செய்தார். திருநல்லூரில் திருமடம் அமைத்துச் சுற்றத்தாருடன் அங்குக் குடிபுகுந்தார். சிவனடியார்களுக்குத் திருவமுது அளித்துத் தொண்டு செய்தார். ஒருநாள் இறைவன் அவர் பெருமையை உலகிற்கு உணர்த்த விரும்பித் திருமடம் வந்தார். மறையவர் வடிவில் வந்த அவர் தாம் கொண்டு வந்த தண்டில் இரு கோவணங்களைக் கட்டியிருந்தார். அவற்றில் ஒன்றைக் கொடுத்துவிட்டு இதன் பெருமையெல்லாம் உமக்கு நான் சொல்ல வேண்டுவதில்லை; பத்திரமாக வைத்திரு என்றார். பின்னர்க் காவிரியில் நீராடச் செல்வதாகக் கூறிச் சென்றவர் மழையில் நனைந்த படி வந்தார். தாம் தந்த கோவணம் வேண்டுமென்றார். நாயனார் எங்கு தேடியும் கோவணம் இல்லை. புதியது தந்தும் வேதியர் ஏற்கவில்லை. தமது கோவணத்திற்கு ஒத்தது தாரும் எனக் கூறித் தராசில் இட்டார். நாயனார் ஒரு கோவணத்தை மற்ற தட்டிலிட்டார். நேர்படவில்லை. அனைத்துக் கோவணங்களையும் இட்டார். பொன்னும், மணியும் இட்டார். உடைமைகள் அனைத்தும் இட்டார். நேர் பெறவில்லை. இறுதியில் நாயனார் நல்லூர்ப் பெருமானை வேண்டிக் குடும்பத்துடன் தராசில் ஏறினார். தராசு நேர்நின்றது. இறைவன் திருக்காட்சி நல்கினான். தம்மைத் தொழுது கொண்டே இருக்கும் சிவபதம் தந்தருளினான்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் எறிபத்த நாயனார்

சோழர்களின் தலைநகரங்களில் ஒன்று கருவூர். இத்தலத்தில் ஆனிலையப்பர் எழுந்தருளியுள்ளார். இவ்வூரில் பிறந்தவர் எறிபத்தர். அடியார்களுக்கு வரும் துன்பத்தை நீக்குவதில் சிங்கம் போன்றவர். கையில் மழு ஏந்தியவர். இந்நகரில் சிவகாமியாண்டார் என்னும் தொண்டர் திருமாலைப் பணிபுரிந்து வந்தார். ஒரு நாள் நந்தவனத்தில் மலர் பறித்துக் கொண்டு வந்தார். வழியில் புகழ்ச்சோழரின் பட்டத்துயானை பூக்கூடையைப் பறித்துக் கீழே எறிந்தது. தொண்டர் மூப்பினால் தளர்ந்து கீழே விழுந்தார். சிவதா ! சிவதா ! என அழுது முறையிட்டார். அங்கே வந்த எறிபத்தர் யானையையும் பாகரையும் கொன்று வீழ்த்தினார். பிறர் இதனை அரசரிடம் அறிவித்தனர். அரசர் கோபம் கொண்டு விரைந்தார். அடியவர் நிற்கக் கண்டு அடியார் தவறு செய்யார் என எண்ணினார். யானை செய்த குற்றத்திற்கு அதனையும் பாகரையும் கொன்றது போதுமோ? என்றார். அரசரிடம் நாயனார் நிகழ்ந்தது கூறினார். அரசர் இக்குற்றத்திற்காக என்னையும் கொல்ல வேண்டும் எனத் தன் உடைவாளைக் கொடுத்தார். வாளை வாங்காவிட்டால் அரசர் தம்மை மாய்த்துக் கொள்வாரென்று நாயனார் வாளை வாங்கினார். இவர்க்குத் தீங்கு நினைத்தேனே என்று நாயனார் தம்மை மாய்த்துக் கொள்ள முயன்றார். அரசர் அவர் கையைப் பற்றி நிறுத்தினார். இறைவன் திருவருளால் யானையும் பாகரும் உயிர் பெற்றனர். பூக் கூடையில் பூ நிறைந்தது. சிவகாமியாண்டார் முன்பு போல் பணிபுரிந்தார். எறிபத்தர் கணங்களுக்குத் தலைவராகும் பேறு பெற்றார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் ஏனாதி நாயனார்

வயல்களால் சூழப் பெற்ற பழைய ஊர் எயினனூர். இவ்வூரில் ஈழக்குலச் சான்றார் மரபில் தோன்றியவர் ஏனாதியார். அரசமரபினர்க்கு வாள் பயிற்றும் தொழில் செய்து அதனால் வரும் செல்வத்தைச் சிவனடியார்களுக்குப் பயன்படுத்துவார். அவரிடத்தில் பகைமை பூண்டவன் அதிசூரன். நாயனாருக்குத் தாய முறையினன். பொறாமை கொண்டு நாயனாரைப் போருக்கு அழைத்தான். இருபக்கத்துப் போர் வீரரும் ஒரு களத்தில் நின்று போர்புரிந்தனர். அதிசூரன் படைவீரர் தோற்றனர். அதிசூரனும் புறமுதுகிட்டுத் தோற்றோடினான். வஞ்சனையால் வெல்வேன் என எண்ணினான். ஒரு நாள் விடிகாலை இருவர் மட்டும் போர்புரிவோம் என அழைத்தான். நெற்றியிலே திருநீறு அணிந்து வாளும் கேடயமும் ஏந்தி வந்தான். திருநீறு தெரியாதபடி கேடயத்தால் மறைத்துக் கொண்டே போர் புரிந்தான். நாயனார் வீரப் போர் புரிந்து கொண்டிருந்த நேரத்தில் திடுமென நெற்றியை மறைத்திருந்த கேடயத்தை எடுத்தான். திருநீறு தெரிந்ததும் நாயனார் மனம் தளர்ந்தார். தேவர் தலைவராகிய சிவபிரானுக்குச் சீரடியார் ஆனார். ஆதலால் இவர் கருத்தின் வழி நிற்பேன் என எண்ணினார். அதி சூரன் ஆயுதமற்றவரைக் கொன்றான் என்னும் பழி பெறாதிருக்க நாயனார் கையில் வாளை வைத்துக் கொண்டு போர் புரிபவர் போல் நடித்தார். அதிசூரன் ஏனாதியாரைக் கொன்றான். சிவபரம் பொருள் தோன்றி என்றும் தம்முடன் இருக்குமாறு அருள்புரிந்தார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் கண்ணப்ப நாயனார்

கண்ணப்ப நாயனார் பொத்தப்பி நாட்டு உடுப்பூரில் பிறந்தவர். பெற்றோர் நாகன், தத்தை, இயற்பெயர் திண்ணனார். காளைப் பருவத்தில் நாகன் தலைமைப் பொறுப்பில் இருத்தினான். முதல் வேட்டைக்குத் திண்ணனார் வீரர்களுடன் புறப்பட்டார். நாணன், காடன் என்பவர்கள் துணைக்குச் சென்றனர். பல விலங்குகளை வேட்டையாடினர். காட்டுப் பன்றி ஒன்றை நெடுந்தொலைவு துரத்திச் சென்று வேட்டையாடினர். தாகம் எடுக்கவே பொன்முகலி ஆற்றில் நீர் குடிக்கலாம் எனத் துணைவர் கூறினர். அருகில் இருந்த மலையைக் கண்ட திண்ணனார் அது பற்றிக்கேட்டார். உச்சியில் குடுமித் தேவர் உள்ளார் என்பதை அறிந்து, மலைமேல் ஏறித் தேவரைக் கண்டார். தழுவி உச்சி மோந்தார். விடுதல் அறியா விருப்பினர் ஆனார். பன்றியைச் சுட்டு நல்ல இறைச்சியை இறைவர்க்குப் படைத்தார். வாயில் எடுத்து வந்த பொன் முகலி ஆற்றுநீரை அபிடேகம் செய்தார். குடுமியில் எடுத்துவந்த பூவையும் இலையையும் இட்டார். ஆகமப்படி பூசனை புரிந்து வந்த சிவகோசரியார் மனம் வருந்தினார். ஆறாம் நாள் இறைவன் திண்ணனாரின் அன்பை வெளிப்படுத்த எண்ணினார். தமது வலக்கண்ணில் இரத்தத்தை வெளிப்படுத்தினார். திண்ணனார் கண்டு திகைத்தார். மனம் பதைத்தார். மயங்கி விழுந்தார். மருந்திட்டார். நிற்கவில்லை. ஊனுக்கு ஊனே மருந்தென நினைத்தார். தம் வலக்கண்ணைத் தோண்டி அப்பினார். இடக்கண்ணில் இறைவன் இரத்தத்தை வெளிப்படுத்தினார். மகிழ்ச்சியுடன் திண்ணனார் தமது இடக்கண்ணையும் தோண்ட முயன்றார். நில்லு கண்ணப்ப! என இறைவன் திருக்கரம் தோன்றிப்பற்றியது. தம் வலப்புறம் என்றும் நிலை பெற்றிருக்கும் வரத்தை இறைவன் அளித்தார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் குங்கலியக் கலய நாயனார்

இறைவன் வீரச்செயல் செய்த எட்டுத் தலங்களுள் ஒன்று திருக்கடவூர். இத்தகு ஊரில் கலயனார் என்னும் அடியவர் இருந்தார். சிவனடி பேணும் சிறந்த ஒழுக்கம் உடையவர். கடவூர்ப் பெருமானுக்கு நறும்புகையூட்டும் திருப்பணிபுரிந்து வந்தார். வறுமைவந்த காலத்தும் தம் பணியைவிடாது செய்வார் என்பதை உணர்த்த அல்லொத்த கண்டத்து இறைவன் நல்குரவு அடையச் செய்தார். நாயனார் வறுமை வாய்ப்பட்டார். வறுமையிலும் சிறப்பாகத் தொண்டு செய்தார். தமது நிலத்தையும் அடிமைகளையும் விற்றுப்பணி புரிந்தார். வறுமை மிகுந்ததால் குடும்பத்துடன் இரண்டு நாட்கள் உணவின்றி இருந்தார். திருப்பணி உணர்வு நிரம்பி இருந்தார். மனைவியார் தமது தாலியைக் கொடுத்து நெல் வாங்கி வரும்படி விண்ணப்பித்தார். நாயனார் செல்லும் வழியில் ஒருவன் குங்கலியம் விற்று வந்தான். பொன்னைக் கொடுத்து நாயனார் குங்குலிய மூட்டையைப் பெற்றார். கடவூர்க் காலகாலருக்கு நறும்புகையூட்டினார். இரவில் திருக்கோயிலிலேயே தங்கினார். இரவில் பெருஞ் செல்வத்தை இறைவன் மனையில் நிரப்பினான். அம்மையார் கனவில் அதைக் கூறினான். நாயனாரை வீட்டுக்குச் செல்லும் படியும் கனவில் உரைத்தான். வில்லொத்த நுதலாய் இந்த விளைவு யாரால் வந்தது என நாயனார் கேட்க அம்மையார் நடந்தது கூறினார். இவ்வாறுள்ள நாளில் திருப்பனந்தாளில் தாடகைக்கு அருளிய இறைவன் திருமேனி சாய்ந்திருந்தது. அதனை நேர்படுத்தச் சோழன் யானை, சேனைகளைப் பயன்படுத்தித் தோற்றான். கலயனார் கயிற்றைத் தம் கழுத்தில் கட்டி இழுத்தார். அண்ணலார் நேரே நின்றார். அமரர் விசும்பில் ஆர்த்தார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் மானக்கஞ்சாற நாயனார்

சோழவளநாட்டு மருதநில ஊர்களில் சிறந்தது கஞ்சாறூர். உழவுத் தொழில் புரியும் உழவர் மிகுந்த ஊர். அவ்வூரில் வேளாண்குலத்தில் மானக்கஞ்சாறர் தோன்றினார். சிவனடியார்களின் குறிப்பறிந்து கொடுத்து வந்தார். இறையருளால் நீண்ட காலத்திற்குப் பிறகு பெண்மகவைப் பெற்றார். உரிய வயதில் மகளார் மணப்பருவம் அடைந்தார். அவரை எயர்கோன்கலிக்காம நாயனாருக்கு மணம் பேசினார். திருமண ஏற்பாடுகள் மணமகள் இல்லத்தில் நடந்தன. இல்லம் பல வகையிலும் அழகுபடுத்தப்பட்டது. மணமகனார் மணம்புரியக் கஞ்சாறூர் வந்து கொண்டிருந்தார். இறைவன் மாவிரதக் கோலம் பூண்டு நெற்றியில் நீறணிந்து, மார்பில் எலும்பு மாலை விளங்கக் கஞ்சாறூர் வந்தார் மானக்கஞ்சாறர் வணங்கி வரவேற்றார். மங்கலம் யாது என விரதியார் வினவினார். நாயனார், மகள் மணமென மறுமொழி கூறினார். மணக் கோலம் பூண்ட மகளாரை அழைத்து வந்து திருவடி பணிவித்தார். மணமகளின் கருங்கூந்தலைக் கண்டு மாவிரதியார் நம் பஞ்சவடிக்கு ஆகும் என்றார். (பஞ்சவடி - மயிர்ப்பூணூல்) உடனே நாயனார் உடைவாளை உருவிக் கூந்தலை அரிந்து கொடுத்தார். அதனை வாங்குவார் போல் நின்ற விரதியார் மறைந்தார். இறைவன் அம்மையப்பராகக் காட்சி தந்தார். மணமகனாராகிய கலிக்காமர் மணவினைபுரிய மனை புகுந்தார். நிகழ்ந்ததை அறிந்தார். இதனைக் காணும் பேறு கிடைக்காதது கண்டு வருந்தினார். அருள்குடிகொண்ட இறைவன் மணமகளின் இருள்குடி கொண்ட கூந்தலை மீண்டுமளித்தான். இருமனம் இணையும் திருமணம் நிகழ்ந்தது.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் அரிவாள் தாய நாயனார்

நீர்வளமும் நில வளமும் பயிர் வளமும் உடையது கணமங்கலம். வேளாண் குலத்தில் மிக்க செல்வச் செழிப்பில் தாயனார் தோன்றினார். இறைவனுக்குச் செந்நெல் அரிசி, செங்கீரை, மாவடு மூன்றையும் அமுதாகப் படைத்து வந்தார். இறைவன் வழிவழி வந்த செல்வம் மாற்றி வறுமை ஆக்கினார். கூலிக்குச் சென்று கிடைத்த செந்நெல்லை அமுதாக்கியும், கார் அரிசியைத் தாம் உண்டும் வாழ்ந்தார். இறையருளால் எங்கும் செந்நெல்லே விளைந்தது, அனைத்தையும் இறைவனுக்கே அளித்தார். வீட்டுக் கொல்லையில் கிடைத்த கீரைகளை உண்டு வாழ்ந்தார். அதுவும் தீர்ந்தது. மனைவியார் தண்ணீர் கொடுக்க அதனைப் பருகி இருந்தார். ஒரு நாள் தாயனார் அமுதினைக் கூடையில் எடுத்துச் சென்றார். அம்மையார் ஆனைந்தினை மட்கலத்தில் எடுத்துச் சென்றார். வயல்பரப்பில் செல்லும் போது தாயனார் உடல் வருத்தத்தால் தளர்ந்து விழுந்தார். செந்நெல்சோறும், செங்கீரையும், மாவடுவும் வயல் வெடிப்பில் விழுந்தன. இவற்றை அமுது செய்து இறைவன் அருளும் பேற்றைத் தீயவனாகிய நான் பெறவில்லையே என்று எண்ணினார். நாயனார் அரிவாள் கொண்டு கழுத்தை அரியலுற்றார். வயல் வெடிப்பில் (கமர்) இருந்து இறைவன் திருக்கரம் வெளிவந்து அரிவாளைப் பற்றியது. மாவடுவினைக் கடிக்கும் விடேல் விடேல் ஓசையும் உடன் எழுந்தது. அரிந்த கழுத்தின் துன்பம் நீங்கியது. கமரில் வந்து இங்கு அமுது செய்தருளும் பரனே போற்றி என நாயனார் போற்றினார். இறைவன் விடைமேல் அம்மையுடன் தோன்றி அருள்புரிந்தார். தாயனார் - இயற்பெயர். அரிவாள் கொண்டு கழுத்தை அரிந்ததால் அரிவாள் தாயனார் என அழைக்கப் பெற்றார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் ஆனாய நாயனார்

சோழநாட்டின் உட்பகுதி மேல்மழநாடு. அந்நாட்டில் மங்கலம் பல பொருந்தியது திருமங்கலம் என்னும் ஊர். அவ்வூரில் ஆயர்குலத்தில் அணிவிளக்காகத் தோன்றியவர் ஆனாய நாயனார். குலத் தொழிலாகிய ஆனிரை மேய்த்தலை மேற்கொண்டார். இளம் கன்று, பால்பசு, சினைப்பசு, புனிற்றுப்பசு. காளை எனத் தனித்தனியே வகைப்படுத்திப் பேணுவார். தமது ஆணைவழி ஏனைய இடையர் பசு மேய்க்க, இவர் புல்லாங்குழலில் திருவைந்தெழுத்தை இனிய இசையுடன் ஓதுவார். ஒருநாள் நாயனார் திருநீறிட்டு, மார்பில் முல்லை மாலையணிந்து, காதில் செங்காந்தள் பூவணிந்து, காலில் செருப்பணிந்து கையில் வெண்கோலும், வேய்ங்குழலுமாக ஆனிரை மேய்க்கச் சென்றார். காட்டில் மாலை போன்ற பூங்கொத்துக்களுடன் கொன்றை மரம் ஒன்று நின்றது. சடையில் கொன்றை மாலை சூடிய இறைவன் போலத் தோன்றியது. உடனே தம் குழலை எடுத்துத் திருவைந்தெழுத்தை இன்னோசையுடன் ஊதத்தொடங்கினார். அனைத்துயிர்களின் எலும்பும் கரையும்படி வாசித்தார். பசு, பாம்பு, மயில், மான், சிங்கம், புலி முதலியன தத்தம் பகைமையை மறந்து அங்கு ஒன்று கூடின. உயிர் உணர்வற மயிர்க்கூச்செரிய நின்றன. காற்றும் மரமும் அசையவில்லை. அருவியும் ஆறும் ஓடவில்லை. எல்லாம் இசைமயமாய் இருந்தன. இசை இறைவன் திருச் செவியை அடைந்தது. இறைவன் உமையம்மையை இடப்பாகத்தே கொண்டு இடபத்தில் எழுந்தருளினார். ஆனாயனார் குழல் வாசித்த நிலையிலேயே ஆனேறூர்ந்த செல்வர் திருவடி சேர்ந்தார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் மூர்த்தி நாயனார்

புகழுடையது பாண்டி நாடு. தாமிரபரணி ஆற்றால் வளம் பெறுவது. முத்துக்கள் தருவது. தென்பொதியம் தென்றல் தருவது. ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத் தீந்தமிழை உலகிற்கு அளித்தது அந்நாடு. அதன் தலைநகர் மதுரை. அங்கு வணிகர் குலத்தில் புகழ் பெற்ற மூர்த்தி நாயனார் தோன்றினார். ஆலவாய் அண்ணலுக்கு நாள்தோறும் சந்தனம் அரைத்துக் கொடுக்கும் பணிபுரிந்தார். அந்நாளில் கருநாடக அரசன் போர்புரிந்து பாண்டியனை வென்றான். சமணனாகிய அவ்வரசன் சைவசமயத்திற்குப் பல இடையூறு செய்தான். மூர்த்தியாரின் திருப்பணிக்கும் இடையூறு செய்தான். சந்தனக் கட்டைகள் கிடைக்காமல் செய்தான். நாயனார் வருந்தித் திருக்கோயிலுக்கு வந்தார். சந்தனத்திற்கு முட்டானாலும் தேய்க்கும் கையினுக்கு முட்டில்லை என எண்ணித்தம் முழங்கையினைச் சந்தனக் கல்லில் தேய்த்தார். குருதி கொப்பளித்தது. தோல், தசை, நரம்பு, எலும்பு தேய்ந்தன. அன்பின் துணிவால் இவ்வாறு செய்யாதே. உன்னைத் துன்புறுத்தியவனின் நாட்டை நீயே ஆள்வாய் என இறை ஒலி கூறியது. இரவே சமணமன்னன் மீளாத்துயில் எய்தினான். அரசனின்றி நாடு இருத்தல் கூடாதென அமைச்சரும் மக்களும் யானையிடத்து மாலை கொடுத்து அனுப்பினர். ஆலவாய் அண்ணலை வழிபட்டு வெளிவந்த மூர்த்தியார் கழுத்தில் களிறு மாலையிட்டது. அரண்மனைக்கு அழைத்துச் சென்றது. திருமுடியே அபிடேகமாக, அக்கமணியே அணிகலனாக, சடைமுடியே திருமுடியாகக் கொள்வேன் என அமைச்சரிடம் கூறினார். புலன் அழுக்கற்றுத் துறவு நிலையிலேயே அரசாண்டார். திருநீறு, உருத்திராக்கம், சடைமுடி என்ற மூன்றும் கொண்டு அரசாண்டமையால் மும்மையால் அரசாண்ட மூர்த்தி எனப் பெயர் பெற்றார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் முருக நாயனார்

காவிரித் திருநாட்டில் மலர்ச் சோலைகள் சூழ்ந்த அழகுடைய திருநகரம் திருப்புகலூர். அவ்வூரில் சான்றோர் பலர் வாழ்ந்து வந்தனர். அவர்கள் பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள். நீறுபட்டே ஒளி காட்டும் பொன்மேனி உடையவர்கள். அவ்வூர்ச் சோலைகளில் நாகணவாய்ப் பறவைகள் தாம் கேட்ட பழக்கத்தினால் தேவாரப் பதிகங்களைப் பாடும். அதனைக் கேட்டு அடியார் கண்ணீர் பெருக்குவர். இத்தகு ஊரில் மறையவர் மரபின் வளம் பெருகத் தோன்றியவர் முருக நாயனார். சிவபெருமான் திருவடிக்கு மாறாத அன்புடையவர். திருமாலைத் தொண்டு புரிந்தவர். விடிவதற்கு முன் எழுந்து நீர்மூழ்கிச் சோலை புகுவார். கோட்டுப் பூ, கொடிப்பூ, நிலப்பூ, நீர்ப்பூ என நால்வகைப் பூக்களையும் பறித்து வருவார். அதற்கென உள்ள ஒரு தனியிடத்தில் இருந்து கோவை, தாமம், மாலை, கண்ணி, பிணையல், தொடையல் என்ற ஆறு வகை மாலைகளையும் கட்டுவார். அவற்றை ஆறு சிறுபொழுதுகளுக்கும் ஏற்றபடி இறைவனுக்குச் சாத்தி மகிழ்வார். நறும்புகை விளக்கொளியோடு இறைவன் மலரிட்டுப் போற்றித் துதித்தார். திருப்புகலூர் வர்த்தமானீச்சரப் பெருமானின் திருவைந்தெழுத்தை இடைவிடாது செபித்தார். உலகமீன்ற அன்னையான உமையவள் பாலருந்திய திருஞானசம்பந்தப் பெருமானின் இனிய நண்பராகும் பேற்றினை முருகநாயனார் பெற்றார். திருஞானசம்பந்தரின் திருமணத்தின் போது சோதியில் கலந்து முத்தி பெற்றார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் உருத்திர பசுபதி நாயனார்

உயர்ந்தும் பரந்தும் எழும் காவிரிநீர் மலர்கள் நிறைந்த பொய்கைகளிலும், வயல்களிலும் புகுந்து வளத்தை உண்டாக்கியது. குறையில்லா நிறையுடைய செல்வக்குடியினர் செறிந்திருந்தனர். இத்தகு வளமுடைய சோழநாட்டில் மேம்பாடுடையது திருத்தலையூர். அவ்வூரில் வேள்விப் புகையால் மழை பொழிந்தது. மலர்கள் தேனைப் பொழிந்தன. சிவதருமத்தின் படி சான்றோர் நீதி வழங்கினர். இத்தகு ஊரில் பசுபதியார் என்னும் மறையவர் தோன்றினார். மாலறியா மலர்ச் சேவடி உடைய இறைவனின் புகழ்பாடும் அருமறையாகிய உருத்திரத்தை இடைவிடாமல் ஓதும் பேறுடையவர். அவர் ஓர் அழகிய பொய்கையில் கழுத்தளவு நீரில் நின்றார். அப்பொய்கைக் கரையில் பறவைகள் ஆரவாரம் செய்தன. வண்டுகள் பண்பாடின. மீன்கள் பிறழ்ந்தன. நெருப்பு எழுந்தது போல் செந்தாமரைகள் மலர்ந்திருந்தன. நாயனார் அங்கிருந்து உருத்திரத்தைச் செபித்தார். அருமறையின் பயனாகிய உருத்திரத்தைத் தாமரை மலரில் உள்ள பிரமனைப் போலக் காலை மாலை இருபொழுதும் கணித்தார். எல்லா மொழியாலும் இமையோர் தொழுதேத்த மகிழும் இறைவன் மறைமொழிக்கும் மகிழ்ந்தான். ஆதிநாயகன் அருள்புரியப் பசுபதியார் தீதிலாச் சிவபுரியைச் சென்றடையும் பேறுபெற்றார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் திருநாளைப் போவார் நாயனார்

கொள்ளிடத்தின் கரையில் வயல்சூழ்ந்த பகுதி ஆதனூர். மரங்கள் அடர்ந்த சோலைகளை உடையது. மாடமாளிகைகள் பல கொண்டது. அதன் பக்கத்தே புலைப்பாடி உள்ளது. இங்கு வாழ்வோர் உழவுத் தொழில் புரிவோர். நாய், கோழி வளர்ப்பர். கள்ளுண்டு பறைகொட்டிப் பாடி ஆடிக் காலம் கழிப்பர். அச்சேரியில் பிறந்தவர் நந்தனார். பறைத்தொழிலுக்குரிய வருவாயால் வாழ்க்கை நடத்துபவர். சிவன் கோயிலுக்கு உரிய பேரிகை முதலிய கருவிகளுக்குத் தோலும், வாரும் கொடுப்பார். கோயிலுக்கு வெளியே நின்று இறைவனைத் துதிப்பார். திருப்புன்கூர் சென்று வழிபட்டார். இறைவன் நந்தியை விலக வைத்துக் காட்சி கொடுத்தார். திருக்கோயிலுக்குப் பக்கத்தே ஒரு குளம் தோண்டினார். இவ்வாறு உள்ள நாளில் தில்லை செல்ல விரும்பி இருந்தார். நாளைப் போவேன் எனச் சொல்வார். ஒருநாள் தில்லை சென்றார். தில்லையின் எல்லையில் இரவுபகலாக வலம் வந்தார். உள்புகுவது எவ்வாறு என வருந்தி இருந்தார். கனவில் இறைவன் தோன்றித் தீயில் மூழ்கி எழுந்து மறையவருடன் எம்முன் வருக என்றார். தில்லை வாழந்தணர் மூட்டிக் கொடுத்த தீயில் மூழ்கி எழுந்தார். பழைய உடம்பு நீங்கிப் பூணூலும், சடைமுடியும் உடையவராய் வந்தார். இறைவன் நடனமிடும் திருக்கோயிலுக்குள் வந்தார். இறையருளில் கலந்தார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் திருக்குறிப்புத் தொண்ட நாயனார்

உமையம்மை தவம் செய்து இறைவனைத் தழுவும் பேறு பெற்றது தொண்டை நாடு. பழையனூர் நீலியன் பழிக்காக எழுபது வேளாளர் உயிர் நீத்த பழம் பதி. ஐந்திணைகளையும் கொண்டு விளங்கும் நாடு. அந்நாட்டின் தலைநகர் கல்வியில் கரையிலாக் காஞ்சிமாநகரம். இந்நகரில் வண்ணார் குலத்தில் தோன்றியவர் திருக்குறிப்புத் தொண்ட நாயனார். காஞ்சி நகர மக்களுக்குத் துணி துவைத்துத் தரும் பணி செய்தவர் என இவரது அடிமைத்திறம் அறிந்தோர் கூறார். சிவனிடமும் அடியாரிடமும் நீங்காத அன்புடையவர். அடியார்களுக்குத் துணிதுவைத்துக் கொடுப்பதில் மகிழ்வார். ஒரு குளிர்காலத்தில் மிகவும் அழுக்கான கந்தையை அணிந்து அடியார் ஒருவர் வந்தார். அவரிடம் நாயனார் கந்தையைத் துவைத்துத் தருவதாகக் கூறினார். அவரோ என்னால் குளிர்தாங்க இயலாது மாலைக்குள் தரவேண்டும் என்றார். தருவதாகக் கூறிய நாயனார் துணியைத் துவைக்கப் புகும்போது பெருமழை பொழிந்தது. மழை விடாது பெய்தது. துணியைக் காய வைக்க வகை இல்லை. என்ன செய்வதென நாயனார் ஏங்கினார். தவமுனிவர் திருமேனி குளிர்காணும் வகையில் தீங்கு செய்தேனே என வருந்தினார். துணி துவைக்கும் கற்பாறையில் தலையை மோதினார். அக்கல்லின் பக்கத்திலிருந்து உமையம்மை தழுவக் குழைந்த இறைவனது செங்கரம் வெளிப்பட்டு அத்தலையைத் தாங்கிப்பிடித்துக்கொண்டது. மாமூலனார் அன்னை காமக்கண்ணியுடன் காட்சி தந்தார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் சண்டேசுவர நாயனார்

வளம் கொழிக்கும் மண்ணியாற்றின் தென்கரையில் முருகப் பெருமான் சிவபூசை செய்த ஊர் சேய்ஞலூர். விண்ணின் பயனாம் மழைபோல மண்ணின் பயனாக விளங்கும் ஊர். அவ்வூரில் மறையவர் குலத்தில் விசாரசருமனார் பிறந்தார். பெற்றோர் எச்சதத்தன், பவித்திரை. நாயனாருக்கு முற்பிறப்பின் தொடர்பால் சிவப்பற்று வளர்ந்தது. வேதம் பயில மாணாக்கர்களுடன் சேர்ந்து சென்றார். ஆயன் ஆனிரை மேய்க்கச் சென்றான். ஒரு பசுவை நன்றாக அவன் அடிப்பதைக் கண்டார். அவனிடம் சென்று பசுக்களின் பெருமைகூறி இனிமேல் நானே இவற்றை மேய்ப்பேன் எனக்கூறினார். நல்ல மேய்ச்சல் நிலத்தில் மேய்த்துப் பேணினார். பசுக்களின் பாலைக் கறந்து மண்ணியாற்றங்கரையில் சிவலிங்கம் அமைத்து அபிடேகித்தார். பல நாட்கள் சிவபூசை செய்தார். செய்தி அறிந்த மறையவர்கள் பசுவிடத்துப் பால்கறந்து வஞ்சிப்பதாக எச்சதத்தனிடம் எச்சரித்தனர். விசாரசருமரின் சிவபூசையை மறையவனான எச்சதத்தன் மறைந்திருந்து பார்த்தான். கோபம் பொங்கக் கோலெடுத்து முதுகிலடித்தான். சிவபூசையிலிருந்த நாயனார்க்கு ஏதும் தெரியவில்லை. பலமுறை அடித்தும் தெரியவில்லை. அபிஷேகப்பால் குடங்களைக் காலால் இடறினான். அதுகண்டு நாயனார் தமக்கு முன் கிடந்த கோலை எடுத்துத் தந்தையின் காலில் அடித்தார். அது மழுவாக மாறிக் கால்களைத் துணித்தது. இறைவன் இடபத்தில் காட்சிதந்து நாம் உண்பனவும் உடுப்பனவும் சூடுவனவும் உனக்கு உரிமையாகும் சண்டீசப் பதம் தந்தோம் என அருளினார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் திருநாவுக்கரசு நாயனார்

நல்லொழுக்கம் நிறைந்த குடிகளால் சிறந்து விளங்கியது திருமுனைப்பாடி நாடு. அவ்வூரில் மருள்நீக்கியார் தோன்றினார். பெற்றோர் புகழனார், மாதினியார், தமக்கையார் திலகவதியார். இளமையிலேயே பெற்றோர் விண்ணுலகடைந்தனர். திலகவதியார்க்கு மணம் பேசிய கலிப்பகையார் போரில் உயிர்நீத்தார். திலகவதியார் துறவு நெறி நின்றார். மருணீக்கியார் சமண சமயம் சென்றார். பாடலிபுத்திரத்தில் (திருப்பாதிரிப்புலியூர்) சமணப் பள்ளியின் தலைவரானார். இறைவன் சூலைநோய் கொடுத்து ஆட்கொண்டார். திருவதிகையில் கூற்றாயினவாறு எனத் தொடங்கும் பதிகம் பாடினார். சமணர் அரசனிடம் முறையிட அரசன் பல தீங்குகள் செய்தான். இறையருளால் நாயனார் அத்துன்பங்களிலிருந்து மீண்டார். அரசன் சைவ சமயம் புகுந்தான். பல தலங்களையும் வழிபட்டு வந்த நாயனார் பெண்ணாகடத்தில் இடபக்குறியும் சூலக்குறியும் பெற்றார். தில்லையை வணங்கிய நாயனார்; சீர்காழியில் திருஞானசம்பந்தரைக் கண்டு மகிழ்ந்தார். தோணியப்பரைப் பாடி வணங்கினார். நல்லூரில் இறைவன் திருவடி சூட்டினான். திங்களூரில் மறையவராகிய அப்பூதியடிகளின் மகனான மூத்த திருநாவுக்கரசு அரவுதீண்டி இறந்தான். திருப்பதிகம் பாடி அவனை உயிர்ப்பித்தார். திருப்புகலூரில் முருக நாயனார் திருமடத்தில் மீண்டும் ஞானசம்பந்தரைச் சந்தித்தார். திருவீழிமிழலையில் படிக்காசு பெற்று மக்களின் பஞ்சம் போக்கினார். பழையாறை வடதளியில் உண்ணாநோன்பிருந்து சமணர்கள் மறைத்திருந்த தலத்தை மீட்டார். தொண்டை நாட்டுத் தலங்களை வழிபட்டுக் காளத்தியை அடைந்தார். அங்கிருந்து காசியை வழிபட்டுக் கயிலையை நோக்கிச் சென்றார். உடல் மூப்பினால் கயிலைமலையில் நடந்து செல்ல இயலாதவராகித் தவழ்ந்து சென்றார். இறைவன் ஆணைப்படி அங்குள்ள பொய்கையில் மூழ்கித் திருவையாற்றில் எழுந்தார். புகலூரில் திருவடி அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் குலச்சிறை நாயனார்

பாண்டிய நாடு பழமையாகிய புகழினை உடையது. நன்மை மிக்கது. செந்நெல் நிரம்பிய வயல்களும், கரும்பும், கமுகும் செழிக்கும் வளப்பமுடையதோர் ஊர்; பாண்டி நாட்டு மணமேற்குடி. அவ்வூரின் தலைவராக விளங்கியவர் குலச்சிறையார். சுந்தரர் பெருமானால் பெருநம்பி எனப் போற்றப் பெற்ற சிறப்புடையவர். திருத்தொண்டில் சிறிதும் தவறாதவர். சிவனருள் பெறச் சிவனடியாரே காரணம் எனக்கொண்டு அடியாரிடம் மாறாத அன்பு பூண்டவர். அவர் திருவடிகளில் வீழ்ந்து நல்ல மொழிகளைக் கூறுபவர். சிவனடியார் எனில் பணிந்து போற்றும் பண்பினர். உலகநலப் பண்பு உடையார். அல்லார் என்ற இரு திறத்தவராயினும் செஞ்சடையார்க்கு அடிமை உடையார் எனில் வீழ்ந்து வணங்கும் தன்மையர். அடியார் பலராயினும், ஒருவராயினும் அன்பின் திறத்தால் எதிர் கொண்டு அமுதூட்டும் நலமுடையவர். இத்தகு நாயனார் அப்பாண்டி நாட்டு அரசராகிய நின்ற சீர் நெடுமாறனாரின் சிறந்த அமைச்சர்களுள் முதன்மையானவர். பகைவரை வெல்லும் உறுதி படைத்தவர். மங்கையர்க்கரசியாரின் சிறந்த சைவத் தொண்டிற்கு உற்ற துணையாக இருந்தவர். குறையுடைய சமணர் பொய்மைகளை நீக்கவும், பாண்டி நாடு திருநீற்று ஒளி அடையவும். சீர்காழியில் தோன்றிய சிவஞான வள்ளலார் ஆகிய ஞானசம்பந்தரின் திருவடிகளைத் தலைமேல் சூட்டி மகிழ்ந்தவர்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் பெருமிழலைக் குறும்ப நாயனார்

மிழலை நாட்டில் பெரு மிழலை என்பதோரூர். மா, தென்னை, பலா, கமுகு முதலிய மரங்கள் நிறைந்த சோலைகளை உடையது. நீதி வழுவா ஒழுக்கமுடையோர் வாழும் ஊர். அவ்வூரில் குறுநில மன்னராக விளங்கியவர். பெருமிழலைக் குறும்பர். இறைவன் அடியவர்க்குப் பணிவிடை புரிவதில் சிறந்தவர். தொண்டர்களுக்கு அமுதூட்டியும், பெருஞ் செல்வத்தை அள்ளிக் கொடுத்தும், தம்மைச் சிறியவராகக் கொண்டு ஒழுகுவார். சிவனது பாத தாமரைகளை நெஞ்சில் சூடியவர். இத்தகு நாளில் திருத்தொண்டத் தொகையருளிய சுந்தரரைக்கண்டு வணங்கும் பேறு பெற்றார். அவர்திருவடிகளை முறையாகத் துதித்து வாழும் நிலை அடைந்தார். பரவையார் துணைவராகிய நம்பிகளின் மலர்ப்பாதங்களை முக்காரணத்தாலும் வழிபட்டார். இதனால் அணிமா முதலிய எட்டுச் சித்திகளும் கைவரப் பெற்றார். இவர் இவ்வாறு இருக்கும் போது வன் தொண்டராகிய சுந்தரர் கொடுங்கோளூர் சென்றார். சுந்தரர் அஞ்சைக்களத்தில் நஞ்சுண்ட பரம்பொருளைப் பாடிப் பரவினார். வடகயிலை மன்னும் எண்ணம் பெற்றார் சுந்தரர். நாளை சுந்தரர் கயிலை செல்ல அவர் திருவடி பிரியேன். இன்றே சிவனடி சேர்வேன் என எண்ணம் கொண்டார். அந்தக் கரணங்கள் நான்கும் ஒன்றாக, நல்ல அறிவுமேம்பட யோக நிலையிலிருந்து கபால நடுதிறக்குமாறு செய்து பிராணனை வெளிப்படுத்திக் கயிலையடைந்தார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிராட்டி காரைக்காலம்மையார்

காரைக்கால் கடல் துறைமுக நகரம். அந்நகரில் புனிதவதியார் தோன்றினார். தந்தையார் தனதத்தர். நாகைப்பட்டினத்துப் பரமதத்தனுக்குத் திருமணம் செய்து வைத்தனர். காரைக்காலிலேயே தனி மாளிகையில் வாழ்ந்து வந்தனர். இளமை முதலே அம்மையார் ஆண்டவனிடத்தும், அடியாரிடத்தும் அன்பு பூண்டவர். பரமதத்தனிடம் சிலர் ஒரு நாள் இரு மாங்கனி தந்தனர். இருமாங்கனிகளில் ஒன்றை அம்மையார் இல்லத்திற்கு வந்த அடியார்க்கு அளித்தார். உணவு கொள்ள வந்த கணவனுக்கு அம்மையார் ஒரு மாங்கனியைப் படைத்தார். அதன் சுவை அறிந்து மீதமுள்ள மாங்கனியையும் தருமாறு கேட்டான். அம்மையார் அதனை எடுத்து வருவார் போல் உள்சென்று இறைவனிடம் வேண்டினார். மாதேவர் கருணையால் மாங்கனி ஒன்று கிடைத்தது. அதனை உண்ட பரமதத்தன் மூவுலகிலும் கிடைத்தற்கரிய இம் மாங்கனி ஏதென வினவ அம்மையார் நிகழ்ந்தது கூறினார். இன்னுமொரு மாங்கனி பெற்றுத்தந்தால் நம்புவதாகக் கூறவே அம்மையார் மற்றுமொரு மாங்கனி பெற்றளித்தார். பரமதத்தன் உண்ண முயல மறைந்தது. அன்று முதல் அம்மையாரை தெய்வப் பெண்ணாகக் கருதித் தொடர்பின்றி வாழ்ந்தான். உறவினர்கள் அயல்நாடு சென்ற போது கப்பல் வாணிகத்திற்காகச் சென்றவன் பாண்டிநாடு திரும்பி அங்கோர் பட்டினத்தில் வேறுமணம் புரிந்து மகப்பெற்று வாழ்ந்தான். உறவினர் அம்மையாரை அங்கு அழைத்துச் செல்ல வீழ்ந்து வணங்கினான். அம்மையார் இறைவனிடம் பேய் வடிவு வேண்டிப் பெற்றார். கயிலை மலையைத் தலையால் நடந்து சென்றார். அம்மையே என அண்ணல் அன்பு மொழி பகர்ந்தார். அம்மையாரும் அப்பா எனத் திருவடியில் வீழ்ந்தார். திருவாலங்காட்டில் என்றும் நம் திருவடிக்கீழ் இருக்க என அருள் புரிந்தார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் அப்பூதி நாயனார்

சோழநாட்டுத் திங்களூரில் வேதியர் குலத்தில் அப்பூதி அடிகள் தோன்றினார். திருநாவுக்கரசரைக் கண்டறியாமலேயே அவரைக் குருவாகக் கொண்டவர். தம் வீட்டிலிருந்த உயர்திணை, அஃறிணைப் பொருள்களுக்கெல்லாம் திருநாவுக்கரசு எனப் பெயரிட்டார். தாம் அமைத்த குளம், சாலை, தண்ணீர்ப் பந்தல் அனைத்திற்கும் அவ்வாறே பெயரிட்டார். இத்தகு நாளில் திருநாவுக்கரசர் திங்களூர் எழுந்தருளினார். திருநாவுக்கரசர் தண்ணீர்ப் பந்தலைக் கண்டார். இதனைச் செய்தவர் யாரெனக் கேட்டு அப்பூதி அடிகள் மனைக்குச் சென்றார். தண்ணீர்ப் பந்தலில் உமது பெயர் எழுதாமல் வேறொரு பேர் எழுதியது ஏன் என வினவினார். செம்மைபுரி திருநாவுக்கரசர் திருப்பெயரோ வேறாரு பேர்; யார் நீவிர்? எங்குறைவீர்? என அப்பூதியார் சினந்தார். திருநாவுக்கரசன் எனும் சிறியேன் என்றார். கண்ணீர் பொழிந்தது. உரை குழறியது. மயிர்க்கூச் செறிந்தது. அரசுகளின் அடிவீழ்ந்தார் அப்பூதி அடிகள். அரசுகள் அமுதுண்ண மூத்த திருநாவுக்கரசு வாழைக் குருத்தை அரிந்து வரச் சென்றான். அங்கு பாம்பு தீண்டியது. விடத்தின் வேகம் தலைக்கேறியது. விரைந்து ஓடி வீட்டுக்கு வந்து இலையைக் கொடுத்துக் கீழே விழுந்தான். உயிர்ப் பறவை உடற் கூட்டை நீங்கியது. மகனைப் பாயில்மூடி புறமனையில் வைத்தனர். அமுதுண்ணத் தொடங்குங்கால் நாவரசர் அனைவருக்கும் திருநீறு தந்தருளினார். மூத்த திருநாவுக்கரசையும் அழைக்க என்றார். "அவன் இங்கு உதவான்" என்றனர். நாவரசர் உளம் தடுமாறியது. நிகழ்ந்தது உரைத்தனர். இறைவன் திருமுன்பு உடலை வைத்து, **'ஒன்று கொலாம்'** என்னும் உயர்பதிகம் பாடினார். உறங்கி எழுவான் போல எழுந்தனன். திருமனையில் அனைவரும் திருவமுது செய்தனர். அப்பூதி குஞ்சிபூவாய் நின்ற சேவடி என அரசுகளும் பாடிய பெருமை பெற்றார் நாயனார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் திருநீலநக்க நாயனார்

சோழநாட்டின் சிறந்தவூர் சாத்தமங்கை, அங்கு மறையவர் குலத்தில் மிகுந்த ஒழுக்கம் மிக்கவராகத் தோன்றியவர் திருநீலநக்கர். அவ்வூர்க்கோயிலான அயவந்தியில் பூசை செய்துவந்தார். ஒரு நாள் பூசைப் பொருள்களை எடுத்துக் கொண்டு மனைவியாருடன் திருக்கோயிலுக்குச் சென்றார். மனைவியார் பூசைப் பொருள்களை எடுத்துக் கொடுக்க நாயனார் பூசித்தார். அப்போது சிலந்திப் பூச்சி ஒன்று திருமேனி மேல் விழுந்தது. அம்மையார் பதைத்து அதனை வாயினால் ஊதி அகற்றினார். அது கண்ட நாயனார் சினந்து உன்னைத் துறந்தனன் என்றார். இரவில் இறைவன் தோன்றி அம்மையார் ஊதிய இடமன்றி மற்ற இடமெல்லாம் கொப்புளம் ஆனதைக் காட்டினார். நாயனார் ஆடிப்பாடித் துதித்தார். காலையில் எழுந்து அம்மையாரை அழைத்துக் கொண்டு திருக்கோயிலுக்குச் சென்றுவந்தார். இவ்வாறு இருந்த நாளில் ஒருநாள் திருஞானசம்பந்தப் பெருமான் திருநீலகண்ட யாழ்ப்பாணரும், அவர் மனைவியார் மதங்க சூளாமணியாரும் உடன் வரத்திருச் சாத்தமங்கைக்கு எழுந்தருளினார். நாயனார் அனைவரையும் அழைத்துக் கொண்டு திருமனைக்குச் சென்று திருவமுது செய்வித்தார். இரவானபடியால் ஞானசம்பந்தப் பெருமான் திருநீலக்கண்டயாழ்ப்பாணரும், துணைவியாரும் தங்க ஓரிடம் தருமாறு நாயனாரிடம் கூறினார். அவர் மிக மகிழ்ந்து வேள்விச் சாலை வேதிகையின் பக்கத்தில் இடம் கொடுத்தார். அக் குண்டத்தில் வேள்வித் தீ வலம் சுழித்து எழுந்து விளங்கியது. நீலநக்கர் ஞானசம்பந்தரின் பதிகத்தில் இடம்பெறும் பேறு பெற்றார். ஞானசம்பந்தரின் திருமணத்தில் சோதியில் கலந்தார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் நமி நந்தி அடிகள் நாயனார்

சோழ வளநாட்டின் வளஞ்சிறந்த ஊர் ஏமப்பேறூர் ஆகும். அங்கு அந்தணர் குலத்தில் அவதரித்தவர் நமிநந்தி அடிகள். நாள்தோறும் திருவாரூர் சென்று பூங்கோயில் கொண்ட புற்றிடங்கொண்டாரை வணங்குவார். ஒரு நாள் மாலைப் பொழுதில் ஆரூர் அரநெறிக் கோயிலில் எண்ணில்லாத விளக்குகளை ஏற்ற எண்ணினார். மாலைப் பொழுதாகையால் ஏமப்பேறூர் சென்று வர நேரமாகும் என எண்ணி அருகிலிருந்த வீட்டில் எண்ணெய் கேட்டார். அது சமணர் வீடாகையால், உமது இறைவர் நெருப்பேந்தியவர். விளக்குத் தேவையில்லை, வேண்டுமானால் தண்ணீர் ஊற்றி விளக்கு எரியும் என்றனர். இறை ஒலி அவ்வாறே செய்க என்றது. நாயனார் குளத்தில் நீர் முகந்து கொண்டு வந்து விளக்கேற்றினார். சுடர்விட்டு எரிந்தது. அரநெறிமுழுதும் எண்ணில் தீபம் ஏற்றினார். அமணர் அனைத்தும் கண்டனர். இவ்வாறு பலநாளும் பணி செய்தார். வீதி விடங்கப் பெருமான் ஒரு நாள் திருமணலி என்னும் ஊருக்கு எழுந்தருளினார். சிவபூசை செய்து துயில்க என்றார். நாயனார் பலரும் இருந்த கூட்டத்தில் இருந்ததால் தீட்டு உண்டானதாகக் கருதிக் குளிக்க நீர் கொணர்க எனக் கூறித் திண்ணையில் இருந்தார். களைப்பால் உறங்கினார். இறைவன் கனவில் எழுந்தருளித் திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லோரும் நமது கணங்களே அறிக என்றார். அதனை அறிந்து உடனே சிவபூசை செய்து உறங்கினார். மறுநாள் விடிகாலை திருவாரூர் சென்றார். எல்லோரும் சிவகணங்களாகத் தோன்றினார். நிலமிசை வீழ்ந்து தொழுது எழுந்தார். அடியார்களுக்குத் தொண்டு செய்து திருவடி அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் திருஞானசம்பந்தர்

சோழ நாட்டில் பன்னிருபெயர்களைக் கொண்ட சீர்காழியில் சிவபாத இருதயர்க்கும், பகவதியார்க்கும் மகனாகத் தோன்றினார். மூன்றாம் வயதில் ஞானப்பால் அருந்தியதால் ஞானசம்பந்தர் எனப் பெயர் பெற்றார். அப்போது பாடியது தோடுடைய செவியன் என்ற திருப்பதிகம், திருக்கோலக்காவில் பொற்றாளம். பட்டீச்சுரத்தில் முத்துப்பந்தர். நெல் வாயில் அறத்துறையில் முத்துப்பல்லக்குப் பெற்றார். தாழ்ந்த பாணர்இனத்தைச் சேர்ந்த திருநீலகண்டரையும். அவர் மனைவியார் மதங்கசூளாமணியாரையும் உடனழைத்துச் சென்றார். பாச்சிலாச் சிராமத்தில் கொல்லிமழவன் மகளின் முயலகன் நோய், திருச்செங்கோட்டில் நளிர் சுரம் ஆகியவற்றைப் போக்கினார். திருநாவுக்கரசருடன் சேர்ந்து திருவீழிமிழலையில் இறைவனிடம் காசு பெற்றுப் பஞ்சத்தில் உணவளித்தார். திருமறைக்காட்டில் வேதங்கள் அடைத்து வைத்திருந்த கதவினை இருவரும் திறக்கவும். அடைக்கவும் பாடினர். மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் ஆகியோர் அழைப்பை ஏற்று மதுரை சென்றார். அங்குச் சமணர்களை அனல்வாதம் புனல் வாதத்தில் வென்றார். பாண்டியனும் பாண்டியநாடும் சைவத்துக்கு மாறச் செய்தார். மீண்டு வருகையில் தெளிச்சேரியில் சாரிபுத்தன் வாதம் செய்து தோற்றான். தொண்டை நாட்டுவழிச்செலவில் அடியார்க்காக ஆண்பனையைக் காய்க்கச் செய்ய திருவோத்தூரில் பதிகம் பாடினார். காளத்தியில் கண்ணப்பரைப் பாராட்டிப் பாடினார். காளத்தியிலிருந்தே கயிலை முதலிய தலங்களைப் பாடினார். மயிலாப்பூரில் எலும்பாக இருந்த பூம்பாவையைப் பதிகம் பாடி உயிர் பெறச் செய்தார். திருநெல்லூர் நம்பாண்டார் மகளைத் திருமணம் செய்ய ஏற்பாடு செய்தனர். திருமணத்தில் அனைவரும் சோதியில் சென்றபின் திருஞானசம்பந்தர் மணமகளின் கையைப்பற்றிக் கொண்டு புக்கு ஒன்றி உடனானார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் ஏயர்கோன் கலிக்காமநாயனார்

சோழ நாட்டின் அழகு மிக்க நகரம் திருப்பெருமங்கலம். அந்நகரில் ஏயர்கோக்குடி வேளாண்மையில் சிறந்து விளங்கியது. அக்குடியில் கலிக்காமர் தோன்றினார். சிவபக்தியில் சிறந்தவர். தமது ஊருக்கு அருகிலிருந்த திருப்புன்கூரில் திருப்பணிகள் பல செய்து திருநீற்றினைச் செல்வமாகக் கொண்டு வாழ்ந்தார். இக்காலத்தில் வன்தொண்டர் திருவருளில் தோய்ந்து வாழ்ந்து வந்தார். பரவையாரை மணந்த சுந்தரர் சங்கிலியாரையும் மணந்தார். பரவையாரைப் பிரிந்து சங்கிலியாருடன் வாழ்ந்திருந்தமையால் பரவையார் ஊடல் கொண்டார். ஊடல் தீர்க்க இயலாத சுந்தரர் இறைவனை இருமுறை ஊடல் தீர்க்க ஓரிரவு பரவையார் வீட்டுக்குத் தூதாக அனுப்பினார். இதனை அறிந்த கலிக்காமர் மனம் வெம்பினார். அதிசயப்பட்டார்; அச்சம் கொண்டார். தலைவனை அடியவன் ஏவுதல் நன்று. இதைச் செய்பவனும் தொண்டனா? இதைக் கேட்டும் உயிருடன் இருக்கிறேனே என வருந்தினார். இதை அறிந்து சுந்தரர் வருந்திக் கலிக்காமரிடம் நட்புக் கொள்ள வேண்டும் என இறைவனிடம் வேண்டிக் கொண்டார். இறையருளால் கலிக்காமருக்குச் சூலைநோய் வந்தது. அவரிடம் இறைவன் சுந்தரரால் இது தீர்க்கப்படும் என்றார். சுந்தரரிடம் நாயனாரின் சூலை நோயைத் தீர்க்க என்றார். சுந்தரர் புறப்பட்டு வர நாயனார் அவரைப் பார்க்க விரும்பாது உடைவாளினால் வயிற்றைக் கிழித்துக் கொண்டு ஆவி துறந்தார். வந்த சுந்தரரை நாயனார் மனைவியாரும் பிறரும் வரவேற்று அருச்சனை செய்தனர். நாயனார் பற்றிக் கேட்க நலமுடன் இருப்பதாகக் கூறினர். சுந்தரர் சென்று பார்க்க அவர் ஆவிதுறந்திருந்தார். அவ்வுடைவாளினை எடுத்துச் சுந்தரர் தம்மை மாய்க்க முயன்றபோது இறையருளால் கலிக்காமர் உயிர் பெற்று எழுந்து வாளினைப் பற்றிக் கொண்டார். இருவரும் நண்பராயினர்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் திருமூலதேவ நாயனார்

திருக்கயிலை மலையில் திருநந்தித் தேவரின் அருள் பெற்ற ஒரு சிவயோகியார் இருந்தார். அணிமாதி சித்திகள் கைவரப் பெற்றவர். அகத்திய முனிவரைக் காணும் ஆசையால் பொதிகை மலைநோக்கி வந்தார். கேதாரம், நேபாளம், காசி, விந்தம், சீபர்ப்பதம், காளத்தி, திருவாலங்காடு, காஞ்சி, தில்லை ஆகிய திருத்தலங்களை வணங்கித் திருவாவடுதுறைக்கு எழுந்தருளினார். நீங்காத விருப்பத்துடன் அங்கிருந்து செல்லும்போது காவிரிக்கரையில் பசுக்கூட்டங்கள் புலம்பக் கண்டார். அவற்றை மேய்க்கும் இடையன் சாத்தனூரைச் சார்ந்த மூலன் ஆவான். அவன் விடந்தீண்டி இறந்துகிடந்தான். அவன் உடம்பைச் சுற்றிப் பசுக்கள் கதறின. சுழலுதலைச் செய்தன. மோப்பனவாயிருந்தன. ஆனிரைகளின் துயர் தீர்க்க யோகியார் நினைத்தார். தம் உடலை ஓரிடத்தில் பத்திரப்படுத்தி விட்டுப் பிற உடலில் புகுதல் என்னும் சத்தியால் மூலன் உடலில் தமது உயிரைச் செலுத்தினார். திருமூலராய் எழுந்தார். பசுக்களின் துன்பம் நீங்கியது. அவற்றுக்கு நீர்தந்து நிழலில் இருத்தி மாலையில் மனைநோக்கிச் செலுத்தினார். மனைவியார் இல்லத்திற்கு அழைத்தார். உன்னோடு எனக்குத் தொடர்பில்லை எனப் பொதுவிடத்தில் யோகத்திலிருந்தார். ஊரார் சிவயோகி எனத் தெரிந்து அவளைக் கொண்டு நீங்கினர். சிவயோகியார் தமது உடலைத் தேடினார். இறைவன் அதனை மறைத்தருளினான். ஆகமங்களைத் திருமூலர் தமிழில் கூற இறைவன் எண்ணினான். திருவாவடுதுறையில் அரச மரத்தின் கீழிருந்து ஆண்டுக்கு ஒரு பாடலாக மூவாயிரம் திருமந்திரம் பாடி அருளினார் திருமூலநாயனார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் தண்டி அடிகள் நாயனார்

தண்டி அடிகள் திருவாரூரில் பிறக்கும் தவம் உடையவர். அகக் கண்ணால் சிவன் கழலே சிந்தை செய்யும் சிறப்புடையவர். ஆதலால் புறக்கண்ணால் வேறுகாணாமை வேண்டியவர் போலப் பிறப்பிலேயே பார்வையற்று இருந்தார். கமலாலயத் திருக்குளத்தின் கரைகளில் சமணர்கள் தங்குமிடங்களை அமைத்திருந்தனர். குளத்தின் பரப்புக் குறைந்தது. இதனை அறிந்த அடிகள் கயிறுகட்டி அதனைப் பிடித்துக் கொண்டே மண்ணைத் தோண்டித் தூர் வாரினார். அதனைப் பொறுக்காத சமணர் மண்ணில் உள்ள உயிர்கள் அழியும்: நீயும் உடல் வருந்த வேண்டா எனக் கூறினர். அதற்கு நாயனார் திருநீற்றினை அணிந்த சிவபிரானுடைய பணிகளெல்லாம் குற்றமற்ற நல்ல அறங்களே என்றார். எங்களின் நல்ல உரையைக் கேட்க மாட்டாய். கண் இழந்தது போலச் செவியையும் இழந்தாய் போலும் என இழித்துக் கூறினர். திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளன்றிப் பிறவற்றைக் காணேன். அதை நீங்கள் எவ்வாறு அறிவீர்கள் என்றார். உமது கண்குருடாகி எமது கண் தெரிந்தால் என் செய்வீர்? என்று நாயனார் கேட்க ஊரைவிட்டுப்போய் விடுகிறோம் என்றனர். இரவில் நாயனார் அழுது தொழுது உறங்கினார். இறைவன் அரசன் கனவில் சென்று கூறினார். அரசன் அடிகளிடம் கனவைக் கூறினான். அடிகள் முன்னைநாள் நிகழ்ந்தது கூறினார். அடிகள் திருவைந்தெழுத்தைக் கூறிக் கமலாலயத்தில் மூழ்கி எழுந்தனர். உமைபங்கன் திருவருளால் உலகைப் பார்க்கும் கண்பெற்றார். சமணர் கண் குருடாயின. அரசன் அவர்களை அங்கிருந்து அப்புறப்படுத்தினான். அவர்களது தங்குமிடங்களை அகற்றிக் குளத்தின் கரைகளை மீட்டான். தண்டியடிகள் பணிகள் பல செய்து பரமனடி அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் மூர்க்க நாயனார்

பாலி ஆற்றின் வடகரையில் உள்ள நன்மை மிக்க ஊர் திருவேற்காடு. அமுதத்தைத் தேவர்க்களித்து விடத்தை உண்ட சிவபிரானின் அடியார் ஒருவர் அவ்வூரில் வாழ்ந்து வந்தார். அவர் வேளாளர் குலத்தில் தோன்றினார். பிறந்து மொழி பயின்ற காலம் முதலாகத் திருநீற்றின் சார்பே உண்மைப் பொருளாவது எனக் கருதினார். அடியார்க்கு அமுது கொடுத்து அவர் உண்டபின் தாம் உண்ணும் முறையைக் கொண்டிருந்தார். சோறு, நெய், வெல்லம். சுவை உடைய கறிகள் ஆகியன தந்து உபசரிப்பார். நாள்தோறும் இப்பணியை இடைவிடாது செய்தார். அடியார்கள் நாள்தோறும் மிகுதியானபடியால் பொருளனைத்தையும் இழந்தார். நிலம் முதலியனவற்றை விற்றார். தாம் முன்பு கற்ற சூதாட்டத்தால் பொருள் ஈட்ட முயன்றார். சூதாடுவார் இன்மையால் பல ஊர்களுக்கும் சென்று வழிபாடு செய்து, சூதினால் வரும் பொருளால் அடியார்க்கு அமுது படைத்தார். திருக்குடந்தையைச் சேர்ந்தார். சூதால் பொருளீட்டி அமுது செய்வித்தார். முதல் ஆட்டத்தில் தாம் தோற்று உடன் ஆடுவோரை வெற்றி கொள்ளச் செய்வார். பிறகு தொடர்ந்து தாமே வென்று பெரும்பொருளைத் தமதாக்கிக் கொள்வார். மறுத்தவர்களை உடைவாளால் குத்துவார். மூர்க்கர் என்னும் பெயர் பெற்றார். சூதுப் பொருளைத் தாம் கையாலும் தீண்டாது அமுது செய்வோரிடம் தந்து அடியார்க்கு அமுதிடுவார். கடைசியில் தாமும் உண்பார். குற்றமுடைய சூதும் சிவபுண்ணியத்தால் நன்மையாகி மூர்க்கருக்கு வீடுபேற்றை அளித்தது.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் சோமாசி மாற நாயனார்

மாமரங்கள் மிக்கு விளங்கும் சோலைகள் சூழ்ந்தது திருஅம்பர் நகரம். மறையவர் குலத்தில் மாறநாயனார் அவதரித்தார். மும்மதில்களை எரித்த இறைவனுடைய அன்பர்கள் வந்தால் அவர்களது திருவடிகளைப் பணிந்து அமுதூட்டும் பண்பின் மிக்கவர். உமையம்மையை ஒரு பாகம் கொண்ட சிவபெருமானைப் போற்றும் சிவ வேள்வியை விடாது நூல்வழி மேற்கொள்பவர். உயிர்கள் நல்வாழ்வடைவதற்கு வழி சிவன்கழல் ஏத்தலே என்பதில் உறுதி உடையவர். அடியார் எத்தன்மை உடையவராயினும் சிவனுக்கு அடியார் எனில் நம்மை ஆளும் தகுதி உடையவர் என்ற எண்ணம் கொண்டவர். சித்தம் தெளிவடையும்படி திருவைந்தெழுத்தை விதிப்படி ஓதும் ஒழுக்கத்தில் தலை நிற்பவர் சிறப்பும், சைவப் பொலிவும் பெற்றுள்ள திருவாரூர் சென்றார். சிவபிரானுடைய அணுக்கத் தொண்டராகிய சுந்தரரின் நண்பரானார். மண்ணுலகும் விண்ணுலகும் போற்றுகின்ற சுந்தரமூர்த்திகளின் திருப்பாதத்தைப் பற்றாகக் கொண்டு வாழ்ந்தார். ஐம்புலன்களையும், ஆறு குற்றங்களையும் வென்றார். சுந்தரர் பெருமான் திருவடிகள் தந்த விளக்கத்தால் என்றும் அழியாத சிவனுலகில் வாழும் பேரின்பப் பெருவாழ்வைப் பெற்று உயர்ந்தார். சோமாசியார் வேள்விக்கு இறைவன் தாழ்த்தப்பெற்ற இனத்தார் கோலத்துடன் வந்ததாகத் தல புராணச் செய்தி உண்டு.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் சாக்கிய நாயனார்

திருச்சங்க மங்கை என்னும் ஊரில் தாளாண்மை மிக்க வேளாளர் குலத்தில் ஓர் அடியார் தோன்றினார். அவர் சாக்கிய நாயனார் எனப் பெற்றார். எவ்வுயிர்க்கும் இரங்கும் இயல்புடையவர். தமது ஊரை விட்டுக் காஞ்சிநகர் சென்று உண்மை ஞானம் பெறுவதற்குரிய பல வழிகளையும் நாடினார். அதன்வழி புத்த சமயம் சார்ந்தார். சாக்கிய நூல் பல கற்றார். அவையும் பிற சமய முடிவுகளும் உண்மைப் பொருளை உரைக்கவில்லை என அறிந்தார். மேலும் அழிவில்லாத சிவநெறியே உண்மை என உணர்ந்தார். எந்த நிலையில் இருந்தாலும், என்ன வேடம் கொண்டிருந்தாலும் சங்கரனுடைய திருவடிகளை மறவாதிருப்பதே உறுதிபயக்கும் என நினைந்தார். இந்நாயனார் அந்தச் சாக்கிய சமயத்தவர் தாங்கும் வேடத்தை மாற்றாமலேயே சிவன்பால் அன்பின் வழி நின்றார். கண்ணுக்குப் புலப்படாத அருவத் திருமேனிக்கும், உருவத்திருமேனிக்கும் மூலமாகிய இருப்பிடமாகி இருப்பது சிவலிங்கம் எனக் கொண்டார். நாள்தோறும் சிவலிங்கத் திருமேனியைக் கண்டு தொழுத பின்பே உணவு உண்பது என்ற ஒழுக்கத்தைக் கைக் கொண்டார். அருகில் ஓரிடத்தில் உள்ள சிவலிங்கத்தைக் கண்டு, இன்னது செய்கிறோம் என அறியாமல் ஒரு கல்லினை எடுத்து அச்சிவலிங்கத்தின் மேல் எறிந்தார். அதுமலராயிற்று. இச்செயலால் சிவபெருமான் மகிழ்ந்தார். மற்ற பிற நாட்களிலும் இவ்வாறே செய்து வந்தார். ஒருநாள் திருவருளினால் இதனை மறந்து உணவு உண்ணத் தொடங்கினார். பெருமானை கல்லெறிந்து வழிபடுதலை மறந்தேன் என எண்ணி இறைவன் முன்பு வந்தார். அங்கு கிடைத்த கல்லை எடுத்து எறியக் கண்ணுதற் பெருங் கடவுள் கருணை பொழிந்து வானில் தோன்றினார். நாயனார் கண்டு கைகூப்பி நிலத்தில் வீழ்ந்து வணங்கி இறையருள் பெற்றார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் சிறப்புலி நாயனார்

சோழ நாட்டில் மிகப்பழமையானதாகிய ஓரூர் உள்ளது. மிகவும் அழகியது. உலகத்துள்ளோர் வறுமை காரணமாக இரந்து சென்றால் இல்லை எனாது வேண்டுமளவு வரையாது கொடுக்கும் தன்மை உடையோர் வாழும் ஊர் எனத் திருஞான சம்பந்தரால் குறிக்கப்பெற்ற பதி. ஆக்கூர் என்னும் பெயர் பெற்றது. சோலைகளில் மலர்கள் நிறையும் மாடங்களில் ஒளி விளங்கும். அழகு பொருந்திய வீதிகளில் இட்ட அகிற்புகை மணம் கீழாம்படி வேள்விச் சாலைகளின் ஆகுதிப் புகை மேலோங்கும். கரும்பு ஆலைகளைக் கமுகுகள் வேலி போலச் சூழ்ந்திருந்த அவ்வூரில் நான்மறைகளை ஓதும் மறையவர் குலத்தில் தோன்றியவர் சிறப்புலி நாயனார். விடம் உடைய கண்டத்தையும் எண் தோள்களையுமுடைய சிவபிரானின் திருத் தொண்டினை மேற்கொண்டு ஒழுகும் சீலமுடையவர். சிவனடியார்கள் வந்தபோது அவர்கள் அடியில் வீழ்ந்து மூண்டெழும் அன்பு பொங்கத் திருமுன்பு இனிய மொழி கூறி, நாள்தோறும் நல்ல உணவினை ஊட்டுவார். மேலும் வேண்டும் எல்லாவற்றையும் மழைபோலக் கொடுத்து உதவுவார். திருவைந்தெழுத்தை முறையாக ஓதி முத்தீ வளர்த்தது. அவ்வேள்வியைச் சிவனுக்கே உரியதாக்கினார். சிவனடியார்க்கு எக்காலத்தும் இடையறாது கொடுத்தலால் வள்ளல் தன்மையைத் தமதாக்கிக் கொண்டு இறையருளில் இன்புற்றார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் சிறுத்தொண்ட நாயனார்

சோழ நாட்டின் சிறந்த ஊர்களில் முதன்மையானது திருச் செங்காட்டம் குடியாகும். அதில் மாமாத்திரர் குடியில் திருநீற்றுச் சார்புடையவர்களுக்குக் காவல் தொழில் பூண்டவர் பரஞ்சோதியார். ஆயுர்வேதம், படைகலத் தொழில், குதிரை, யானைப் படைத் தொழில் முதலியன கற்றார். அரசனுக்குத் துணையாகப் படையெடுத்து வாதாவி நகரை அழித்தார். பல அரிய பொருட்களைக் கைப்பற்றி அரசனால் பாராட்டப் பெற்றார். சிவனடியார் எனத் தெரிந்த அரசன் வருந்தி அத்தொழிலில் இருந்து விடுவித்தான். செங்காட்டங்குடி வந்த பரஞ்சோதியார் திருவெண்காட்டு நங்கையை மணந்தார். அடியார்களுக்கு முன்பு தம்மைச் சிறியராகக் கொண்டு ஒழுகியமையால் சிறுத்தொண்டர் எனப் பெற்றார். சீராளதேவர் என்னும் திருமைந்தரைப் பெற்றார். அந்நாளில் திருமருகலுக்கு வந்த திருஞானசம்பந்தரை வரவேற்றுத் தம்மனைக்கு அழைத்து வந்தார். சிறுத்தொண்டரையும் சீராளதேவரையும் தம்பதிகத்தில் வைத்து ஞானசம்பந்தர் பாடினார். நாயனாரின் மெய்யன்பை நுகர இறைவர் பயிரவ வேடம் தாங்கி அவர் மனைக்கு வந்தார். வந்தபோது நாயனார் இல்லாமையால் கணபதீச்சரத்திற்குச் சென்று இருப்போம் அவர் வந்தால் கூறு எனச் சொல்லிச் சென்றார். நாயனார் வந்து பயிரவரை அழைத்துச் சென்றார். அமுதுண்ண வேண்டினர். அவரோ நாம் வேண்டுவது மனித இறைச்சி என்றார். ஐந்து வயதுள்ள, ஒரு குடிக்கு ஒரு மகனுள்ள பிள்ளைக்கறி வேண்டுமென்றார். தாய்பிடிக்கத் தந்தை அரிய வேண்டுமென உரைத்தார். சீராளதேவரே பொருத்தமாயிருக்க அமுதாக்கிப் படைத்தனர். அடியாரோடே உண்ணுவேன் என, வேறு அடியார் கிடைக்காமையால் தாமே அமர்ந்தார். மைந்தனே அழையும் என்ன அவன் உதவான் என்றனர். அழைத்தால் வருவானென, பெற்றோர் அழைக்கச் சீராளர் ஓடிவந்தார். பயிரவர் மறைந்தார். உமையம்மையோடும் முருகப் பெருமானோடும் சோமாசுக் கந்தர் நிலையில் காட்சி தந்தருளினார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் கழறிற்றறிவார் நாயனார்

மலை நாட்டைச் சேரர் ஆண்டனர். கொடுங்கோளூர் அதன் தலைநகரம். அங்கு சேரமான் அவதரித்தார். அரசு உரிமைப் பெற்றார். சேரமான் ஒரு நாள் திருவீதி உலா வந்த காலத்து எதிரே ஒரு வண்ணான் வந்தான். அவன் உடம்பு உவர் மண் ஊறி வெண்மையாய் இருந்தது. இவ்வடிவத்தைக் கண்ட சேரர் அடியார் வேடம் என்று நினைத்து யானையில் இருந்து இறங்கி வணங்கினார். சிந்தை கலங்கிய அவன் அடிவண்ணான் என்றான். அரசர் அடிச்சேரர் என்றார். நாள்தோறும் சிவ பூசை செய்தார். ஆலவாய் அண்ணல் ஆணையின் படி பாணபத்திரற்குப் பெரும் பொருள் கொடுத்தனுப்பினார். நாள்தோறும் சிலம்பொலி கேட்டு மகிழ்ந்த நாயனார். ஒரு நாள் சிலம்பொலி கேளாமையால் மயங்கினார். இறைவர் வன்தொண்டரின் பதிகம் கேட்டுக் கொண்டிருந்தமையால் காலதாமதம் ஆனதாகக் கூறினார். நாயனார் வன்தொண்டரைக் காண விரும்பினார். நாயனார் தில்லை சென்று வணங்கிப் பின் திருவாரூர் அடைந்தார். வன்தொண்டருடன் தோழமை கொண்டார். இருவரும் பல தலங்களை வழிபட்டனர். பின்னர் சுந்தரரையும் அழைத்துக் கொண்டு திருவஞ்சைக் களம் சேர்ந்தார். பல நாட்கள் சுந்தரரை வைத்துப் பேணினார். சுந்தரர் அங்கிருந்து திருவாரூர் சேர்ந்தருளினார். சேரமான் தமது நாட்டில் ஆட்சி புரிந்தார். சுந்தரர் மீண்டும் அஞ்சைக்களம் வந்தார். இவ்வாறு இருந்த நாட்களில் ஒரு நாள் சுந்தரர் கயிலை செல்லும் போது சேரமானும் கயிலை சேர்ந்தனர். தமிழில் முதல் உலாவாகிய கயிலை ஞான உலாவைப் பாடியுள்ளார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் கண நாத நாயனார்

உமையம்மையின் ஞானப்பால் அருந்திய திருஞானசம்பந்தர் அவதரித்த திருத்தலம் சீர்காழி. அங்கு மறையவர் குலத்தின் தலைவராக விளங்கியவர் கணநாதர் ஆவார். சீர்காழிப் பதியில் விரும்பி எழுந்தருளி உள்ள திருத்தோணியப்பருக்கு நல்ல திருப்பணிகளை நாள்தோறும் அன்புடன் செய்து வந்தார். அத்தொண்டு புரிகின்ற நிலையில் விருப்புடன் தம்மிடம் வந்து சேரும் அன்பர்களுக்குத் தூய திருத்தொண்டாகிய சரியை நிலைகளில் துறைதோறும் பயிலச் செய்வார். நந்தவனத்தில் பணிசெய்வோர், மலர் கொய்வோர். பல்வகைப்பட்ட மலர்மாலைகளைப் புனைவோர், திருமஞ்சன நீர் கொணர்வோர், இரவும் பகலும் திருவலகும், திருமெழுக்கும் அமைப்போர், திருவிளக்கு எரிப்போர், திருமுறைகளை எழுதுவோர், அவற்றை ஓதுவோர் இவ்வாறு அனைவரையும் பயிற்று வித்தார். அவ்வவர்க்கு ஏற்ற வகையில் அவ்வத் திருத்தொண்டுகளில் செயல் விளங்கும்படி தொண்டர்களின் குறைநீக்கி நிறைவாக்கினார். அவ்வாறாகிய அத்திறங்களைச் செய்தமையால் தொண்டர்கள் பெருகினர். அன்பு பொருந்திய வாய்மையுடைய இல்லறத்தை நடத்தினார். ஒவ்வொரு நாளும் மூன்று பெரும் பொழுதுகளிலும் அர்ச்சனை, வழிபாடு முதலியன செய்து மேலோங்கி வாழ்ந்தார். இவ்வாறாகிய பெரும் சிறப்பினைப் பெற்ற நாயனார் அடியவர்களின் உள்ளங்களில் எல்லாம் வீற்றிருக்கின்ற திருஞானசம்பந்தரது திருவடிகளைப் பொருந்தி வாழ்ந்தார். அதன் பயனாகத் திருக்கயிலையை அடைந்து சிவகணங்களுக்குத் தலைவராகும் பேறு பெற்றார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் கூற்றுவ நாயனார்

களந்தை முதல்வராகிய கூற்றுவ நாயனார் பகைவர்களை எதிர்த்து நின்று பலபோர்களில் வென்றார். சூலப்படையினை ஏந்திய சிவபெருமானது நல்ல திருப்பெயரைத் தமது நாவினால் நாள்தோறும் சொல்லும் நன்மை மிக்கவர். பல நாட்கள் அடியார்களின் பாதங்களைப் பணிந்து துதித்துத்திருத் தொண்டில் முன்நின்றார். இறைவன் திரு அருள் துணையினால் அரசர்களும் அஞ்சி ஒதுங்கிக் கீழாகும் படி நில முழுதும் தம் ஆட்சியின் கீழ்க்கொண்டுவந்தார். யானைகள், குதிரைகள், தேர்கள், படைவீரர் முதலிய பகைவர் பொருள்களைத் தமதாக்கினார். வெற்றி பெறும் செயலில் மேம்பட்டு அரசர்களுடன் போரிட்டுப் போர்த் தொழில்களை முடித்தார். போர்த் தொழில்களில் வெற்றி பெற்றபின், மணமுடைய வாகைமாலை சூடினார். தோற்ற அரசர்களின் வளம் பொருந்திய நாடுகளைக் கைக்கொண்டார். அரசர்க்கு உரிய முடி நீங்கலாக ஏனைய அரசர்க்குரிய செல்வங்கள் எல்லாவற்றையும் உடையவரானார். நவமணிகள் பொருந்திய பெரிய மகுடத்தைச் சூட்டும் படி தில்லைவாழ் அந்தணர்களிடம் கூறினார். அவர்கள் சோழர் குலத்தவர்க்கு அன்றிப் பிறர்க்கு முடி சூட்டமாட்டோம் எனக் கூறிச் சேர நாட்டை அடைந்தனர். இதனால் நாயனார் தில்லை அம்பலவாணரிடம் உமது மலர்போன்ற பாதங்களை மணிமுடியாகச் சூடும் பேறு அடியேன் பெறவேண்டும் என வேண்டித் துயின்றார். அன்றிரவு கனவில் இறைவன் அவருக்குத் தமது பாதங்களை மணி முடியாகச் சூட்டி அருளினார். அப்பாதங்களையே மணி முடியாகத் தாங்கிக் கொண்டு உலகமெல்லாம் ஆட்சிபுரிந்தார். அழகிய பொன்னம்பலத்தில் திருநடம் புரிகின்ற பெருமான் இந்நிலவுலகில் அருளுகின்ற பல திருக்கோயில்களிலும் பெரும்பூசைனைகள் செய்வித்துச் சிவபெருமான் திருவடியை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்

பொய்யடிமை இல்லாத புலவர்

செய்யுளாக மாறுகின்ற சொற்களைத் தெளிதலையும், செம்மைதரும் பயனுடைய பல நூல்களை நோக்குதலையும், உண்மையாக உணர்கின்ற உணர்ச்சியின் பயன் ஆவது இதுவேயாகும் என்று துணிபவர் பொய்யடிமை இல்லாத புலவர் ஆவர். விளங்கி ஒளி வீசுகின்ற விடத்தினை அணிகின்ற கண்டத்தினை உடைய இறைவனுடைய மலர் போன்ற திருவடிகளுக்கு ஆளானவர்கள். அழகிய பாம்புகளை அணிந்த புரிசடையினை உடைய சிவபெருமானை அன்றி வேறு சொற்பொருள்களைச் சொல்லாத தன்மையுடையவர். திருத்தொண்டின் நெறியில் முன்நிற்பவர். அவர்களுடைய பெருமையினை யார் அறிவார்? அத்தன்மையுடைய பொய்யடிமை இல்லாத புலவர்களுடைய திருவடி இணைகளை எமது தலைமேல் சூட்டிக்கொள்கின்றோம். பொய்யடிமை இல்லாத புலவர்கள் எனக் கூறப்படுவோர் உலகில் பொய்மையில்லாத தமிழ்ச் சங்கத்தில் இருந்தவர்கள். கபிலர், பரணர், கீரர் முதலாகிய நாற்பத்தொன்பது என்று தொகுத்துக் கூறப்பட்டுள்ள தொகுதியில் உள்ள புலவோராவர். இவர்கள் நமக்கு அருள்புரிகின்ற திருஆலவாய் இறைவரது சேவடிக்கே சேரும் பொருளை அமைத்து இன்பமயமான பல கவிகளை ஆக்கும் ஆற்றலுடையோர் ஆவர். பொய்யடிமை இல்லாத புலவர் தொகையடியார் ஆவர். 'பொய்யாச் செந்நா' என்று கருவூர்கந்தப் பிள்ளை சாத்தனாரும், 'செந்நாப்புலவர் என்று கபிலரும். 'பீடின் மன்னர் புகழ்ச்சி வேண்டிச், செய்யாக் கூறிக்கிளத்தல், எய்யாதாகின்று எம்சிறுநாவே' என்று வன்பரணரும் பாடிய சங்க காலப்புலவர் மரபினரே பொய்யடிமை இல்லாத புலவர் ஆவர். மறைமலையடிகளார் பொய்யடிமையில்லாத புலவர் என்பது மாணிக்கவாசகரைக் குறிக்கும் என்று ஆய்ந்து கூறியுள்ளார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் புகழ்ச்சோழ நாயனார்

இமயத்தின் உச்சியில் புலிக்கொடி பொறித்து, கொற்றக் குடைநிழலில் உலகம் காத்து வரும் தமிழ் அரசர்கள் ஆண்ட வளநாடு சோழநாடு. அதன் தொன்மையான ஊர் உறையூர். அதனைத் தலைநகராகக் கொண்டு ஆண்டவர் புகழ்ச் சோழர். இறைவன் வீற்றிருக்கும் தலங்களை வழிபட்டு, அடியார்க்கு வேண்டுவன கொடுத்துத் திருநீற்று நெறியைப் பாதுகாத்தார். இத்தகுநாளில் கொங்கரும், மேற்றிசை அரசர்களும் கப்பம் செலுத்த வசதியாகக் கருவூருக்கு வந்தார். பலரும் திறை செலுத்தினர். திரை செலுத்தாத அரசர் உளரோ என அமைச்சர் பால்கேட்டு இவ்வாறு இறைமுறை புரிந்தார். இத்தகுநாளில் ஒரு நாள் சிவகாமியாண்டாருக்காக எறிபத்தர் புகழ்ச்சோழரின் பட்டத்துயானையைக் கொன்ற நிகழ்ச்சி நடந்தது. திரை செலுத்தாத அரசன் ஒருவன் இருப்பதை அறிந்து அரசர் அதிகன் என்னும் அந்த மாற்றரசன் மேல் போர் தொடுக்க ஆணையிட்டார். இருதிறத்துப் படைகளும் பெரும் போர் செய்தன. போரின் முடிவில் சோழர் படை வென்றது. அதிகன் போரில் தோற்றான். பகைவீரர்களின் தலைக்குவியல்களின் கூட்டம் எண்ணில்லாதவையாகச் சோழர் முன்னிலைக்கு அனுப்பப் பெற்றன. அரசர் அவற்றைக் கண்ணுற்றார். ஒரு தலையின் உச்சியில் ஒருசிறு சடையினைக் கண்டார். உடல் நடுங்கி, மனம் கலங்கினார். பெரும் பயத்துடன் அச்சடையை நன்கு விளங்கும்படி பார்த்தார். கண்களில் கண்ணீர் பொழிய நின்றார். திருநீற்றுநெறியை நான் பாதுகாத்து அழகியதாயிற்று என நொந்தார். எனது மகனுக்குப் பட்டம் சூட்டுங்கள் என ஆணையிட்டார். எரிவளர்த்துச் சடைமுடி உடைய அத்தலையைப் பொன் தட்டில் ஏந்தித் திருவைந்தெழுத்தை ஓதிக்கொண்டே உட்புகுந்தார். சிவபிரானின் திருவடி நிழலின் கண் நீங்காத நிலையில் இருந்தார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் நரசிங்க முனையரைய நாயனார்

அறம் தவறாத நெறியில் விளங்கும் சிற்றரசர் மரபில் தோன்றித் திருநீலகண்டப் பெருமானுடைய திருநீற்றினை மனதில் கொள்பவர்நரசிங்க முனையரையர். தேடிப் பெற வேண்டாது இயல்பாகவே பெருவளங்களில் சிறந்த திருமுனைப்பாடி நாட்டை அவர் ஆண்டார். இவ்வரசர் பகையரசர் பலரை வென்று தீமைகள் நீங்க இருந்தார். மும்முனைகளையும் இலை வடிவினதாகவும் உள்ள சூலப் படையினை உடைய சிவபிரானின் அடியவர்கள் திருவடிகளை அடைவதுவே அரிய பேறு எனக் கொண்டார். சினவிடைமேல் எழுந்தருளும் இறைவனின் திருக்கோயில்தோறும் செல்வங்கள் பெருகுமாறு செய்து, உயிரை விடச் சிறந்ததாகிய சிவநெறியைக் காத்து வந்தார். கனவிலும் தம் கடமையைப் பிறழாது செய்பவரானார். சிவபெருமானுக்குத் திருஆதிரை நாள்தோறும் பூசை செய்து, திருநீறு அணிந்த திருத்தொண்டர்களாய் அன்று வந்தோர்க்கெல்லாம் நூறு பசும் பொன் அளித்து அமுதூட்டுவார். அத்தகு நாளில் மானம் அழியும் காம அடையாளங்களுடன் ஒருவர் திருநீறு பூசியவாறு வந்தார். ஏனையோர் அவரை இகழ்ந்து வெறுத்து ஒதுக்கினர். உலகியல் நெறியாகிய ஒழுக்கம் இல்லாதவராயினும் திருநீற்றினைச் சார்ந்த அடியவர்களை உலகத்தார் இகழ்ந்து நரகமடையாமல் உய்ய வேண்டும் என்னும் எண்ணம் கொண்டார். நரசிங்கமுனையரையர் அவரை அன்புடன் வரவேற்று இனிய மொழி கூறி ஏனையோர்க்குக் கொடுத்ததை விட இரட்டிப்பாக இருநூறு பொன் தந்தார். சுந்தரர் குழந்தையாக இருந்த போது தெருவில் தேருருட்டி விளையாடிய அழகு கண்டு அவரைத் தனது அரண்மனைக்கு எடுத்துச் சென்று வளர்த்தார். திருத்தொண்டின் நெறி நின்று முத்திப் பேறடைந்தார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் அதிபத்த நாயனார்

கதிரவன் வழிவந்த பழமையான சோழர்களுக்கு உரிமை உடையது நாகப்பட்டினம். அது கற்பகப் பூங்கொடியில் பூத்த மலர் போன்றது. பொன்னொளி மின்னும் மாளிகைகளை உடையது. மேலும் பல வளங்கள் உடைய கடல் போலவும், உலகைத் தனக்குள் காட்டுகின்ற கண்ணாடி மண்டலம் போலவும் அந்நகர் இருந்தது. அந்நகரின் பக்கத்தில் பரதவர் குடிகள் நிறைந்த பரதவச்சேரி இருந்தது. மீன்வலை விரிப்போர், விற்போர், வாங்குவோர் ஓசை நிரம்பி இருந்தது. இத்தகு நுளைப்பாடியில் பரதவர் குலத்தில் அவதரித்தவர் அதிபத்தர். இறைவனின் திருவடிகளுக்குத் தொண்டுபுரியும் இயல்பினர். அவர் அப்பரதவர்களின் தலைவராக விளங்கினார். பிடித்த மீன்களில் முதலில் அகப்பட்ட மீனைச் சிவபெருமானுக்கெனக் குளிர்ந்த கடலில் விட்டு விடுவார். வலையில் பல நாட்களாக ஒரு மீன் மட்டுமே அகப்பட்டது. அதனை எப்போதும் போல இறைவர்க்காகுக எனக் கடலில் விட்டார். தாமும், உறவினர்களும் உணவின்றி வருந்தினர். ஆனால் இறைவன் இத்தொண்டரது அன்பு என்னும் அமுதத்தை உண்டு கொண்டிருந்தார். இவ்வாறு உள்ள நாட்களில் ஒரு நாள் பொன்னும் மணியும் கொண்டு மீன் உறுப்புக்கள் உளதாகும் படி ஒரு மீன் வலையில் கிடைக்கும் படி செய்தான் இறைவன். அஃது உலகம் அடங்கும் விலை மதிப்புடையது. பரதவர் அதிசயத்துடன் நாயனாரிடம் தந்தனர். அதனை வாங்கிய அதிபத்தர் பொன்னொளி மின்னும் இம்மீன் எம்இறைவனின் பொன்னார் திருவடிக்காகுக என மீளவும் கடலில் விட்டார். பொருளை முன்னாகக் கொண்டே உலகம் செல்லும் என்னும் பொன்னாசை ஆகிய பொருட்பற்றினை நாயனார் நீக்கினார். இடபவாகனத்தில் இறைவன் எழுந்தருளிக் காட்சி தந்தார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் கலிக்கம்ப நாயனார்

நல்லொழுக்கத்தில் சிறந்த தொன்மையான மரபில் இல்லற நெறியில் செழித்தோங்கும் குடிகள் வாழும் ஊர் பெண்ணாகடம் எனனும் மூதூர். அவ்வூரில் வணிகர் குலத்தில் கலிக்கம்பர் அவதரித்தார். நாள்தோறும் திருத்தூங்கானை மாடத்தில் எழுந்தருளியுள்ள இறைவனின் திருவடிக்குத் தொண்டு புரிபவர். அடியார்க்கு அமுதளிக்கும் அரிய தொண்டு புரிந்தவர். திருவமுதுடன் காய்கறிகள், கனிவகைகள், கரும்பின்கட்டி இவற்றைக் கொடுத்து உபசரிப்பார். திருவமுது செய்விப்பதற்கு முன்னர் அடியார்களின் திருப்பாதங்களை நீருற்றி விளக்குவார். இவ்வாறு உள்ள காலத்தில் ஒருநாள் நாயனார் வீட்டில் முன்பு பணிபுரிந்த ஏவலர் ஒருவர் அப்பணியை விட்டு இறைவனுடைய அடியார் ஆனார். அடியவர்களுடன் நாயனார் வீட்டுக்கு எழுந்தருளினார். நாயனார் அவர் பாதம் விளக்க நீர்வார்க்கின்ற தொழிலுடைய அம்மையார் முன்பு இவர் நம் ஏவலர் அல்லரோ என எண்ணித் தாமதிக்கவே நாயனார் அம்மையாரைப் பார்த்தார். அடியார் என்று எண்ணாமல் காலம் தாழ்த்தியமையால் வடிவாளை எடுத்து அம்மையாரின் கரத்தினைத் தறித்தார். கலத்தில் நீரெடுத்துத் திருவடிகளை விளக்கினார். பின்னர் அமுது செய்தலுக்குரிய செயல்பாடுகளையும் தாமே செய்தார். சிறிதும் மனத்தளர்ச்சி இன்றித் திருவமுது செய்வித்தார். திருத்தொண்டின் வழிநின்று மீளாநெறி அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் கலிய நாயனார்

நிலவுலகில் புகழினால் ஓங்கிய பெருமை உடையது தொண்டை நாடு. அந்நாட்டில் தேர் உலவுதற்கு இடமாகிய நீண்ட வீதிகளை உடையது திருவொற்றியூர் என்னும் ஊர். திருப்பதிகங்கள் பாடும் மண்டபங்கள் பல உள. மகளிர் ஆடுகின்ற அரங்குகளும் பல உள. எண்ணெய் ஆட்டும் செக்கார் குலத்தில் கலியநாயனார் தோன்றினார். அக்குலம் விளக்கம் பெறத் தோன்றிய நாயனார் சைவத்தில் மேலோங்கி விளங்கினார். அளவற்ற செல்வத்திற்கு உரிமை உடையவராக இருந்தார். ஒற்றியூர்ப் படம்பக்க நாதர் திருக்கோயிலில் இரவும் பகலும் திருவிளக்கிடும் பணிபுரிந்தார். எண்ணில்லாத திருவிளக்கிடும் அத்தொண்டரின் செயலை உலகறியச் செய்ய இறைவன் எண்ணினார். அவருடைய பெருஞ்செல்வம் அழிந்தது. இருப்பினும் தாம் செய்யும் தொண்டினைத் தொடர்ந்து செய்து வந்தார். பிறரிடம் எண்ணெய் வாங்கி விற்றுக் கொடுத்து அவர்கள் தரும் கூலிகொண்டு விளக்கெரித்தார். பின்னாளில் எண்ணெய் விற்றுத்தரக் கொடுப்போர் இலர் ஆகவே செக்காடும் இடத்தில் சென்று செக்காட்டிப் பணி செய்தார். தொழில் செய்வோர் பலர் உளராகவே தொழில் செய்ய வழியின்றிப் போனார். தமது ஒப்பற்ற வீட்டினை விற்று விளக்கெரித்தார். பின்னர் தமது மனைவியாரை விற்க முயன்றார். வாங்குவோர் இன்மையின் வருந்தித் திருக்கோயிலை அடைந்தார். விளக்கேற்றும் நேரம் வரவே இப்பணி நின்றுவிடுமானால் நான் மாண்டு விடுவதே நலம் என நினைத்தார். விளக்குகளுக்கெல்லாம் திரியிட்டுப் பரப்பி வைத்து எண்ணெய்க்குப் பதிலாகத் தமது குருதியை நிறைக்க எண்ணிக் கழுத்தை அரிந்தார். இறைவன் பெருகும் கருணையுடன் தோன்றிக் கைகளைப் பிடித்துக் காட்சி கொடுத்தார். திருவருள் பெற்றார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் சத்தி நாயனார்

எட்டுத் திசைகளிலும் கொட்டும் முரசறைந்து வெற்றித் தூண் நட்டவர்கள் சோழர்கள், காவிரிபாயும் அந்நாட்டில் வரிஞ்சையூர் உள்ளது. அது மள்ளர் களையாகக் களைந்து எறிந்த தாமரைகள் பொழியும் தேனானது குளம்நிறையும் தன்மை உடைய ஊராகும். அங்கு வாய்மைப் பண்புடைய வேளாளர் குலத்தில் ஒருவர் தோன்றினார். அவர் பிரமன் முதலிய தேவர்களும் எண்ணுதற்கு அரிய சிலம்பணிந்த திருவடிகளுக்கு அன்பு செய்பவர் ஆவார். தலைவராகிய சிவபெருமானின் அடியவர்களை இகழ்ந்து சொல்லும் நாவினை இழுத்து அரியும் ஆற்றல் உடையவர். சத்திநாயனார் என்னும் பெயர் பெற்றவர். சிவனடியார்களை இகழ்ந்து கூறுவாரின் நாக்கினைக் குறடு போன்ற கருவியினால் இழுத்துக் கூரிய கத்தியால் அரிந்து அன்புடன் ஓங்கும் சிறப்புடைய திருத்தொண்டில் உயர்ந்து விளங்கினார். இத்தன்மைத்தாகிய ஆண்மையுடைய திருத்தொண்டை, நிலைபெற்ற பெரிய உலகில் பற்பலகாலம் இடைவிடாது செய்துவந்தார். கங்கையைத் தலையில் தாங்கிய இறைவனது திருப்பணி செம்மையுடன் நடைபெற்றது. நாவினை அரிதல் தருமமாகுமோ என்ற ஐயத்திற்கு இடமின்றி வீரத்தொண்டு புரிந்த சத்தியார் உலகம் உய்யும் பொருட்டுத் திருவம்பலத்தில் திருநடம்புரியும் தம்பிரானார் தாள்நிழல் சேர்ந்தருளினார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் ஐயடிகள் காடவர் கோன் நாயனார்

காஞ்சிபுரத்திலிருந்து ஆட்சி செய்த பல்லவர்களில் ஐயடிகள்காடவர்கோன் ஒருவர். அறநெறிமுறையில் செங்கோலாட்சி செய்தார். பகைவென்றார். தமிழ்மொழி, வடமொழி நூல்களில் வல்லவர், அரசியல் துன்பம் தருவது சிவபக்திக்கு இடையூறாகும் என்று எண்ணினார். தம் மகனுக்கு முடிசூட்டி விட்டுச் சிவப்பணியில் ஈடுபட்டார். சிவபெருமான் வீற்றிருந்து அருள் புரியும் திருக்கோயில் எல்லாவற்றையும் நேரில் கண்டு வழிபடத்துணிந்தார். ஒவ்வொருதலத்தையும் வழிபட்டுத் திருத்தொண்டு செய்து வந்தார். ஒவ்வொரு தலத்துக்கும் ஒவ்வொரு வெண்பாப் பாடித்துதித்தார். பொங்கி எழுங்காதல் கொண்டு தில்லை நகர் சென்றார். கூத்தப்பெருமானின் ஆடல் கண்டு மனம் உருகினார். செந்தமிழ் வெண்பா தில்லைக்குப் பாடினார். ஐயடிகள் காடவர்கோன் தில்லைக் கூத்தரை வழிபட்டுத் திருவருள் பெற்றுச்சில நாள் தங்கியிருந்தார். பின் பிறசிவத்தலங்களுக்குச் சென்று வெண்பாக்கள் பாடித்துதித்தார். சிவனடியார்கள் இன்பம் பெறுவதற்காகத் தமக்கிசைந்த பணிகளைப் பல நாட்கள் செய்து வந்தார். இவ்வுலக வாழ்வை நீத்துச் சிவபெருமான் திருவடியின் கீழே வழிவழியாக நிற்கும் அடியார்களுடன் சேர்ந்து பேரின்பம் பெற்றார். ஐயடிகள் காடவர் கோன் பாடிய சேத்திர வெண்பா 11ஆம் திருமுறையில் இடம் பெற்றுள்ளது. 24 வெண்பாக்கள் மட்டும் கிடைத்துள்ளன. உடல் வலிமை உள்ள போதே இறைவன் திருவடியை வணங்க வேண்டும் என்றும் கூறும் முறையில் நிலையாமையை வற்புறுத்துவது.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் கணம்புல்ல நாயனார்

வடவெள்ளாற்றின் தென்கரையில் பொழில்கள் சூழ உள்ள ஊர் இருக்கு வேளூர். பலாப் பழங்களின் நீண்ட சுளைகளிலிருந்து பொழிந்த தேன் மடுவினை நிரைப்ப வயல்களில் விளையுள் சிறக்கும். அவ்வூரில் வாழும் குடித் தலைவர்களுக்கெல்லாம் தலைவராய் உள்ளவர் கணம்புல்லர். எல்லை காண இயலாத பெரும் செல்வம் உடையவர். ஒப்பில்லாத பெருங்குணத்தால் உலகத்தில் மேன்மையுடன் வாழ்ந்தார். இறைவன் திருவடிகளே மெய்ப்பொருள் எனக் கொண்டு வாழ்ந்தார். குறையாத பெரும் செல்வத்தின் பயன் இதுவே எனக் கொண்டு ஒளிகுறையாத திருவிளக்குகளைச் சிவபிரான் திருக்கோயிலில் எரித்து நாவாரத் துதிப்பார். வறுமை வந்த காரணத்தால் அவ்வூரை விட்டுத் திருத்தில்லை சென்றார். தில்லைக் கூத்தரின் திருவடி வணங்கினார். திருப்புலீச்சரம் திருக்கோயிலில் விளக்கு ஏற்றத் தம் மனையிலிருந்த பொருள்களை விற்றார். அப்பொருளால் வந்த செல்வத்தால் விளக்கு ஏற்றி முடிந்த பின்னர் வேறு என்ன செய்வதென நாயானார் சிந்தித்தார். கணம்புல்லினை அரிந்து கொண்டு வந்து விற்றுக் கிடைக்கும் பணத்தால் விளக்கேற்றினார். இவ்வாறு உள்ள நாளில் கணம்புல்லும் விலைபோகாமையால் பணம் கிடைக்கவில்லை. எனவே அப்புல்லினையே விளக்காக எரித்தார். யாமம் வரை எரிக்க அப்புல் போதவில்லை. ஆதலால் தம்திருமுடியினையே எலும்பு கரையும் படித் தீமுட்டி எரித்தார். திருத்தொண்டரிடம் கருணை வைத்த கண்ணுதற்கடவுள் சிவனுலகில் சேர்த்தருளினார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் காரி நாயனார்

அறவோர்கள் மிகுதியாக வாழ்கின்ற ஊர் திருக்கடவூர். அவ்வூரில் பிறந்தவர் காரி நாயனார். வளப்பமுடைய தமிழின் இனிய துறைகளிலாய பயனை அறிந்தவர். சொல்லும் பொருளும் விளங்கத் தமிழ்க் கோவையினைத் தமது பெயராலே காரிக்கோவை ஒன்று இயற்றியவர். சேர சோழ பாண்டியர்களாகிய முப்பெரும் அரசர்களிடமும் பழகி வந்தார். அம்மன்னர்கள் மகிழும் வகையால் பொருளுக்கேற்ற சொற்களைப் பாடல்களால் விளங்க எடுத்துரைத்தார். அவ்வரசர்களிடம் பெற்ற செல்வ வளங்களைக் கொண்டு இளம்பிறை அணிந்த இறைவன் இனிதாக வீற்றிருக்கும் கோயில்கள் பலவற்றை அமைத்தார். யாவருக்கும் மனமகிழ்ச்சி உண்டாகுமாறு இனிய பயனுடைய சொற்களைப் பகர்வார். தேவதேவனாகிய சிவபெருமானின் அடியார்கள் எல்லார்க்கும் பெருஞ்செல்வம் அளிப்பார். விடையேறிய பெருமானின் திருக்கயிலாயத்தை எப்போதும் மறவாத சிந்தை உடையவர். கடல் சூழ்ந்த இந்த நில உலகில் எல்லா இடங்களிலும் தமது புகழ் நிலைநிற்குமாறு செய்தவர். கங்கையைத் தனது சடையில் தாங்கிய இறைவன் திருவருளை முழுமையாகப் பெற்றார். மனமானது எப்போதும் வடகயிலையைச் சார்ந்து இருந்தது போலவே உடலாலும் அதனைச் சார்ந்து பெருவாழ்வு கொண்டார். தேன் பொருந்திய மலராகிய கொன்றையை அணிந்த இறைவனின் திருவடியைப் பேணும் காரியாரின் கழல்கள் நம்மால் வணங்கத்தக்கன.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் நின்ற சீர் நெடுமாற நாயனார்

தடுமாற்றத்தைத் தருகின்ற குற்றமுடைய நெறியே தவநெறி எனக்கொண்டு, தமது உடலை வருத்துகின்ற செயல்களைச் செய்து தீயவழியில் ஒழுகுபவர் சமணர். அவர்களது சூழ்ச்சியில் அகப்பட்டுப் பின்னர் அதிலிருந்து விடுபடும் படி செய்தவர் திருஞானசம்பந்தர். அத்தகு நெடுமாறர் பெருமை ஏழு உலகிலும் நிறைந்து விளங்கியது. அக்காலத்துத் திருஞானசம்பந்தர் திருவருளால் பாண்டிநாட்டில் சைவம் பொலிவுற்றது. நெடுமாறனார் சைவ நெறியில் நின்று அதனைக் காத்து வந்தார். வட நாட்டிலிருந்து படையெடுத்து வந்த அரசர்களைத் திருநெல்வேலிப் போர்க்களத்தில் எதிர்நின்று வென்றார். களத்தில் உக்கிரகுமார பாண்டியர் கடல் வற்றும்படி வேலெடுத்தது போல இப்பாண்டியரும் வேலெடுத்து வீரப் போர்புரிந்து நின்றார். பாண்டியருக்குரிய வேப்பமாலையச் சிறப்பாக அணிந்தவர். சோழர் பெருமானின் திருமகளாகிய மங்கையர்க்கரசியாரின் உள்ளம் கவர்ந்தவர். இளநாகத்தையும், வெள்ளிய பிறையினையும் அணிந்த பெருமானுக்கு ஏற்ற திருத்தொண்டுகள் அளவின்றிச் செய்து சிவனருள் பெருகும்படி அரசுபுரிந்தார். நெடுநாள் நல்லாட்சி புரிந்து சிவனுலகு அடைந்தார். குலச்சிறையார் இவருடைய அமைச்சர் ஆவார். திருஞானசம்பந்தரின் திருவடிச் சார்பால் சைவம் சார்ந்த நெடுமாறரின் பாத தாமரைகள் நம்மால் வணங்கத்தக்கன.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் வாயிலார் நாயனார்

நூல்களில் எடுத்துக் கூறப் பெற்றவாறு புகழ்ச் சொற்கள் விளங்கும் சிறப்புடையது தொண்டைநாடு. வாய்மையால் சிறந்த வளமுடைய பதியாவது மயிலாப்பூர். பழம் பெரும் செல்வக் குடிகளை வழிவழியாக உடையது. கடல் தன்னிடமுள்ள பவளம், முத்து முதலியவற்றைச் சேமித்து வைக்கும் பண்டாரம் இதுவென நினைந்த இந்நகரத்திற்குப் பெரும் செல்வம் தரும். அயல்நாடுகளிலிருந்து கொண்டு வரப்பெற்ற யானைக்கன்றுகள், இளமைத் தன்மை பொருந்திய எருமைகள் இவை கடற்கரையில் படிந்துள்ள கரியமேகங்களினால் அடையாளம் தெரியாதனவாயிருந்தன. இத்தகு மயிலாப்பூரில் வேளாளர் குலத்தில் வாயிலார்குடியில் தோன்றியதால் வாயிலார் என வழங்கப் பெற்றார். தலைவராகிய சிவபெருமானின் திருத்தொண்டில் அன்பு பொருந்திய விருப்பத்துடன் விளங்கினார். மறவாமை என்னும் கருவியினால் மனமாகிய கோயிலில் இறைவனை எழுந்தருளச் செய்தார். சிவஞானம் என்னும் ஒளிவீசும் சுடரினை ஏற்றினார். அழிவில்லாத பேரானந்தமாகிய நீரினால் திருமஞ்சனம் ஆட்டினார். அன்பு என்னும் அமுதை ஊட்டினார். இவ்வாறு அகப்பூசை புரிந்து வாழ்ந்தார் வாயிலார் நாளதோறும் இவ்வாறே சிறந்த பூசனை புரிந்த நாயனார் சிவனுலகு சேரும் சிறப்புப் பெற்றார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் முனையடுவார் நாயனார்

பகைமையை வென்று உலகினைக் காப்பவர் சோழர். அவர்தம் நாடு நீர் வளமும் நிலவளமும் மிக்கது. மலர்கள் விரிந்து மணம் பரப்பித் தேன் பிலிற்றுவன. அத்தேன் ஆற்றின் வழிச்சென்று வயலில் சேரும். உழவர் உழுகின்ற சேறும் நறுமணம் பொருந்தியது. இத்தகு செல்வமுடைய ஊர் நீடூர். இங்கு வள்ளல் தன்மை மிகுந்த வேளாளர் மரபில் தோன்றியவர் முனையடுவார். சிவனடிமைத் திறம் சிறந்தவர். பகைவரைப் போரில் வென்று அதனால் வரும் செல்வத்தைக் கொண்டு இறைவன் அடியார்க்கு உதவி வந்தார். பகைவர்க்குத் தோற்றவர்கள் இவரிடம் வந்து கேட்டால் அவர்க்குத் துணையாகச் சென்று பகை வெல்லுவார். அதன் பொருட்டு வரும் பொன்னைக் கொண்டு வாழ்ந்தார். தூய்மையான திருவமுது, சர்க்கரை, நெய், கறி, பால், தயிர், கனி முதலியன தந்து அமுதூட்டுவார். இந்நிலையிலேயே இருந்து பலகாலம் தொண்டுபுரிந்தார். அதனால் உமையம்மையை ஒருபாகம் கொண்ட சிவபிரானுடைய அன்புக்கு ஆளானார். சிவனுலகில் மீண்டுவாரா நெறிபெற்று இனிதிருந்தார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் கழற் சிங்க நாயனார்

காடவர் குலம் விளங்கத் தோன்றியவர் கழற்சிங்கர். மேருமலையை வில்லாகக் கொண்ட இறைவனின் திருவருளால் போருக்குச் சென்று வடபுலத்து நாடுகளை வென்றார். அறநெறிதவறாது ஆட்சி புரிந்தார். நில உலகில் உள்ள சிவன்கோயில்கள் பலவற்றையும் அன்புடன் வணங்கித் திருத்தொண்டு புரிந்தார். சிவநகர் எனப் பொலியும் திருவாரூர் சேர்ந்து திருக்கோயிலை அடைந்தார். முரசுகள் ஒலிக்க ஐம்பெரும் குழுவுடன் அரசராகிய கழற்சிங்கர் புற்றிடங்கொண்ட புனிதரைப் போற்றித் தொழுதார். அப்போது அக்கோயிலில் உள்ள பெருமைகளை எல்லாம் தனித்தனியே பார்த்து வந்த அரசி அங்கிருந்த திருப்பள்ளித்தாம மண்டபத்தில் ஒரு பூவினை எடுத்து முகர்ந்து பார்த்தாள். இதனைக் கண்ட செருத்துணையார் என்னும் தூய தொண்டர் இறைவனுக்குரிய பூவினை மோந்தனள் என்று அவள் மூக்கினைப் பிடித்து அரிந்தார். குருதி பொங்கி வழிய, கூந்தல் அவிழ்ந்து அலையச் சோர்ந்து வீழ்ந்தனள். அப்போது இறைவனைக் கும்பிட்டுவிட்டு அரசரும் அங்கே வந்தார். இப்பெரிய நிலவுலகில் இக்கொடிய செயலை அச்சமின்றிச் செய்தவர் யாரெனக் கேட்டார். அங்கிருந்த செருத்துணையார் நிகழ்ந்தது கூறினார். அது கேட்ட நாயனார் தம் உடைவாளை எடுத்துப் பூவினைத் தொட்டு முன்னர் எடுத்த கையே முதலில் துணிக்கப்பட வேண்டுமெனக் கூறி அவளது செங்கரத்தினை வெட்டினார். தொண்டர்கள் அரஅர என ஒலிஎழுப்பினர். வானுலகிலிருந்து வானவர் பூமாரி பொழிந்தனர். நீண்ட நாட்கள் தொண்டு செய்து சிவனடி சேர்ந்தார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் இடங்கழி நாயனார்

மணம் கமழும் செந்தாமரையில் உள்ள தேனை வண்டுகள் பருகுதற்கு இடமாயுள்ள அழகிய பொய்கைகளை உடைய கோனாட்டின் தலைநகர் கொடும்பாளூர், இன்றைய புதுக் கோட்டை மாவட்டத்தில் கொடும்பாளூர் உள்ளது. அந்நகரில் வேளிர் குலத்தில், அழகிய தில்லைப் பொன்னம்பலத்தைக் கொங்குநாட்டுப் பொன்னால் வேய்ந்த ஆதித்த சோழனுடைய மரபில் இடங்கழியார் தோன்றி ஆட்சி புரிந்து வந்தார். சிவபெருமானது திருவடி அன்றி மற்றதைக் கனவிலும் கருதாதவர். சிவனடியார்களுக்கு வேண்டிய அனைத்துப் பணிகளையும் செய்தார். சைவ நெறி தழைக்க இறைவன் வீற்றிருக்கும் திருக்கோயில்களில் வழிபாடுகள் சிறந்தோங்கும் படி செய்தார். இவ்வாறு இருந்த நாளில் இறைவனது அடியார்க்கு அமுதளிக்கும் தொண்டர் ஒருவர் தமது செயலைத் தொடர்ந்து செய்துவந்தார். பொருளின்றி இருந்த அவர் யாது செய்வதெனத் தெரியாமல் இடங்கழியாரின் அரண்மனையில் நள்ளிரவில் புகுந்தார். பண்டாரத்தில் இருந்த நெற்குவியலை வாரி எடுக்கக் காவலர் கைப்பற்றி அரசர் முன் நிறுத்தினர். நிகழ்ந்ததைத் தொண்டர் அரசரிடம் கூறினார். அரசர் அவர்பால் மிகவும் இரக்கப்பட்டு இவரல்லரோ எனக்குப் பண்டாரம் என மகிழ்ந்தார். நெல்மட்டுமின்றி ஏனைய அனைத்துச் செல்வங்களையும் அடியார்கள் கவர்ந்து கொள்ளலாம் எனப் பறை சாற்றினார். தாம் பெற்ற செல்வத்தின் பயனை அடைந்தார் இடங்கழியார். நீண்ட காலம் ஆட்சி செய்து சிவனடி அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் செருத்துணை நாயனார்

காவிரி நீரானது மதகுகளின் வழியே கயல்மீன்களையும் செழுமணிகளையும் தள்ளுகின்ற வளம் பொருந்தியது மருகல் நாட்டுத் (கீழை) தஞ்சாவூர். அகமும், புறமும் குலமரபு ஒழுக்கத்திலிருந்து பிறழாத பழங்குடிகள் வாழும் பெருமை பொருந்திய பதி. அவ்வூரில் வேளாளர் குலம் விளங்கத் தோன்றியவர் செருத்துணையார். கங்கை தங்கிய சடையினையும், திருநீற்றினையும் உடைய இறைவனது திருவடிகளை மறவாது சிந்தை செய்பவர். திருவாரூரில் ஆழித்தேர் வித்தகராகிய இறைவனது திருவடிகளை மறவாது சிந்தை செய்பவர். திருவாரூரில் ஆழித்தேர் வித்தகராகிய இறைவனது திருக்கோயிலில் பெருமை பொருந்திய பல திருப்பணிகளைச் செய்து வந்தார். உலகம் போற்றும்படி அரசுபுரிந்து வருகின்ற பல்லவ அரசர் கழற்சிங்கநாயனார் பட்டத்துப் பெருந்தேவி ஒரு மலரினை முகர்ந்து பார்த்தமைக்காக மனம் பொறுக்கமாட்டாமல் இருந்தார். அவ்வரசியின் கரிய கூந்தலைப் பிடித்து இழுத்து நிலத்தில் வீழ்த்தினார். இறைவனது சிவந்த திருச்சடையில் அணியும் மலரை முகர்ந்து பார்த்துக் குற்றம் செய்த மூக்கைத் தண்டிப்பேன் எனக் கருவியினால் அவளது மூக்கை அரிந்தார். திருத்தொண்டின் பெருமையினை உலகம் அறியும் படி செய்த ஆண்சிங்கம் போன்ற செருத்துணையார் சிவபிரானுக்கு அடிமைத் தொழில் பூண்டும் பலகாலம் இருந்தார். உயிர்கள் உய்ய எடுத்த திருவடியில் இறவாத இன்பம் பெற்றார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் புகழ்த்துணை நாயனார்

செருவிலிபுத்தூரில் சிவவேதியர் குலத்தில் தோன்றியவர் புகழ்த்துணையார். மலையை வில்லாகக் கொண்ட சிவபெருமானுக்கு அடிமை பூண்டு ஒழுகும் தன்மையில் தமக்கு நிகரில்லாதவர். தவநெறியும், தத்துவநெறியும் கொண்டு இறைவனை வழிபடுபவர். கடல் சூழ்ந்த இவ்வுலகில் பஞ்சம் வந்த காலத்தும், அதனால் பசி மிகுந்த காலத்தும் இறைவனது திருவடிகளை மறவாதவர். மணமுள்ள மலர்களாலும், குளிர்ந்த நீராலும் இறைவனைப் பூசித்தார். மாலயன் தேடநின்ற பெருமானைத் திருமஞ்சனம் ஆட்டும்போது பசியால் தளர்ந்திருந்த நாயனார் நீர் நிறைந்திருந்த குடத்தினைத் தாங்க மாட்டாது அதனை இறைவன் திருமுடிமேல் வீழ்த்துச் சோர்ந்து வீழ்ந்தார். திருவருளால் அப்படியே உறங்கி விட்டார். இறைவன் கனவில் எழுந்தருளிப் பஞ்சகாலம் தீரும் வரை உனக்கு நாள்தோறும் ஒரு காசு கொடுப்போம் என அருளிச் செய்தார். நாயனார் துன்பமும் துயிலும் நீங்கி எழுந்தார். இறைவன் கூறியவாறே பீடத்தின் கீழே நாள்தோறும் ஒரு பொற்காசினை இட அதை எடுத்துத் துன்பம் தீர்ந்தார். இவ்வாறு பஞ்சம் நீங்கும் காலம் வரை இறைவர் தந்த காசைக் கொண்டு இன்புற்று வாழ்ந்து சிவனுலகு அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் கோட்புலி நாயனார்

சோழநாட்டில் திருநாட்டியத்தான் குடியில் வேளாளர் குலத்தில் பிறந்தவர் கோட்புலி நாயனார். படைத்தளபதியாக விளங்கியவர். பகைவர்க்குப் போரில் பெரும் துன்பம் விளைப்பார். அரசரிடம் அத்தொழில் புரிந்து பெறும் செல்வத்தை இறைவன் திருக்கோயிலில் திருவமுதுக்காக நெல் வாங்கப் பயன்படுத்துவார். அரசரது ஆணையின்படி போர்க்குச் செல்ல வேண்டியதாயிற்று. போர் முடிந்து தாம் வரும் வரையில் தேவையான அளவு நெல்லினை வாங்கிக் கூடுகட்டி வைத்தார். உறவினர்களிடம் இந்நெற்கூட்டினை அழிக்கக் கூடாது எனக்கூறி விரையாக்கலி என்னும் ஆணையினைப் பொறித்தார். அவர் போருக்குச் சென்ற பின்னர் சில நாட்களில் கடும் பஞ்சம் உண்டாயிற்று. உறவினர்கள் இறைவனுக்குரிய நெல்லை உண்டு பிழைத்துப் பின்னர் திரும்பக் கொடுப்போம் எனத் துணிந்து நெல்லினை எடுத்துக் கொண்டனர். போரில் வெற்றி அடைந்து திரும்பிய நாயனார் செய்தியினை அறிந்தார். சுற்றத்தாரை அழைத்து அனைவருக்கும் அரசர் தந்த பொருளைத் தருவதாகக் கூறினார். நெல் எடுத்து உண்ட சுற்றத்தார் அனைவரையும் வாளால் துணித்தார். நெல்லின் உணவுண்ட தாயின் பாலைக்குடித்ததாகக் கூறி சிறுமகவையும் துணித்தார். இறைவன் வெளிப்பட்டருளினன். சுற்றத்தார் பாசம் நீங்கி மேலுலகம் அடைந்தனர். சுந்தரமூர்த்தியாரைத் தம்மூர்க்கு அழைத்துவந்தார். உபசரித்துத் தம் பெண்மக்கள் சிங்கடியார், வனப்பகையார் ஆகியோரை ஏற்றுக்கொள்ள வேண்டினார். சுந்தரமூர்த்தியார் இருவரையும் மடிமேலமர்த்தி மக்களாகக் கொண்டார். பதிகங்களில் சிங்கடி வனப் பகையின் தந்தை எனப் பாடியுள்ளார்.

திருச்சிற்றம்பலம்

பத்தராய்ப்பணிவார்

சிவபெருமான் திருவடிக்கே அன்பு பூண்டு பக்தியுடன் பணிபவர்கள் பத்தராய்ப்பணிவார் ஆவர். அடியாரைக் கண்டால் உள்ளம் கூசக்கொண்டாடி மகிழ்வார். இனிய மொழிகளையே பணிவுடன் பேசுவர். வழிபாடுசெய்வோரைக் கண்டால் வணங்கி மகிழ்வர். அன்பில் திறத்தால் மேம்பட்டுத்திகழ்வர். சிவபெருமானையும், சிவனடியார்களையும் உவகையுடன் வழிபாடு செய்வர். செய்வன எல்லாம் இறைவன் திருவடிக்கே சேரும் தகுதியுடையனவாகுக என்று செய்வார். பிறவிக் குழியில் என்றும் விழாதவர், அவர்புகழுக்கு எல்லா உலகத்தையும் ஒப்பாகக் கூறினும் போதாது. சங்கரனைப் பற்றிய செய்திகளை மட்டுமே கேட்பர். சிவபெருமானிடம் கொண்டுள்ள அன்பின் பெருக்கை அயலவர் அறியாது ஒழுகுவர், இறைவன் திருவடிகளை அடைதற்கு உரியவர், இறைவனை நினைந்து உள்ளம் உருகுவர். இன்பப் பெருக்கால் நாத்தழுதழுத்த வண்ணம் பேசுவார், கண்களில் ஆனந்தக்கண்ணீர் பெருகியோடும், மெய் சிலிர்த்து, உடல் நடுங்கச் செயலற்று நிற்பர். பக்திப் பெருக்காகிய நற்குணம் வாய்க்கப் பெற்ற பக்தர்கள் ஆகிய திருத்தொண்டர் நின்றாலும், அமர்ந்திருந்தாலும், படுத்திருந்தாலும், நடந்துசென்றாலும், உணவு உண்டாலும் , உறங்கினாலும், விழித்தெழுந்தாலும், கண்கள் இமைத்தாலும் பொதுமன்றில் ஆடுகின்ற பெருமானின் மலர்ப்பாதங்களை ஒருபோதும் மறவாத மனம் கொண்டவராயிருப்பர். சிவபெருமானுக்கே அடிமையாகிய தவக்கோலம் கொண்டிருப்பர். சிவநெறியை உலகுக்கு உணர்த்துவர். சிவவழிபாட்டினால் உண்டாகும் பயனை உலகர் பெறும் படி செய்து தாமும் மனமகிழ்வர். சிவபெருமான் திருவடிகளை வணங்கி மேன்மேலும் பொங்கி எழுகின்ற பக்தியால் பணிதலையே பணியாகக் கொண்டிருப்பர்.

திருச்சிற்றம்பலம்

பரமனையே பாடுவார்

உயிர்கள் இறைவனை அடையத் தடையாய் இருப்பன ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்கள். மும்மலங்களை இறைவன் அழித்தலை முப்புரம் எரித்தல் என்று கூறுவது மரபு.

இறைவன் அசுரர்களின் முப்புரத்தை எரித்தவர், பாம்புகளை அணியாக அணிந்தவர், சிவஞானத்தால் காணப்பெறும் ஒப்பற்ற பெரும் பொருள், எல்லா உலகங்களையும் மாயையால் உண்டாக்குவார், உயிர்களின் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய புறக்கருவிகளாலும் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் அக்கருவிகளாலும் காணப்படாதவர், ஞானக்கண்ணால் காண்போர்க்கு அறிவு வடிவாக விளங்குவார். இத்தகைய பெருமைவாய்ந்த பரமன் புகழையே பாடிக்கொண்டுள்ளோர் பரமனையே பாடுவார் ஆவார். இறைவன் உயிர்கள் உய்யும் பொருட்டு பொது அம்பலத்தில் நடனம் செய்து கொண்டுள்ளார். ஞான வள்ளலாகிய இறைவனையே பாடுபொருளாகக் கொண்டு தென்தமிழ் வடமொழி பிறநாட்டுமொழி ஆகியவற்றில் தமக்குத் தெரிந்த ஒன்றில் மெய்யுணர்ந்து உள்ளம் உருகிப் பாடுவோர் பரமனையே பாடுவார் ஆவார். **'உளங்குளிர்ந்த போதெலாம் உகந்து உகந்து உரைப்பனே'** என்று திருஞானசம்பந்தரும், **'தமிழோடிசை பாடல் மறந்தறியேன்'** என்று திருநாவுக்கரசரும் **'மாட்டூர் அறவா! மறவாது உன்னைப் பாடப்பணியாயே'** என்று சுந்தரரும் குறிப்பிடுவன இத்தகையனவே.

திருச்சிற்றம்பலம்

சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்

பிரமன், திருமால், உருத்திரன், மகேசன், சதாசிவன் ஆகிய ஐவரும் காரணக்கடவுளர் என்று வழங்கப்படுவர், உடம்பின் இதயத்தில் பிரமாவும், கண்டத்தில் திருமாலும் உண்ணாக்கில் உருத்திரனும், புருவநடுவில் மகேசனும், உச்சியாகிய பிரமமந்திரத்தில் சதாசிவனும் உள்ளதாகக் கூறுவது மரபு. பிரமம் – பெரிய, ரந்திரம் – வழி. தலையுச்சியின் நடுவில் பிளந்து மேலே செல்லும் பெருவழி. தஞ்சைப் பெரிய கோவில் விமானத்தின் உச்சியில் உள்ள கல்லுக்குப் பிரமந்திரக்கல் என்றே பெயர். காரணக்கடவுளரிடங்கள் ஐந்தையும் கடந்து நாதாந்தத்தில் குறைவிலா நிறைவாயமைந்த பரஞ்சோதி விளங்கித் தோன்றுவார். அட்டாங்க யோக முறையில் தாரணை என்ற நிலையில் நாதாந்தத்தில் உள்ள பரஞ்சோதியிடத்துச் சித்தத்தை ஒன்ற வைத்திருப்பார் சித்தத்தைச் சிவன்பாலே வைத்தவர் ஆவர். இவர்களே கூத்தப் பெருமான் திருவடிகளைத் தொண்டின் வழியாக அடைந்தவர்கள். உட்கருவிகள் நான்கு ஆகும். கருதிய பொருளை மனம் சென்று பற்றும். புத்தி உறுதி செய்யும், சித்தம் சிந்திக்கும், அகங்காரம் செயல்பாட்டிற்கு ஊக்கம் கொண்டு எழுச்சிபெறும்.

'சிந்திப்பறியன சிந்திப்பவர்க்கு' என்று நாவுக்கரசரும், 'சிந்தனை நின்தனக்காக்கி' என்று மணிவாசகரும் குறிப்பிட்டுள்ளனர். யோகத்தின் எட்டுறுப்புகள் (1.இயமம், 2. நியமம், 3. ஆதனம், 4. பிரணாயாமம், 5. பிரத்தியாகாரம், 6. தாரணை, 7. தியானம், 8. சமாதி பொறி வழிச்சென்ற மனத்தைத் தடுத்து ஆறுஆதாரங்களில் செலுத்துவது பிரத்தியாகாரம். அவ்வாறு செலுத்திய மனத்தை மீண்டும் புறத்தே பொறிவழிச் செல்லாமல் ஒரு நெறியில் நிறுத்தல் தாரணையாகும். தொல்காப்பிய உரையில் நச்சினார்க்கினியர் பொறைநிலை என்பர். **'ஆதாரத்தாலே நிராதாரத்தே சென்று மீதானத்தே செல உந்தீபற விமலற்கு இடமது என்று உந்தீபற' என்று சாத்திரம் குறிப்பிடுவது சித்தத்தைச் சிவன்பாலே வைத்த நிலையாகும்.**

திருச்சிற்றம்பலம்

திருவாரூர்ப் பிறந்தார் புராணம்

திருவாரூர் மிகப்பழைய சைவத்தலமாகும்.

"திசையெட்டும் தெரிப்பதற்கு முன்னோ பின்னோ,
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே
தேசம்உமை அறிவதற்கு முன்னே பின்னோ
திருவாரூர் கோயிலாக் கொண்ட நாளே"

என்று திருநாவுக்கரசர் பாடியுள்ளதிலிருந்து திருவாரூரின் தொன்மையறியலாம்.

உருவம் அற்றவராகவும், உருவம் உடையவராகவும், எல்லாப் பொருள்களுமாகவும் உள்ளவர் சிவபெருமான், உமாதேவியின் மணவாளனார். அவர் மகிழ்ந்து வீற்றிருக்கும் பெருமையுடையது திருவாரூர். திருவாரூரில் பிறக்க முத்தி என்பது சைவ மரபு. திருவாரூரில் பிறந்தவர்தம் பெருமை அளவிட்டு உரைக்க முடியாது.

திருவாரூரில் பிறந்தவர்கள் திருக்கயிலையில் வீற்றிருக்கும் சிவகணங்களே ஆவர். ஐம்பொறிகளை அடக்கித்திருவாரூர்ப் பிறந்தவர் திருவடிகளை வணங்கி ஒருநெறிய மனம் வைத்தவர்களே உயர்ந்த நெறியாகிய ஞான நெறியில் வீடுபேறு பெறும் தகுதியுடையவர் ஆவர்.

உரனெனுந் தோட்டியான் ஓரைந்தும் காப்பான் என்ற வள்ளுவர் வாக்கே ஐம்பொறியடக்கும் அடிப்படையாகும்.

திருச்சிற்றம்பலம்

முப்போதும் திருமேனி தீண்டுவார்

தன்னடைந்தார்க்கு இன்பங்கள் தருவான். நச்சுவார்க்கினியன் என்று தேவார ஆசிரியர் கூறியதற்க்கேற்ப இறைவன் எப்போதும் இனிய பிரான் உயிர்கள் மாட்டு அருளுடையவன், அவன் கொண்டுள்ள அருள் பெருகும். உண்மையான ஞான நெறியில் வந்த விதிமுறையில் வழுவாமல் காலை, நண்பகல், மாலை ஆகிய காலங்களில் இறைவனை முறைப்படி திருமஞ்சனம் முதலியன செய்து, திருமேனி தீண்டி வழிபடுவோர் ஆதிசைவமுனிவர் ஆவர். அன்பால் முக்காலத்துத் திருமேனி தீண்டிவழிபாடு செய்வதில் ஆர்வம் மிகத்தோன்றும்.

ஆராய்ந்து உணர்ந்தால் காலை, நண்பகல், மாலை ஆகிய மூன்று நேரத்திலும் இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய காலங்களிலும் வழிவழியாகத் திருமேனி தீண்டி வழிபாடு செய்தற்கு உரிமையடையவர். இத்தகு சிவவேதியர் பெருந்தகைமை வாய்ந்த பெரியோர் ஆவர், அவர் தோன்றிய குலத்தின் பெருமை கூறமுடியாதது.

முப்போதும் திருமேனி தீண்டுவார் உண்மை ஞானநெறியும் விதிமுறையும் வழுவாதிருத்தல் வேண்டும்.

திருச்சிற்றம்பலம்

முழுநீறு பூசிய முனிவர்

1. கற்பம், 2. அநுகற்பம், 3. உபகற்பம் எனத்திருநீறு செய்யும் முறை மூவகைப்படும். கன்று ஈன்று நாளானபசு, நோயில்லாத பசு, ஆகியவற்றின் சாணத்தைச் சத்தியோசாத மந்திரம்கூறிக்கையில் எடுத்துக் கோசலம் (பசுவின் சிறுநீர்) விட்டுப்பிசைந்து காய்ந்தபின் வேள்வித்தீயில் சிவபெருமான் திருவடியை நினைந்து எரிக்க வேண்டும். அப்போது கிடைக்கும் திருநீறு கற்பமுறையதாகும். காட்டில் காய்ந்து கிடக்கும் பசுச்சாணத்தைக்கொண்டு வந்து பொடியாக்கிக் கோசலம் விட்டுப் பிசைந்து அத்திமந்திரத்தால் உருண்டையாக்கிக் காய்ந்தபின் வேள்வித் தீயில் இட்டு வெந்த பின் எடுப்பது அநுகற்ப முறைத்திருநீறு ஆகும்.

பசுக்கள் மேயும் காட்டில் தீப்பற்றி எரிந்த மரங்களின் சாம்பல், பசுக்களின் எருக்களில் தீப்பற்றி எரிந்த சாம்பல், செங்கற்சூளையின் சாம்பல் ஆகியவற்றைத் தனித்தனியே எடுத்துவந்து கோசலம் விட்டுப் பிசைந்து உருண்டையாக்கிக்காய வைத்துப்பின் தீயிலிட்டு எரித்துக் கிடைக்கும் திருநீறு உபகற்பம் ஆகும்.

மூன்று வகைத் திருநீறுகளில் ஒன்றைச்சிறிய அளவுகையில் எடுத்து உள்ளும் புறமும் தூய்மை உண்டாகும் வண்ணம் பாவித்து அத்திரமந்திரம் கூறித் தென்மேற்குத்திசையில் சிறிய அளவு நீற்றினைத் தெறிக்க வேண்டும். பின்பூசிக் கொள்ள வேண்டும். திருக்கோயில்களில்

திருவுருவங்களின் முன்னும் வேள்வித் தீயின் முன்னும் குருவின் முன்னும், நடக்கும் வழியிலும், தூய்மையில்லாத இடத்திலும் திருநீறு அணியக்கூடாது. திருநீற்றை உத்தூளமாகவும் (உடம்பில்முழுதும் பூசுதல்), திரிபுரண்டரமாகவும் (மூன்றுகீற்றுவடிவிலணிதல்), பிறை வடிவாகவும் அணித்து கொள்ளலாம். ஒழுக்கத்தில் சிறந்தவர்கள், தத்துவநெறி உணர்ந்தவர்கள், நீதி நெறிதவறாதவர்கள், மும்மலங்களையறுத்த முனிவர்கள் ஆகியோர் திருநீற்றினைப் புதிய பாத்திரத்தில் வைத்துக் கொண்டு உரிய காலங்களில் முறையாகப் பூசுவார்கள். இவர்களே முழுநீறு பூசிய முனிவர் ஆவர்.

அப்பாலும் அடிச்சார்ந்தார்

பண்டைக்காலத்தில் தமிழகம் சேரநாடு, சோழ நாடு, பாண்டிய நாடு ஆகிய முப்பிரிவுகளைக் கொண்டிருந்தது. இந்த மூன்று நாடுகள் அல்லாத பிறநாடுகளில் சிவனடியாராக இருந்து சிவநெறியைப்பின் பற்றிச் சிவபெருமான் திருவடிகளை அடைந்தவர்கள், சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய திருத்தொண்டத் தொகையில் உள்ள தனி அடியார்களின் காலத்திற்கு முன்னும் பின்னும் சிவனடியாராக இருந்து சிவபெருமான் திருவடிகளை அடைந்தவர்கள் ஆகியோர் அப்பாலும் அடிச் சார்ந்தார் ஆவர்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் பூசலார் நாயனார்

நல்லொழுக்கம் ஓங்கிய தொண்டை நாட்டில் பழமையாக உள்ள ஊர் திருநின்ற ஊராகும். சிந்தையில் தோன்றும் உணர்வுகள் எல்லாம் சிவன் திருவடியே சார்ந்திருந்தன எனும் படியாக அவ்வூரில் வாழ்ந்தவர் பூசலார். மறையவர் குலத்தில் தோன்றியவர். அடியார்களுக்குப் பொருள்களைக் கொடுத்து மகிழ்பவர். கோயில் அமைக்கப்பெரும் பொருள் இன்மையால் பொருள் கிடைக்கும் இடங்களை எண்ணி வருந்தித் தேடினார். பொருள் சிறிதும் கிடைக்கவில்லை. என்ன செய்வதென எண்ணித் தேவையான பொருள்களை எல்லாம் மனதிலேயே தேடிக் கொண்டார். கோயில் கட்டுதற்குரிய பொருள்களோடு தச்சர்களையும் மனதில் தேடிக் கொண்டார். நல்ல நேரத்தில் கோயில் கட்ட மனதில் எண்ணி இரவுபகலாகக் கட்டினார். அடி முதல் சித்திர வரி (உபானம்) வரை அமைத்துப் பின் விமானம் அமைத்தார். தூண், தீர்த்தக்கிணறு, மதில் முதலியனவும் அமைத்தார். திருக்குட நன்னீராட்டுக்கும் நாள் குறித்தார். பல்லவ அரசன் காஞ்சியில் கோயிலமைத்துத் திருக்குட நீராட்டுக்கு அதே நாளைக் குறித்தான். இறைவன் அவன் கனவில் தோன்றி நாளை பூசலார் கட்டிய கோயிலில் புகுவோம் நீ வேறு நாளில் வைத்துக் கொள் என்றார். கோயிலைத் திருநின்ற ஊரில் காணாமல், பூசலாரைத் தேடி மன்னன் வணங்கி நின்றான். பூசலார் நிகழ்ந்தன கூறினார். அரசன் நாயனாரின் பெருமையைப் போற்றி ஊர் திரும்பினான். பூசலார் பல நாட்கள் பூசை செய்து பொற்கழல் அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிராட்டி மங்கையர்க்கரசியம்மையார்

மங்கையர்க்கெல்லாம் ஒப்பற்ற அரசியாகவும், எமது தெய்வமாகத் திகழ்பவரும், சோழர்களின் திருக்குலக் கொழுந்து போன்றவரும், வளையலை அணிந்த பெருமை உடையவரும், சிவந்த தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள் போன்றவரும், பாண்டிநாட்டை ஆளும் பாண்டியர்களின் குலத்துக்கு உண்டான பழியினைத் தீர்த்த தெய்வத் தன்மை உடைய பாவை போன்றவருமானவர் மங்கையர்க்கரசியார். தமிழ்நாடு அடைந்த சமண இருளை ஞானசம்பந்தராகிய கதிரவனைக் கொண்டு நீக்கியவர். பாண்டி நாடெங்கும் திருநீற்று ஒளியைப் பரவச் செய்தவர். சீர்காழிப் பிள்ளையாரின் திருப்பதிகத்தில் மங்கையர்க்கரசி என்றே பாராட்டிக் கூறப்பெறும் முன்னைத் தவம் பெற்றவர். பாண்டிய மன்னராகிய நின்ற சீர் நெடுமாறனார்க்கு வாழ்க்கைத் துணையாக மட்டுமின்றி, சைவத்திறத்தின் வழித்துணையாக வாழ்ந்த பெருமாட்டி, காவிரியாறு வளம் பெருகச் சோழர் திருமரபு பெருகியது போலப் பாண்டியரது நாட்டினையும் விளங்க வைத்தவர். பிறந்த நாட்டையும் புகுந்த நாட்டையும் தமது பெருமையால் விளங்கச் செய்தவர். நாயனாராகிய நெடுமாறருடன் பலகாலும் இணைந்து திருப்பணி செய்த அம்மையார் இறைவனது திருவடி இன்பத்தை இடையறாது பெற்று மகிழ்ந்தார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் நேச நாயனார்

பெருமையும் ஒழுக்கமும் குறையாத, அன்பும் வாய்மையும் நிறைந்த சான்றோர் நிலையாக வாழும் ஊர் காம்பிலி ஆகும். திங்கள் தவழும் மாடங்களை உடைய வளமுடைய ஊராகும். அவ்வூரில் நேச நாயனார் தோன்றினார். நெய்த துணியை அறுத்தறுத் தெடுப்பதால் அறுவை என்று பெயர். அறுவையை நெய்யும் சாலியர் குலத்தவர். பாம்பினை அணிகலனாக அணிந்த சிவபெருமானுடைய அடியவர்களின் திருப்பணிகளையும், திருவடிகளையும் தலையில் சூடிக் கொண்டவர். தமது குலத்தொழிலில் மேம்பாடு உடையவர். சிந்தனையைச் சிவனது திருவடிக்கு ஆக்கியவர். சொல்லினைத் திருவைந்தெழுத்துக்காக ஆக்கினார். தாம் செய்யும் தொழிலின் செயல்களை எல்லாம் அடியார்களுக்கு உரியதாக்கினார். இவ்வாறு மனம், சொல், செயல் மூன்றிலும் இறைவனையே கொண்டிருந்தார். ஏனைய துணிவகைகளை நெய்யாமல், குற்றமற்ற உடை, கீள், கோவணம் இவற்றை நெய்தார். இறைவன் அடியார்கள் வேண்டும் போதெல்லாம் தடையின்றிக் கொடுத்து வந்தார். ஒவ்வொரு நாளும் அடியார்களின் திருவடிகளை வணங்கி நன்மை பெற்றார். பல நாட்கள் இவ்வாறு நல்ல பல தொண்டுகள் செய்து இறைவன் திருவடிகளை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் கோச் செங்கட் சோழ நாயனார்

தராசில் புறாவின் எடைக்குச் சமமாகத் தனது உடல் தசையை நிறுத்துக் கொடுத்தவன் சிபி மன்னன். அம்மன்னனின் மரபில் வரும் சோழர்களின நாட்டில், காவிரி ஆற்றின் கரையில், சந்திர தீர்த்தத்தின் பக்கத்தில் குளிர்ச்சி உடைய ஒரு பெரிய சோலை இருந்தது. அங்கிருந்த ஒரு வெண்ணாவல் மரத்தின் அடியில் ஒரு சிவலிங்கம் இருப்பது கண்டு ஒரு யானை நாள்தோறும் நீராட்டி வழிபட்டது. அத்தகுநாளில் சிவஞானம் பெற்ற சிலந்தி ஒன்று இறைவன் திருமுடிமேல் சருகுகள் விழா வண்ணம் வலைபின்னியது. இவ்வாறு இரண்டும் மாறிமாறித் தத்தம் செயல் செய்தன. பல நாட்கள் இவ்வாறு நிகழச் சினந்த சிலந்தி, யானையின் துதிக்கையினுள் புகுந்து கடித்தது. யானை தரையில் வீழ்ந்து இறந்தது. சிலந்தியும் இறந்தது. மகப்பேறின்றி இருந்த சோழ அரசியின் வயிற்றில் சிலந்தி உயிர் மகவாய்ச் சேர்ந்தது. கருவளர்ந்து குழந்தை பிறக்கும் நேரத்தில் சோதிடர்கள் இன்னும் ஒரு நாழிகை கழித்து இக்குழந்தை பிறந்தால் மூவுலகையும் ஆளும் எனக் கூறினர். அரசியார் ஒரு நாழிகை கழித்து இக்குழந்தை பிறக்கும்படி என் கால்களைக் கட்டித் தலைகீழாகத் தூக்குங்கள் எனக் கூறினார். அவ்வாறே செய்து, பின் குழந்தை பிறந்தது. சிவந்த கண்ணை உடைய பிள்ளையைக் கோச் செங்கணா என அரசி அன்புடன் அழைத்து உடனே இறந்துவிட்டாள். உரிய காலத்தில் பட்டம் பெற்ற செங்கட்சோழர் பல மாடக் கோயில்களைக் கட்டினார். திருவானைக்காவில் சிவன்கோயில் கட்டினார். தில்லைக்குச் சென்றார். அங்கு பல திருப்பணிகள் புரிந்தார். தில்லை அம்பலவாணர் திருவடியை அடைந்தார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார்

திருஎருக்கத்தம் புலியூரில் வாழ்ந்த திருநீலகண்ட யாழ்ப்பாணர் சோழ நாட்டின் பல தலங்களையும் வழிபட்டுப் பாண்டி நாட்டை அடைந்தார். தலைநகர் மதுரையை அடைந்து தம் யாழில் ஆலவாயண்ணலை அழகுறப் பாடினார். இறைவன் தொண்டர் கனவில் தோன்றிக் கோயிலுக்குள் அவரை அழைத்துச் செல்ல ஆணையிட்டார். அண்ணலின் முன்பு நின்று பாடினார். இறைவனுடைய பல்வேறு அரிய ஆற்றல் மிக்க வரலாறுகளை நாயனார் பாட இறைவன் கேட்டு மகிழ்ந்தான். தரையின் குளிர்ச்சி தாக்கினால் யாழின் நரம்புகள் தளரும் ஆகையால் அழகிய பலகை தருக என ஒலி எழுந்தது. தொண்டர் பலகைஇட அதிலிருந்து நாயனார் பாடினார். அங்கிருந்து நாயனார் திருவாரூர் சென்றார். வடக்கு வாசலின் வழியாக உட்புகுந்தார். பூங்கோயில் பெருமானைப் பூவிட்டு வணங்கினார். மிகுதியான காலம் திருவாரூரில் தங்கி இருந்தார். நாள்தோறும் புற்றிடங் கொண்டாரையும், வீதிவிடங்கப் பெருமானையும் போற்றித் துதித்தார். அதன் பின்னர் பல்வேறு தலங்களையும் முறையாக வழிபாடு புரிந்தார். உமையம்மை கொடுத்தருளிய ஞானப்பாலினை உண்ட ஞானசம்பந்தரைக் காணும் பொருட்டுச் சீர்காழிக்கு எழுந்தருளினார். யாழ்ப்பாணரின் பெருமையினை அறிந்த திருஞானசம்பந்தர் தம்முடனே வைத்துக் கொண்டார். திருப்பதிகங்களை யாழில்பாடும் பெருமை பெற்றார். திருஞானசம்பந்தரின் திருமணத்தில் திருவடியில் கலந்தருளினார்.

திருச்சிற்றம்பலம்

சடையனார், இசைஞானியார், நம்பியாரூரர்

திருநாவலூரில் சடையனாருக்கும், இசைஞானியாருக்கும் மகனாகத் தோன்றினார்: நம்பியாரூரர். தெருவில் தேருருட்டி விளையாடுங்கால் நரசிங்க முனையரையர் என்னும் சிற்றரசர் கண்டு எடுத்துச்சென்று வளர்ப்பு மகனாகக் கொண்டார். திருமணவயதில் புத்தூர்ச் சடங்கவி சிவாச்சாரியார் மகளை மணம்பேசி முடித்தனர். திருமணத்தின் போது முதியவேதியர் வடிவில் வந்து இறைவன் ஆள் ஓலைகாட்டித் தடுத்தாட் கொண்டார். திருவெண்ணெய் நல்லூரில் பித்தாபிறைசூடி என்னும் திருப்பதிகம் பாடினார். பல தலங்களை வழிபட்டுத் திருவாரூர் சென்றடைந்தார். பரவையாரை மணந்தார். திருத்தொண்டத் தொகை பாடினார். குண்டையூர்க் கிழார் வேண்டிய நெல் கொடுத்து வந்தார். கோட்புலி நாயனார் நாட்டியத்தான்குடிக்கு அழைத்துச் சென்றார். தம்மக்களான சிங்கடி, வனப்பகை ஆகியோரை ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டினார். நம்பியாரூரர் அவர்களை மடிமேல் அமர்த்தி மக்களாகக் கொண்டார். பதிகங்களில் சிங்கடி வனப்பகை அப்பன் என்றே பல இடங்களில் பாடியுள்ளார். தொண்டை நாட்டில் திருத்தலச் செலவில் திருவொற்றியூர் சென்றடைந்தார். சங்கிலியாரைத் திருமணம் செய்தார். திருவாரூர், பங்குனிப் பெருவிழா, பரவையார் ஆடல்பாடல் நினைவில் வரவே திருவாரூருக்குப் புறப்பட்டார். சங்கிலியாருக்குச் செய்து கொடுத்த சபதத்தைத் தவறவே கண்களை இழந்தார். காஞ்சிபுரம் வந்து ஆலந்தான் உகந்து பதிகம் பாடி இடக்கண் பெற்றார். பல தலங்களை வழிபட்டுத் திருவாரூர் சென்றடைந்தார். பதிகம் பாடி வலக்கண் பெற்றார். பரவையார் ஊடிக்கொண்டார். ஊடல் தீர்க்க

இறைவன் இருமுறை தூது சென்று வந்தார். தலயாத்திரையில் கொங்குநாட்டுக் கொடுமுடிக்கு வந்து மற்றுப்பற்றெனக்கு எனத் தொடங்கும் அஞ்செழுத்துப் பதிகம் பாடினார். காஞ்சிவாய்ப் பேரூருக்கு வந்து காண்டலும் தொழுது வீழ்ந்து உடனெழுந்து இறைவன் காட்சியைக் கண்டு மனம் மகிழ்ந்தார். திரும்பிச் செல்லுங்கால் திருமுதுகுன்றில் பொன்பெற்று ஆற்றில் இட்டார். தில்லைக்குச் சென்று காஞ்சிவாய்ப் பேரூர்ப் பெருமானை புலியூர்ச்சிற்றம்பலத்தே பெற்றாம் அன்றே என்று பாடினார். திருவாரூர் சென்று பதிகம் பாடித் திருமுதுகுன்றத்து ஆற்றில் இட்ட பொன்னைக் குளத்தில் பெற்றார்.

சேரமான் பெருமாள் நாயனார் இவர்பெருமை அறிந்து காணவந்தார். அவருடன் பாண்டிநாட்டுக்குத் தலயாத்திரை சென்றுவந்தார். அவருடன் அஞ்சைக்களம் சென்று தங்கிப் பொன்னும் பொருளும் பெற்றுத் திருவாரூர் மீண்டு செல்கையில் திருமுருகன் பூண்டியில் வேடுபறி கொடுத்து மீண்டும் பெற்றார். திருவாரூரில் சிலகாலம் தங்கிச் சேரநாட்டுக்குச் செல்கையில் அவிநாசியில் பாடி முதலைவாய்ப் பிள்ளையை மீட்டார். அஞ்சைக்களத்தில் இருந்த போது கயிலையிலிருந்த வெள்ளை யானை வந்தது. தானெனை முன் படைத்தான் பதிகம் பாடிக் கயிலை சென்றடைந்தார். சேரமானும் கயிலைக்கு உடன்வந்து சேர்ந்தார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் மாணிக்கவாசகர்

பாண்டி நாட்டுத் திருவாதவூரில் சைவ அந்தணர் மரபில் தோன்றியவர் திருவாதவூரர், அக்காலப்பாண்டிய மன்னன் அரிமர்த்தன பாண்டியன் திருவாதவூரரை அமைச்சராகக் கொண்டான். தென்னவன் பிரம்மராயன் என்ற சிறப்பும் பெற்றார். இளமை முதலே சிவபெருமானிடம் பேரன்பு பூண்டிருந்தார். கீழைக்கடற்கரையில் குதிரைகள் வந்திறங்கியதை அறிந்த மன்னன் வேண்டிய பொருள்களை எடுத்துச் சென்று குதிரைகளை வாங்கி வருமாறு திருவாதவூரரைப் பணித்தான். செல்லும் வழியில் திருப்பெருந்துறையில் ஞானாசிரியரால் ஆட்கொள்ளப் பெற்றார். குதிரை வாங்கக் கொண்டு சென்ற பணத்தை ஞானாசிரியர் முன்னிலையில் வைத்தார். திருக்கோயில் திருப்பணிக்குச் செலவிடுமாறு ஆசிரியர் கூற அவ்வாறே செய்தார்.

செய்தியறிந்த பாண்டியன் ஓலை அனுப்பினான், ஐந்தாறு நாட்களில் குதிரை வரும் என்று பாண்டியனுக்குக் கூறுமாறு வானொலி தோன்றிற்று. திருவாதவூரர் அவ்வாறே செய்து மதுரை மீண்டார். உண்மையுணர்ந்த பாண்டியன் திருவாதவூரரைச் சிறை செய்தான். சிவபெருமானே குதிரைத் தலைவனாகக் குதிரைகளுடன் வந்தான். மன்னன் மகிழ்ந்து திருவாதவூரரை விடுதலை செய்தார். அன்றிரவு குதிரைகள் நரிகளாயின. மீண்டும் திருவாதவூரர் தண்டிக்கப் பெற்றார்.

இறைவன் பிட்டுக்குமண் சுமந்து பிரம்படிபட்டார். திருவாதவூரரை அமைச்சர் பதவியிலிருந்து விடுவித்தான் பாண்டியன், திருவாதவூரர் திருபெருந்துறை சென்று சிலநாள் தங்கித்தில்லை செல்லும் வழியில் திருவண்ணாமலையில் திருவெம்பாவை பாடினார்.

தில்லையில் தங்கியிருந்த போது இலங்கை மன்னன் மகள் ஊமைப் பெண்ணைப் பேச வைத்தார். அந்தணர் கோலத்து வந்த இறைவன் திருவாசகம் முழுவதையும் கேட்டு எழுதிக் கொண்டார். பாவை பாடிய வாயால் ஒரு கோவைபாடுக என வேண்டினார். மாணிக்கவாசகர் திருக்கோவையார் பாடினார். திருவாதவூரன் சொல்ல எழுதினேன் திருச்சிற்றம்பலம் உடையான் கையெழுத்து என்று எழுதித் தில்லையம்பலப்படியின் மீது வைத்துச் சென்றார். அந்தணர்கள் அதற்குப் பொருள் கேட்டனர். கூத்தனே பொருள் எனக் கூறித் திருவருளில் கலந்தார்.

எம்பிரான் நம்பியாண்டார் நம்பி

திருநாரையூரில் பொல்லாப் பிள்ளையாரை வழிபாடு செய்துவந்த ஆதிசைவ மரபில் தோன்றியவர், தந்தையார் வெளியில் சென்ற போது மகனைப் பொல்லாப் பிள்ளையாருக்கு வழிபாடு செய்யுமாறு சொல்லிச் சென்றார். இவரும் பொல்லாப்பிள்ளையாருக்குத் திருமஞ்சனமாட்டித் திருவமுது படைத்தார். விநாயகர் படைத்த அமுதை உண்பார் என்று எண்ணினார். உண்ணாததால் தலையை மோதிக் கொள்ள முயன்றார். பிள்ளையார் உண்டார். பள்ளிக்குச் செல்ல நேரமாயிற்று என்ற போது விநாயகப் பொருமானே ஞானம் பயிற்றுவித்தார். தந்தையார் அறிந்தார். இவர் புகழ் எங்கும் பரவிற்று. விநாயகப் பெருமானாகிய நம்பியால் ஆட்கொள்ளப் பெற்றதால் நம்பி ஆண்டார் நம்பி என்னும் பெயர் பெற்றார். இராசராசன் இவர் பெருமை அறிந்து பரிசனங்கள் புடைசூழ நம்பியாண்டார் நம்பியைக் காணத் திருநாரையூர் வந்தான். இவருடைய உதவியால் தில்லையில் இருந்த திருமுறைகளை இராசராசன் மீட்டுவந்தான். திருத்தொண்டர் பெருமைகளைத் திருத்தொண்டர் திருவந்தாதி என்று வகைப்படுத்தி பாடினார். திருஞானசம்பந்தர் மீது உலா, மாலை, கலம்பகம், திருத்தொகை முதலிய சிற்றிலக்கிய வகைகளைப் பாடினார். திருஞானசம்பந்தர் வரலாற்றுச் செய்திகள் அனைத்தையும் தம்பாடல்களில் தக்கமுறையில் அமைத்துக் காட்டி உள்ளார். திருநாவுக்கரசர் ஏகாதசமாலை (11 பாடல்) திருநாவுக்கரசரின் வரலாற்றுச் செய்திகள், பதிகங்கள் முதலியவற்றைப் பாடியுள்ளார்.

திருச்சிற்றம்பலம்

எம்பிரான் சேக்கிழார் பெருமான்

தொண்டை நாட்டில் புலியூர்க் கோட்டத்துக் குன்றத்தூரில் வேளாளர் குலத்தில் சேக்கிழார் குடியில் தோன்றியவர் அருள்மொழித்தேவர். குடிப்பெயராலேயே சேக்கிழார் என்றே அழைக்கப்பெற்றார். குடும்பத்தினர் சோழர் அரசியலில் தொடர்புடையவர்களாக விளங்கினார்கள். அக்காலத்தில் அநபாயன் என்னும் குலோத்துங்கன் ஆட்சி செய்தான். சேக்கிழாரின் அறிவாற்றல், தமிழ்ப்புலமை, பண்புநலன்கள். அரசியல் திறமை ஆகியவற்றைப் பற்றித் தெரிந்த அநபாயன் சேக்கிழாரை அழைத்து அமைச்சர் பதவி கொடுத்தான். அமைச்சரின் திறமையைப் பாராட்டி உத்தம சோழப்பல்லவர் என்ற பட்டத்தையும் கொடுத்தான். அக்காலத்தில் போர்கள் அதிகம் இல்லை. மன்னரும் மக்களும் கலைகளிலும் கேளிக்கைகளிலும் பொழுதுபோக்கினார்கள். இன்பத்துறையும் காதற்சுவையும் மிக்கிருந்த சீவக சிந்தாமணியைச் சோழன் மிக விரும்பிப் பல முறை படித்தான். ஆண், பெண் மோகக்கனவுகளில் மன்னன் மூழ்கினான்.

சேக்கிழார் பெருமான் சைவசமயப்பற்றும், சிவனடியாரிடம் பேரன்பும் கொண்டவர், சொந்த ஊரான குன்றத்தூரில் சிவபெருமானுக்கு நாகேச்சுரம் என்று கோயில் அமைத்து, வழிபாடுகள் நடைபெற ஆவன செய்தவர், சைவம் வளர்ந்தால் தான் செந்தமிழும் தமிழர் பண்பாடும் வளரும் என்று எண்ணினார். மன்னனை மடைமாற்றம் செய்யக்கருதினார். ஒரு நாள் சேக்கிழார் பெருமான் சோழமன்னனிடம், உங்கள் மரபினர் அனைவரும் சிவவழிபாடு, சிவன் கோயில் திருப்பணிகள் செய்தவர்கள், அம்மரபில் வந்த நீங்கள் நெல் குத்தி உண்ணாமல் உமிகுத்தி வருந்துவோர் போலவும், கறவைப்பசு

இருக்க மலட்டுப் பசுவைக்கறந்து வருந்துவோர் போலவும் சிவகதை இருக்க அவகதையான சீவகசிந்தாமணியில் மனம் களித்துக் கொண்டு உள்ளீர்கள் என்று கூறினார். அநபாயச் சோழன் நான் படிப்பது அவகதையானால் இம்மைக்கும் மறுமைக்கும் உறுதியளிக்கும் சிவகதையாது? புதுக்கதையோ? பழங்கதையோ? அக்கதைக்கு நூல் உண்டா? சொன்னவர் யார்? கேட்டவர் யார்? என்று கேட்டான். சிவத்தொண்டர்களின் வரலாறுதான் அடியேன் குறிப்பிட்ட சிவகதை, தொண்டர்களின் பெருமைகளை எல்லாம் நம்பியாரூரர் ஆகிய சுந்தரமூர்த்திநாயனார் திருத்தொண்டத்தொகையாகப் பதினொரு பாடல்களில் பாடியுள்ளார். திருநாரையூர் பொல்லாப் பிள்ளையார் அருள் பெற்ற நம்பியாண்டார் நம்பி தொண்டர் வரலாறுகளை வகைப்படுத்தித் திருத்தொண்டர் திருவந்தாதி என்ற நூலாகப் பாடியுள்ளார். திருமுறைக் கண்ட இராசராசன், சிவாலய முனிவர் முதலானோர் கேட்டுமகிழ்ந்து உலகில் விளங்கச் செய்து உள்ளனர்; என்று சேக்கிழார் பெருமான் எடுத்துரைத்தார். அவற்றை விரித்துக் கூறுமாறு சோழமன்னன் வேண்டினான். சேக்கிழார் பெருமான் நாயன்மார்கள் வரலாற்றுச் செய்திகளைப் பக்திச் சுவையுடன் விரிவாக எடுத்து விளக்கம் செய்தார். கேட்ட மன்னன் சிவனடியார் வரலாற்றுச் செய்திகளையெல்லாம் தொகுத்து விரிவாகப் பக்தி காப்பியமாகச் செய்து தருமாறு வேண்டினான். அம்பலக்கூத்தன் அருளால் அவ்வாறே செய்து தருவதாகச் சேக்கிழார் பெருமானும் உடன்பட்டார். சேக்கிழார் பெருமான் நாயன்மார்கள் தோன்றிய ஊர், வாழ்ந்து திருத்தொண்டு புரிந்த ஊர், திருப்பணிகள் முதலியவற்றுக்குரிய ஆதாரங்களைத் தேடினான். கோயில்கள், கல்வெட்டுகள், செப்பேடுகள், ஓவியங்கள், பழக்கவழக்கங்கள், இலக்கியங்கள் முதலியவற்றை பயின்று செய்திகளைத்

திரட்டினார். இசைக்கலை, மருத்துவம், தத்துவம், தமிழ் இலக்கிய மரபுகள், வானவியல், நிலங்களின் தன்மை, உடலியல், அரசியல் நீதிமுறை முதலியவற்றை திருவருள் துணையுடன் நன்கு ஆய்ந்தார். தில்லைக்கூத்தன் திருவருள் துணைக்கொண்டு காவியம் பாடவேண்டும் என்றும் கூத்தப்பிரான் முன்னிலையில் அரங்கேற்ற வேண்டும் என்றும் எண்ணினார். தில்லை சென்றார். மன்னன் எல்லா உதவிகளையும் செய்து கொடுத்தான்.

கூத்தப்பெருமானைக்கண்டார், கைகூப்பி வணங்கினார். கண்ணீர் சொரிந்தார், உள்ளம் உருகினார். திருத்தொண்டர் வரலாற்றுச் செய்திகளைக் காவியமாகப் பாடத்துணிந்து வந்துள்ளேன். அடியெடுத்துத்தர வேண்டும் என்று விண்ணப்பித்தார். வானில் **'உலகெலாம்'** என்னும் சொல் திருவருள் வாக்காக ஒலித்தது. அதனை முதலாகக் கொண்டு திருத்தொண்டர் புரரணம் பாடத் தொடங்கினார். தில்லை வாழந்தணர் அதிசயித்தனர். கூத்தப் பெருமான் அணிந்திருந்த மாலை, திருநீறு, பரிவட்டம் முதலியவற்றைச் சேக்கிழார் பெருமானுக்கு அணிந்தனர். சேக்கிழார் பெருமான் தில்லை ஆயிரக்கால் மண்டபத்தில் தவக் கோலத்துடன் அமர்ந்து திருவருள் துணையுடன் நாயன்மார் வரலாறுகளைப் பக்திச் சுவை நனிசொட்டச் சொட்டத் திருத்தொண்டர் புராணமாகப் பாடி நிறைவு செய்தார். செய்தியறிந்த அநபாயன் பரிவாரங்களுடன் தில்லைச் சிதம்பரம் வந்து சேர்ந்தான். தில்லை வாழந்தணர்களும் அடியார்களும் வரவேற்றனர். சேக்கிழார் பெருமானின் சிவப் பொலிவைக் கண்டு மன்னன் கைக்கூப்பி வணங்கினான். அனைவரும் திருச்சிற்றம்பலம் சென்று கூத்தப்பிரானை வழிபட்டு உள்ளம் உருகி ஆனந்தத்தில்

மூழ்கினர். " நாம் உலகெலாம் என்று அடியெடுத்துக் கொடுக்கச் சேக்கிழார் திருத்தொண்டர் வரலாற்றுச் செய்திகளைப் புராணமாக இயற்றியுள்ளார், அனைவரும் கேட்டு மகிழ்வீராக" என்று வானத்தில் ஒலித்தது. அத்துடன் சிலம்பொலியும் தோன்றிற்று. அநபாயன் திருத்தொண்டர் புராணம் கேட்க வருமாறு எல்லாத்திக்குகளிலும் தூதர்கள் வழியாக ஓலை அனுப்பினான். அடியார்கள் திருப்பதிகங்களை ஓதிக்கொண்டும் அரஅர என்று முழுக்கம் செய்து கொண்டும் பலநாடுகளிலிருந்தும் வந்தனர். துறவியர், மடாதிபதிகள், கற்றவர், மன்னர், அமைச்சர், பாவேந்தர் முதலியோர் தில்லையில் குழுமினர், அநபாயன் வேண்டிய எல்லா வசதிகளையும் நிறைவாகச் செய்தான். தில்லைநகர் முழுவதும் ஒப்பனை செய்யப் பெற்றது, தெருக்கள், வீடுகள், முன்றில்கள் ஆகிய இடங்களில் தூய்மை செய்து கோலமிட்டுத் தோரணங்கள் தொங்கவிட்டனர். வேள்விப்புகையும், அகிற்புகையும் எங்கும் மணம் பரப்பிற்று. ஞானநூல்கற்றோர், இலக்கண இலக்கிய ஈடுபாடு உடையோர், காவிய வல்லுநர் முதலியோர் தில்லையில் கூடினர்.

சிவபெருமானுக்கு உகந்தநாள் திருவாதிரை, திருஞானசம்பந்தர் அவதாரநாள் சித்திரை திருவாதிரை. ஞானப்பாலுண்ட நாள் சித்திரைத் திருவாதிரை. அத்தகைய சித்திரை திருவாதிரை நாளில் திருத்தொண்டர் புராணம் தொடங்கிற்று. திருச்சிற்றம்பல முன்றிலைத் தில்லை வாழ்ந்தணர்கள் கோமயத்தால் மெழுகினர். அறுகால்பீடம் அமைத்து அதன்மீது பட்டுவிரித்து அதன்மீது வெள்ளைத் துணிவிரித்து மலர்தூவினர், தீபதூபம் காட்டினர், சேக்கிழார் இயற்றிய திருத்தொண்டர் புராண ஓலைச்சுவடிகளை

அதன்மேல் வைத்தனர். திருத்தொண்டர் புராணத்தைப் படித்துப் பொருள் விளக்கம் செய்ய வேண்டும் என்று அனைவரும் வேண்டினர். கூத்தப்பிரான் முன்பு, அநபாயன் முன்னிலையில் அனைவரும் மகிழுமாறு சேக்கிழார் பெருமான் அறுபத்து மூவர், தொகையடியார் ஆகியோர் பற்றிய செய்திகளை விரித்து இடையிடையே தேவாரப் பாடல்களையும், பிறத்தமிழ்ப் பாடல்களையும் எடுத்துக்கூறி விளக்கம் செய்தார். புராணம் கேட்க நாளுக்குநாள் மக்கள் அதிகம் கூடினர். திருமடங்களில் அறுசுவையுணவு, கறி, பழம், பால், தேன், தாம்பூலம் முதலியன முட்டுப்பாடு இல்லாமல் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பெற்றன.

திருமுறை எழுதுவோர், படிப்போர், கேட்போர் ஆகியோர் சேக்கிழார் பெருமானின் உரைகேட்டு மகிழ்ந்தனர், சிலர் சிரித்தனர், சிலர் உள்ளம் உருகினர், சிலர் சேக்கிழார் பெருமானின் தவத்தைப் போற்றினர். சிலர் இனி மன்னனுக்கு வேற்றுச்சமயக் கதைபிடிக்குமா? என்றனர். மன்னனும் கேட்டு மனம் உருகினான் அடுத்த ஆண்டு சித்திரை திருவாதிரை வந்தது, புராண விரிவுரை நிறைவெய்தியது, தொண்டர்கள் அரஅர எனமுழக்கம் செய்தனர். சேக்கிழார் பெருமான் அரங்கேற்றிய திருத்தொண்டர் புராணத்தைத் தில்லை வாழந்தணர்கள் மூலமந்திரத்தால் அருச்சனை செய்தனர். வழிபட்டுத் தூபதீபம் காட்டினார். ஆரத்தி எடுத்து மலர் தூவி வழிபட்டனர். **ஐந்தாவது வேதம்** என்று பெருமைப்படுத்தினர். அநபாயன் நூலைப் பசும் பட்டினால் போர்த்துப் பொன்தட்டில் வைத்தான். அதனைப்பட்டத்து யானையின்மீது ஏற்றினான். சேக்கிழார் பெருமானையும் யானையின்மேல் அமரச் செய்து அநபாயன் பின்னர் அமர்ந்தான். இருகைகளாலும்

வெண்சாமரம் வீசினான். வீதிவலம் வரச் செய்தான். வீதிகளில் வீடுதோறும் தூபதீபம் காட்டிச் சுடர்விளக்கு மணிவிளக்குகள் ஏற்றி ஆரத்தி எடுத்தனர். தொண்டர்கள் பதிகங்கள் பாடி அரஅர முழக்கம் செய்தனர். ஊர்வலம் நிறைவுற்று யானை திருச்சிற்றம்பலத்தின்முன் வந்து நின்றது. திருத்தொண்டர் புராணத்தை எடுத்துச் சென்று நடராசப் பெருமான் முன் வைத்தனர். சேக்கிழர் பெருமானுக்குத் தொண்டர் சீர்பரவுவார் என்று பட்டமளித்து ஞானமுடிசூட்டி அநபாயன் வணங்கினான். அனைவரும் வணங்கினர். திருத்தொண்டர்புராணத்தைப் பன்னிரண்டாம் திருமுறையாகச் சேர்த்தனர்.

அநபாயச் சோழன் சேக்கிழார் பெருமான் தம்பி பாலறாவாயர் எங்கே உள்ளார்? என்று கேட்டான். அவர் குன்றத்தூரில் நாகேச்சுரப் பெருமானுக்கத் திருக்குளம் அமைத்துத் திருத்தொண்டு செய்வதாகக் கூறினர். அவரை அழைத்து வந்து அமைச்சராக்கினான். தொண்டை நாட்டில் பஞ்சம் வந்த போது மக்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்து பசிப்பிணி போக்கியதால் தொண்டை மண்டலம் நின்று காத்தபெருமான் என்று போற்றிச் சிறப்புச் செய்தான் அநபாயன். தொண்டர்சீர் பரவுவாராகிய சேக்கிழார் பெருமான் தில்லை நகரிலேயே தங்கி அடியார் பெருமைகளை நாளும் போற்றிக் கூத்தப்பிரான் திருவடியில் இரண்டறக்கலந்தார்.

திருச்சிற்றம்பலம்

திருத்தொண்டர் புராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன் என்று தொடங்கும் திருத்தொண்டர் புராணம் 13 சருக்கங்களையும், 4253 பாடல்களையும் கொண்டது. சுந்தரமூர்த்திநாயனார் பாடிய திருத்தொண்டத்தொகை தொகைநூல், நம்பியாண்டார் நம்பி செய்த திருத்தொண்டர் திருவந்தாதி வகைநூல், சேக்கிழார் பெருமான் பாடிய திருத்தொண்டர் புராணம் விரிநூலாகும். மாக்கதை, திருத்தொண்டர்புராணம் என்பன சேக்கிழார் பெருமான் குறிப்பிடும் பெயர்கள். செயற்கரிய செய்வார் பெரியார் என்ற திருவள்ளுவர் வாக்கிற்கேற்பச் செயற்கரும் செயல் செய்தவர் பெருமை கூறுவதால் பெரிய புராணம் என்று வழங்கலாயிற்று.

கயிலையின் அடிவாரத்தில் முனிவர்களும் யோகியர்களும் கூடியுள்ளனர். வியாக்கிரபாத முனிவரின் மகனார் உபமன்னிய முனிவர் அங்கே உள்ளார். அவர் முனிவர்களுடன் அளவாளாவிக் கொண்டிருந்த போது பேரொளி தோன்றியது கண்டு வணங்கினார். மற்றவர் காரணம் வினவினர். எம்பெருமான் திருவருளால் கயிலையிலிருந்து தென்திசை சென்ற நம்பியாரூரராகிய சுந்தரமூர்த்தி நாயனார் கயிலைக்குத்திரும்பி வந்து கொண்டுள்ளார் அவரை வணங்கினேன் என்று உபமன்னிய முனிவர் உரைத்தார். அவர் வரலாற்றை விளக்கிக் கூற வேண்டும் என்றனர் முனிவர். முனிவர்களுக்கு உபமன்னிய முனிவர் கூறும் முறையில் திருத்தொண்டர்புராணச் செய்திகள் அமைந்துள்ளன.

திருக்கயிலையில் சிவபெருமானுக்கு அள்ளும் திருநீறும், சாத்துமாலைகளும் எடுத்துத் தரும் தொண்டர் ஆலால சுந்தரர். ஒருநாள் மலர்கொய்துவர நந்தவனம் சென்றார். அனிந்ததை, கமலினி ஆகியோர் அம்மையார்க்குப் பூக்கொய்து வர நந்தவனம் சென்றனர். மங்கையர் மேல் மனம் செலுத்தினார். மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடவும் திருத்தொண்டத் தொகை பாடவும் மாதர் மீது காதல் கொண்டார். மாதிருவரும் ஆலால சுந்தரர் மேல் மனம் செலுத்தினர். உடனே மீண்டனர்.

இறைவன் ஆலாலசுந்தரரைப் பார்த்து மாதர் மீது மனம் செலுத்தினாய், தென்னாட்டில் மானுடனாகப் பிறந்து இன்பம் நுகர்ந்து மீண்டும் கயிலைவருக என்றார். ஆலால சுந்தரர், திருவடி வழிபாடு நீங்கிச் செல்லும் அடியேன் மானுடனாக மயங்கும் போது தடுத்தாட் கொள்ள வேண்டும் என்றார். இறைவன் அவ்வாறே ஆகுக என்றார்.

சோழ நாட்டு வளங்களைக் கூறிய பின் திருநகர்ச் சிறப்பில் மனுநீதிச் சோழனைப் பாடியுள்ளார். அவனுக்கு ஒருமகன் தோன்றினான். எல்லாக் கலைகளிலும் சிறந்து விளங்கினான். ஒருநாள் வீதிவிடங்கனாகிய இளவரசன் அரசர் தெருவில் சேனைகள் சூழத்தேரோட்டிச் சென்றான். இளைய பசுக்கன்று ஒன்று தேர்க்காலின் இடையே புகுந்து உயிர் நீத்தது. இளவரசன் கீழே வந்து பார்த்து வருந்தினான். பிராயச்சித்தம் செய்ய அந்தணர்களை நாடிச் சென்றான். தாய்ப்பசு அரண்மனைக்கு வந்து தன்கொம்பினால் ஆராய்ச்சி மணியை அடித்தது.

மன்னன் செய்தியறிந்து அமைச்சர்களை அழைத்தான். பசுவதைக்கு வேத நெறிப்படி பிராயச் சித்தம் செய்யலாம் என்று அமைச்சர்களை அழைத்தான். பசுவதைக்கு வேத நெறிப்படி பிராயச் சித்தம் செய்யலாம் என்று அமைச்சர்கள் கூறினர். பிராயச்சித்தம் செய்தால் தாய்ப்பசுவின் துன்பம் நீங்காது. தாய்ப்பசுவைப் போல நான் துன்பம் அடைய மகனைத் தேர்க் காலிற் கொல்வதே சிறந்தது என்றான் மன்னன். அமைச்சர்கள் அவ்வாறு செய்ய அஞ்சி உயிர்நீத்தனர். தன்குலத்திற்கு ஒரே மைந்தன் உள்ளான் என்பதையும் எண்ணாமல் தருமத்தின் வழிச் செல்வதே கடமை என்று நினைத்து புதல்வன் மார்பில் தேர்ச்சக்கரம் ஏறிச் செல்லுமாறு தேரைச் செலுத்தினான். இறைவன் அம்மையுடன் விடையின்மீது தோன்றிக் காட்சி கொடுத்தார். பசுக்கன்றும், அமைச்சரும், இளவரசனும் உயிர் பெற்று உடன் எழுந்தனர்.

திருக்கூட்டச் சிறப்பு என்ற அடுத்த பகுதியில் தொண்டர் பெருமைகளைப் பாடியுள்ளார் சேக்கிழார் பெருமான். தேவாசிரியன் மண்டபத்தில் அடியார்கள் வீற்றிருந்தனர். உடம்பின் மீது பூசும் நீறு போல் உள்ளத்திலும் புனிதர்கள். **மாதொரு பாகனார் மலரடியை மறவாதவர்கள். ஆரம் உருத்திராக்கக்கண்டிகை, உடுத்தும் ஆடைகந்தை, மோட்சத்தையும் விரும்பாதவர்கள்.**

திருச்சிற்றம்பலம்

தடுத்தாட்கொண்ட புராணம்

திருத்தொண்டர் புராணத்தின் காப்பியத்தலைவர் நம்பியாரூராகிய சுந்தரமூர்த்தி நாயனார். திருநாவலூரில் சடையனார்க்கும் இசைஞானியார்க்கும் மகனாகத் தோன்றியவர் நம்பியாரூரர். திருமுனைப் பாடி நாட்டையாண்ட நரசிங்கமுனையரையர் நம்பியாரூரரின் அழகில் ஈடுபட்டு வளர்ப்பு மகனாகக் கொண்டார். திருமணப்பருவம் வந்ததும் புத்தூரில் வாழ்ந்த சடங்கவி சிவாச்சாரியாருடைய மகளைப் பேசி முடித்தனர். புத்தூரில் திருமணம் நடைபெறும் போது முதியவேதியர் ஒருவர் தோன்றி மணமகன் தனக்கு அடிமை என்றார். திருமணம் நின்றது, மணமகனாகிய நம்பியாரூரரும், வழக்கிட்ட வேதியரும், பிறரும் திருவெண்ணெய் நல்லூர் அவைக்குச் சென்றனர். அவையில் நம்பியாரூரர் அடிமை என்பதை ஆவணங் காட்டி நிறுவினார். முதுவேதியர் இருக்கும் இடத்தைக் காட்டுமாறு கூறத் திருக்கோயிலுட் சென்று மறைந்தார். நம்பியாரரூர் காணக் காட்சி கொடுத்துத் தம்மைப் பாடுமாறு கூறினார். பாடுவதையே தொழிலாகக் கொண்டார். திருநாவலூர், திருத்துறையூர் வணங்கிச் சித்த வடமடத்தில் தங்கினார். அங்கு இறைவன் திருவடி தீக்கை பெற்றார். திருமாணிகுழி, திருத்தினை நகர் முதலிய தலங்களை வழிபட்டுத் தில்லையடைந்தார். கூத்தப் பெருமானை வழிபட்டார். திருவாரூர்க்கு வருக! என்ற திருக்குறிப்புத் தோன்றிற்று. திருஞானசம்பந்தரின் சீர்காழியை மிதிக்க அஞ்சிப் புறவழியில் செல்லும் போது இறைவன் காட்சிகொடுத்தார். திருக்கோலக்கா, திருப்புகலூர் முதலிய தலங்களை வணங்கித் திருவாரூரை நெருங்கினார். எந்தையிருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ என்று பாடிக் கொண்டே திருவாரூர்ப் புற்றிடங்

கொண்டார் கோயிலுக்குச் சென்றார். யாம் உமக்குத் தோழரானோம், இனி நீர் மணக் கோலத்தோடே இருக்க என்ற வாக்குத் தோன்றிற்று. அன்று முதல் தம்பிரான் தோழர் என்றே அழைக்கப் பெற்றார்.

கயிலையிலிருந்த கமலினியார் திருவாரூரில் உருத்திர கணிகையார் குலத்தில் தோன்றிப் பரவையார் என்ற பெயருடன் புற்றிடம் கொண்ட பெருமானை வழிபட்டு வந்தார். ஒருநாள் நம்பியாரூரர் பரவையாரைக் கோயிலில் கண்டார். பரவையாரும் நம்பியாரூரரைக் கண்டார். இருவர் உள்ளமும் காதலால் ஒன்றின. இறைவனை வேண்டி அவரருளால் அனைவரும் அறியப் பரவையாரைத் திருமணம் செய்து கொண்டார்.

மற்றொருநாள் இறைவனை வழிபடப் புற்றிடங்கொண்ட கோயிலுக்குள் சென்றார் நம்பியாரூரர். பக்கத்தில் உள்ள தேவாசிரியன் மண்டபத்தில் அடியார்கள் கூட்டமாக அமர்ந்திருந்தனர். நம்பியாரூரர் அடியார்கூட்டத்தை வணங்காமல் உள்ளே செல்வதை உணர்ந்த விறல்மிண்டர், நம்பியாரூரர் அடியாரைப் பேணாமல் செல்லும் நம்பியாரூரர் நமக்குப் புறம்பு, அவனை ஆட்கொண்ட சிவபெருமானும் புறம்பு என்றார். உள்ளே சென்ற நாயனார் இவர்கட்கு அடியன் ஆதல் வேண்டும் என்று வழிபட்டார்.

அடியார் பெருமைக்கு அளவில்லை, பெருமையால் அவர்கள் தம்மையே ஒப்பர். இடையறாது வேண்டுவதால் எம்மைப் பெற்றார், ஒருமையாம் உணர்வால் உலகை வெல்வார், ஊனம் ஒன்றும் இல்லாதவர் அவரை நீ சென்று அடைந்து பாடுவாயாக! என்று இறைவன் திருவருள் செய்தார். எவ்வாறு பாடுவது என்றார் நம்பியாரூரர். தில்லை வாழ் அந்தணர் தம்

அடியார்க்கும் அடியேன் என்று அடியெடுத்துக் கொடுத்தார். நம்பியாரூரர் பாடிக்கொண்டே தேவாசிரிய மண்டபம் நோக்கிச் சென்றார். கூட்டத்தினரைத் தூரத்தே பார்க்கும் போதே பலமுறை தொழுது வணங்கினார். பக்கத்தே சென்று நின்றார். ஒவ்வொருவர் திருப்பெயரையும் சொல்லி இவர்க்கடியேன் என்று திருத்தொண்டத்தொகையை விருப்பமுடன் பாடி வணங்கினார்.

திருத்தொண்டத் தொகையில் கூறப் பெறும் நாயன்மார்களைத் தில்லை வாழந்தணர் முதலாக இசைஞானியார் இறுதியாக வரிசைப் படுத்திச் சேக்கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணத்தைப் பாடியுள்ளார். அதே முறையில் இந்நூலிலும் அடியார் படங்களும் செய்திச் சுருக்கமும் தரப் பெற்றுள்ளன.

திருச்சிற்றம்பலம்

திருக்கூட்டச் சிறப்பு

பூத நாயகர் புற்று இடம் கொண்டவர்
ஆதி தேவர் அமர்ந்த பூங் கோயிலில்
சோதி மாமணி நீள்சுடர் முன்றில் சூழ்
மூது எயில் திரு வாயில் முன் ஆயது.

பூ வார் திசைமுகன் இந்திரன் பூமிசை
மாவாழ் அகலத்து மால்முதல் வானவர்
ஓவாது எவரும் நிறைந்து உறைந்துள்ளது
தேவா சிரியன் எனும்திருக் காவணம்.

அரந்தை தீர்க்கும் அடியவர் மேனிமேல்
நிரந்த நீற்றுஒளியால், நிறை தூய்மையால்
புரந்த அஞ்செழுத்து ஓசை பொலிதலால்
பரந்த ஆயிரம் பாற்கடல் போல்வது.

அகில காரணர் தாள் பணிவார்கள் தாம்
அகில லோகமும் ஆளற்கு உரியர் என்று
அகில லோகத்து உளார்கள் அடைதலின்
அகில லோகமும் போல்வது. அதன் இடை

அத்தர் வேண்டிமுன் ஆண்டவர். அன்பினால்
மெய்த் தழைந்து விதிர்ப்பு உறு சிந்தையார்;
கைத்திருத் தொண்டு செய்கடப் பாட்டினார்;
இத்திறத்தவர் அன்றியும் எண்ணிலார்.

மாசு இலாத மணிதிகழ் மேனிமேல்
பூசும் நீறுபோல் உள்ளும் புனிதர்கள்;
தேசினால் எத்திசையும் விளக்கினார்;
பேச ஒண்ணாப் பெருமை பிறங்கினார்;

பூதம் ஐந்தும் நிலையில் கலங்கினும்
மாதுஓர் பாகர் மலர்த் தாள் மறப்புஇலார்;
ஓது காதல் உறைப்பின் நெறி நின்றார்;
கோது இலாத குணப்பெருங் குன்றுஅனார்;

கேடும் ஆக்கமும் கெட்ட திருவினார்;
ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்;
கூடும் அன்பினில் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலின் விளங்கினார்;

ஆரம் கண்டிகை ஆடையும் கந்தையே
பாரம் ஈசன் பணிஅலது ஒன்றுஇலார்;
ஈர அன்பினர்; யாதும் குறைவு இலார்
வீரம் என்னால் விளம்பும் தகையதோ?

வேண்டுமாறு விருப்பு உறும் வேடத்தார்;
தாண்டவப் பெருமான் தனித் தொண்டர்கள்;
நீண்ட தொல் புகழார் தம் நிலைமையை
ஈண்டு வாழ்த்துகேன்; என் அறிந்து ஏத்துகேன்?

இந்த மாதவர் கூட்டத்தை எம்பிரான்
அந்தம் இல்புகழ் ஆலால சுந்தரன்
சுந்தரத் திருத்தொண்டத் தொகைத்தமிழ்
வந்து பாடிய வண்ணம் உரைசெய்வோம்.

1. சிவபுராணம்

(திருப்பெருந்துறையில் அருளியது)

சிவனது அநாதி முறைமையான பழமை

(கலிவெண்பா)

(திருப்பெருந்துறையில், குருந்த மரத்தின் அடியில், குருபரனாகச் சிவபெருமான் எழுந்தருளினான். திருவாதவூரருக்குச் சிவஞானமாகிற மெய்ப்பொருளை உணர்த்தினான். அவரைத் தன் அடியவராக்கி உய்வித்தான். அந்த அருளினைப் போற்றுவாராக அடிகள் அருளிச் செய்தது இது. சிவனைப் பற்றிய பழைமையான வரலாறுகளை உரைத்து அவனைப் போற்றுவது)

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க! நாதன்தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க!
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடிபோற்றி
நேயத்தை நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி

ஆராத இன்பம் அருளும் மலைபோற்றி
சிவன்அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழில்ஆர் கழல்இறைஞ்சி
விண்நிறைந்து மண்நிறைந்து மிக்காய் விளங்குஒளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரம்ஆகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பு ஆகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்அடிகள் கண்டுஇன்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
“ஐயா” எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்ஆயின எல்லாம் போய்அகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப்பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்அறிவே

ஆக்கம் அளவுஇறுதி இல்லாய் அனைத்துஉலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தஅடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்புஅறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள்ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்துஎங்கும் புழுஅழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்து உள்உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றுஅறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்இருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுஆகி அல்லானே
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுஉணர்வார்
தங்கருத்தின்

நோக்குஅரிய நோக்கே நுணுக்கரிய நுண்உணர்வே
போக்கும் வரவும் புணர்வும்இலாப் புண்ணியனே
காக்கும்எம் காவலனே காண்பரிய பேர்ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய்ச் சொல்லாத நுண்உணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என்சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்றுஎன்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டுஅழிக்க வல்லானே
நள்இருளில் நட்டம் பயின்றுஆடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

அண்ணல் அடியெடுத்துக் கொடுத்தது – உலகெலாம்.

உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்
நிலவுலா விய நீர் மலி வே ணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவோம்.

சோதி முத்தின் சிவிகைசூழ் வந்துபார்
மீது தாழ்ந்து வெண்ணீற்று ஒளிபோற்றி நின்று
ஆதியார் அருள் ஆதலில் அஞ்செழுத்து
ஓதி ஏறினார் உய்ய உலகெலாம்.

என்றும் இன்பம் பெருகும் இயல்பினால்
ஒன்று காதலித்து உள்ளமும் ஓங்கிட
மன்றுளார் அடியார் அவர் வான்புகழ்
நின்றது எங்கும் நிலவி உலகெலாம்.

வாழ்த்து

வையம் நீடுக மாமழை மன்னுக !
மெய்வி ரும்பிய அன்பர் விளங்குக !
சைவ நன்னெறி தாம்தழைத் தோங்குக !
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே !

திருச்சிற்றம்பலம்

நாட்டுக்கோட்டை நகரத்தார் சிறப்பு!

சிட்டுக்குருவி, சிற்றெறும்பு போல் பொருள் சேர்க்கும் நகரத்தார்
காட்டிய வழியில் உழைத்தால் வீடு உயரும் ! நாடு உயரும் !!
வட்டங்கள் சதுரங்கள் எதிலும் அடங்காது
செட்டிநாட்டு நகரத்தார் செய்த திருப்பணிகள் !
கேட்டுப் பிறப்பேன் ஈசனிடத்தில் இன்னும் ஒரு பிறவிஇருந்தால்
நாட்டுக்கோட்டை நகரத்தார் சமூகத்தில் பிறந்து
விட்டுப்போன ஆன்மீகப்பணி, தமிழ்ப்பணி தொடர ...


- டால்ஃபின் AR. ராமநாதன்
டால்ஃபின் பள்ளி மதுரை

* வாழ்க்கைத் தத்துவம் *

நல்லாவின் பால்முழுதும் கன்றுக்கில்லை
நறும்பூவின் மணம் முழுதும் சோலைக்கில்லை
நெல்லாகும் கதிர்முழுதும் நிலத்துக்கில்லை
நிறைகின்ற நீர்முழுதும் குளத்துக்கில்லை
பல்லாரும் கனிமுழுதும் மரத்துக்கில்லை
பண்ணரம்பின் இசைமுழுதும் யாழுக்கில்லை
எல்லாமே பிறர்க்குழைக்கக் காணுகின்றேன்
என்வாழ்வும் பிறர்க்குழைக்க வேண்டும்! வேண்டும்!

நன்றி : டாக்டர் வ.சுப. மாணிக்கம்

திருச்சிற்றம்பலம்



வரம் தரும் வள்ளல்

ரிஷபாரூடர் திருவடிகளே சரணம் !

அச்சிட்டோர் : தி கிளாஸிக் பிரிண்டர்ஸ் மதுரை போன் 0452 - 2323819

உ

ஸ்ரீ மந்திர ... துணை

ஓம் சிவாய நம :

தேவகோட்டை அரு.லெ.வீடு டால்ஃபின் ராமனாதனின்



ஐயா SV.RM.AR. ராமனாதன் செட்டியார்



அப்பத்தா
RM. விசாலாட்சி ஆச்சி



ஆயா வீட்டு ஐயா பெ. வீடு வீரப்ப சுவாமிகள்



தந்தை
AR.RM.AR. அருணாச்சலம் செட்டியார்



பெரிய தாயார்
AR. சௌந்தரம் ஆச்சி

இவர்களின் நல்லாசிகளுடன் இந்த இலவச பக்தி மலரை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.

இவண்



AR. ராமனாதன்


ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்.

நல்லாசியுடன்
AR. [illegible]
23.4.2010

மதுரை
23.4.2010



AR. மீனாட்சி ஆச்சி
AR. ராமனாதனின் தாயார்



தேவகோட்டை

அரு. ராமனாதனின் தந்தை

தெய்வத்திரு. அரு. ராம. அரு. அருணாச்சலம் செட்டியார்

மற்றும் பெரிய தாயார் அரு. சௌந்தரம் ஆச்சி

அவர்களின் நல்லாசிகளுடன் ...

மதுரை டால்ஃபின் பள்ளி

கல்விப் பணியில்... 26ம் ஆண்டு

Dolphin Public School

இறைப் பணியில்...

தேவகோட்டை டால்ஃபின் AR. ராமனாதன்
(அரு.லெ. வீடு)

தாளாளர், டால்ஃபின் பள்ளி, மதுரை - 10
Phone : 93451 69639, 99439 25200, 0452 - 2387787
Email : dolphinschool2009@yahoo.in Web : www.devakottaidolphinramanathan.com

Dolphin Public School



AR. ராமனாதன்

மதுரை
23.4.2010

நல்லாசியுடன்
23.4.2010



AR. மீனாட்சி ஆச்சி
AR. ராமனாதனின் தாயார்